# இலக்கணச் சிந்தனைகள்

# இலக்கணச் சிந்தனைகள்

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் 1926 - 36
சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ்-ஆராய்ச்சித்துறைத் தலைவர் 1936-46
திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் 1951 - 54

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

பாரி நிலையம்
59, பிராட்வே - சென்னை 1.

Univ. Grants Commission.

முதற் பதிப்பு: மார்ச்சு 1956

விலை ரூபாய் இரண்டு

நவபாரத் பிரஸ், 30 ஜோன்ஸ் தெரு, சென்னை-1

# பதிப்புரை

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் இலக்கிய இலக்கணங்களில் இளமை முதலே ஈடுபட்டுக் கற்று வந்தவர்கள் என்பது அவர்களது ஆராய்ச்சியுரைகளால் யாவரும் அறிந்த உண்மை. இலக்கணம் பற்றி அவர்கள் எழுதிய கட்டுரைகள் மிகச் சிலவே. இத் தொகுதியில் அமைந்துள்ள பத்துக் கட்டுரைகளும் பலவேறு காலங்களில் எழுதப்பட்டவை.

முதற் கட்டுரையாகிய பாணினீயம் திருவனந்தபுரத்தில் அவர்கள் வக்கீல் தொழில் புரிந்த காலத்தில் எழுதியது; 'பாணினீய இலகு தீபிகை' என்ற பெயரில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்து வெளி வரும் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியானது. பாணீனிய இலக்கணம் பற்றிய ஒரு முன்னுரையாக இக்கட்டுரை அமைந்துள்ளது. அதற்கு அடுத்த 'வடமொழியும் தமிழும்' என்ற கட்டுரையும் மேற் கூறிய கட்டுரையைத் தொடர்ந்து செந்தமிழில் வெளி வந்ததே. இதில் வடமொழிக்கும் தமிழுக்கும் உரிய தொடர்புகளை ஆராய்ந்து வடமொழியைத் தமிழ்மொழியின் செவிலித்தாய் என்று பல காரணங்கள் காட்டி ஆராய்ந்துள்ளார்.

'தொல்காப்பியரும் மொழிவளர்ச்சியும்' என்பது பற்றிய ஐந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடுத்து அமைந்துள்ளன. இதன் பின் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள சில இலக்கண வழக்குக்கள் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது. 'அண்மை விளி' பற்றியும், 'உறுப்புச் செய்யுள்' பற்றியும் அடுத்த இரண்டு

கட்டுரைகளில் ஆராய்கிருர். இதன் பின், 'திராவிட மொழி ஆராய்ச்சி' என்ற கட்டுரை அமைந்துள்ளது.

வரலாற்றுமுறை இலக்கணம், தருக்கமும் இலக்கணமும் முதலிய பொருள்களைப் பற்றி விரிவாக எழுதி அமைக்க எண்ணியதால், இந்நூலின் அச்சு வேலை சிறிது காலம் இடையறவுபட்டு நின்றது. சமீப காலத்தில் தினமணிக் கதிரில் இலக்கணம் பற்றி எழுதிய கட்டுரைகளில் மேற்குறித்த பொருள்கள் குறித்து எழுதி வந்தார். பேராசிரியர் அவர்களது விருப்பப்படியே அக்கட்டுரைகளை உடன் இணைத்து இந்நூல் பூர்த்தி செய்யப்பட்டது. 'புதிய இலக்கண முறை' என்பது பற்றிப் பேராசிரியர் எழுதிய கட்டுரை தமிழின் மறுமலர்ச்சி என்ற நூலில் சேர்க்கப் பெற்றதால் இந்நூலில் இடம் பெறவில்லை.

இலக்கணத் துறையில் மேலும் பற்பல நூல்கள் தோன்றுவதற்கு இத்தொகுதி ஒரு வழிகாட்டியாய் அமைந்துள்ளது. இக்கட்டுரைகள் எல்லாம் இலக்கண வரலாற்றை ஆராய்பவருக்கும், மொழியின் இயல்பைத் தெரிந்து கொள்ளுவோர்க்கும், இலக்கணத் துறையில் உழைப்பவருக்கும் பெரிதும் பயன்படும் என நம்புகிருேம்.

இத்தொகுதி வெளி வருவதற்குப் பேராசிரியர் அவர்களோடு உடன் இருந்து பெரிதும் உதவிய திரு. வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு எமது நிலையத்தின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம். இதனை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய நவபாரத் அச்சகத்தார்க்கும் எமது நன்றி உரித்தாகுக.

சென்னை
20-3-56

பாரி நிலயத்தார்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | பாணினீயம் | 1 |
| 2. | வடமொழியும் தமிழும் | 19 |
| 3. | தொல்காப்பியரும் மொழி வளர்ச்சியும் | 37 |
| 4. | சிலப்பதிகாரத்தில் சில இலக்கண வழக்குக்கள் | 72 |
| 5. | அண்மை விளி | 81 |
| 6. | உறுப்புச் செய்யுள் | 94 |
| 7. | திராவிட மொழி ஆராய்ச்சி | 100 |
| 8. | பலவகை இலக்கணங்களின் அவசியம் | 114 |
| 9. | வரலாற்று இலக்கணம் | 121 |
| 10. | தத்துவ சாஸ்திரமும் இலக்கணமும் | 126 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# இலக்கணச் சிந்தனைகள்

## 1. பாணினீயம் *

ஸம்ஸ்கிருத பாஷையை 'வடமொழி', 'தேவபாஷை' 'ஆரியம்' எனப் பலவாறாகத் தமிழுலகிற் பெயரிட்டழைப் பர். இம்மொழி இப்பொழுது வழக்குவீழ்ந்து போயிற்றெனி னும், நமது இந்தியா தேசத்தில் வழங்கிவரும் மொழிகள் அனைத்திற்கும் 'தாய்' எனத்தகும் உரிமைபூண்டு அவற்றை நாளதுவரை வளர்த்துவருகிறதென்னும் உண்மை நடுவு நிலை குன்றாதார் யார்க்கும் தெள்ளிதிற் புலப் படும். தமிழ் மொழியும் மேலதற்கோர் விலக் கன்று. ஆனால் இம்மொழிக்குச் 'செவிலித் தாய்' என வடமொழியைக் கூறுதலே பொருந்துவதாகும். அறிஞர்கள் பலர்க்கும் இதுவே அங்கீகாரமாம். இக்காலத்து ஸ்ரீமான் R. சுவாமிநாத ஐயர வர்கள் போன்ற கல்வியாளர்கள் சிலர் தமிழுக்கு 'நற்றாய்' வடமொழியென ஸ்தாபிக்கப் பெரிதும் முயன்று வருகிறார் கள். இவர்கள் கூறும் நியாயங்களைப் பாஷாசாஸ்த்ர விற் பந்நர்கள் ஆராய்ச்சி செய்து அறுதியான ஒரு முடி புக்கு வரும்வரை, பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கையைக் கைவிடுதல் உசிதமன்று.

**வடமொழி தமிழின் செவிலித்தாய்**

---

* இது திருவனந்தபுரம் ஜி. ஹரிஹர சாஸ்திரியார் உதவி பெற் றெழுதியது. 'பாணினீய லகுதீபிகை' என்ற பெயரில் முன்னர்ச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தது.

வடமொழியைத் தமிழணங்கின் 'செவிலித்தாய்'
எனக் கூறுதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன.
முதலாவதாக, நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலுமாகத்
தமிழிலுள்ள சொற்களில் ஒரு பெரும் பகுதி வடமொழிப்
பதங்களாம். நமது மொழியில் இவ்வாறு வட சொல்
புகத்தொடங்கியது இன்று நேற்றன்று. [1]'எக்காலத்து
முதன் முதல் தமிழ்நூல்கள் தோன்றத் தொடங்கினவோ
அக்காலத்துத்தானே வடசொற்களும் தமி
காரணங்கள் ழிற் பயின்றுவந்திருக்கின்றன. இதுபற்றியே
'இலக்கணக்கொத்து' இயற்றிய ஸ்ரீ சுவாமி
நாத தேசிகரும் 'அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்
றுள் ஒன்றே யாயினுந் தனித்தமிழுண்டோ?' என வினவு
வாராயினர். ஆனால் இதனைத் தமிழிற்கோர் குறைபாடா
கக் கருதுதல் தவறு; தமிழ் மக்களது அறிவுவளர்ச்சி
காரணமாகவும் நாகரிக முதிர்ச்சி காரணமாகவும் 'சொற்
கடன்' ஏற்பட்டுளதென்பதை நாம் மறந்துவிடலாகாது.
இரண்டாவதாக, நூற்குரிய விஷயங்களெனத் தமிழில்
எடுத்தாளப்பட்டவற்றுள், பெரும்பாலன வட மொழி
யிலுள்ள நூல்விஷயங்களாம். இதற்கு எடுத்துக்காட்டுக்
களாகத் திருவள்ளுவரது திருக்குறளினையும் கம்பநாடரது
இராமாயணத்தையும் கூறுதல் தகும். 'இவர் (திருவள்ளு
வர்) பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென
வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான்' எனவும், 'அறமா
வது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்
கியன ஒழிதலுமாம்' எனவும், 'தேவர்க்கும் அசுரர்க்கும்
அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகள் துணிபு தொகுத்
துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமை
யின்' எனவும், 'ஈண்டுப் பிரிவினை வடநூல்மதம்பற்றிச்
செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவியென நால்வகைத்

தர்க்கிக் கூறினர்' எனவும் திருக்குறளுக்கு உரையிட்ட பரிமேலழகர் வரைந்திருக்கின்றார். கம்பநாடரும்,

> வாங்கரும் பாதம் நான்கும்
> வகுத்தவான் மீகி என்பான்
> தீங்கவி செவிக ளாரத்
> தேவரும் பருகச் செய்தான்;
> ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
> அன்பெனும் நறவம் மாந்தி
> மூங்கையான் பேச லுற்றான்
> என்னயான் மொழிய லுற்றேன்.

என்று கூறினர். மூன்றாவதாக, நூல்விஷயமே யன்றிச் செய்யுட்குரிய கவிமரபு முதலியவற்றை நோக்கினும் இருமொழிகளும் பெரும்பாலும் ஒத்தியல்கின்றன. இவ்வாறு, நமது வடமொழியுணர்ச்சி பெருகப் பெருக இருமொழிக்குமுரிய தொடர்பும் பலவகையாலும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. ஸம்ஸ்கிருத மொழியோடு சமமாக நிற்கக் கூடிய அளவில், தமிழை வளம்படுத்த வேண்டுமென்ற பேரவா தமிழ் நாட்டில் வேரூன்றி நின்றதென்பது பல வாயில்களாலும் வெளிப்படுகின்றது. ['ஆரியத்தோ டுறழ்தரு தமிழ்த்தெய்வம்' என்றும், 'இரு மொழியும் நிகரென்னுமிதற்கையமுளதேயோ' என்றும் வருவன மேற் கூறியதனை வற்புறுத்துகின்றன.] ஈண்டு எழுதியவற்றை நோக்கும்போது வடமொழி தமிழுக்குச் செவிலித்தாயாக நின்றதென்பதில் வியப்பொன்றும் இல்லை.

**தமிழ்-இலக்கணமும் வடமொழி வியாகரணமும்**

மொழியின்வரம்பினை வகுத்துக்கூறும் இலக்கண விஷயத்திலும் வடமொழிக்கு நமது மொழி பெரிதுங் கடமைப்பட்டிருக்கின்றது. தமிழுக்கு ஆதியிலக்கணம் அகத்திய முனிவராற் செய்யப்பட்ட அகத்தியம் என்றும், இதற்குப்பின் தோன்றியது தொல்காப்பியராற் செய்யப்பட்ட தொல்காப்பியம் என்றுங் கூறுவர். இவையிரண்டற்கும் முறையே

பாணினீயமும் ஐந்திரமும் முதனூலாமென்பர் பிரயோக விவேகநூலார். இவரது கருத்தொடு சிறிது முரணி,

**விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்**
**வடமொழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்**
**திடமுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்**

எனவும்,

**வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி**
**[யதற்கிணையாத்**
**தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந்**
**[தொழுதேத்துங்**
**குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்**

எனவும் இலக்கிய இலக்கணத் துறை முற்றிய இருவர் கூறியிருக்கின்றார்கள். வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கள் கடப்பட்டுள்ளனவென்பது மேற் குறிக்கப்பட்டோர் அனைவர்க்கும் அங்கீகாரமாம். இது கர்ண பரம்பரைக் கட்டுக்கதையுமன்று. நூலாராய்ச்சி செய்து உண்மை நோக்குமிடத்தும் இக்கடப்பாடு யதார்த்தமே யென்பது விளங்கும். உதாரணமாக இரண்டொன்று காட்டுதல் மிகையாகாது. பாணினி முனிவரியற்றிய ஶிக்ஷையில் 'அஷ்டௌ ஸ்தாநாநி வர்ணாநாம் உர: கண்ட: ஶிர: ததா-ஜிஹ்வாமூலம் ச தந்தாஶ் ச நாஸி கோஷ்டௌ ச தாலு ச' என்பது காணப்படுகின்றது. இதனோடொப்ப எழுத்ததிகாரத்திற் பிறப்பியலில்,

**...தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**
**உறுப்புற் றமைய நெறிப்பட நாடி**
**எல்லா வெழுத்தும் சொல்லுங் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல**
**திறப்படத் தெரியுங் காட்சி யான**

எனத் தொல்காப்பியர் சூத்திரமியற்றினர். 'ஸுப்திஙந்தம் பதம்' என்பது பாணினீயம். இதற்கேற்பத் தொல்காப்பியரும்,

**சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே**

என்று கூறியிருக்கின்றனர்.

இங்ஙனமாக நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. திராவிட மகாபாஷ்ய கர்த்தராகிய ஸ்ரீ சிவஞான சுவாமிகளும் 'வடமொழி யுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' எனத் தமது 'முதற் சூத்திர விருத்தி'யிற் கூறினர். ஆகவே வடமொழியுணர்ச்சி தமிழ் கற்றூர்க்கெல்லாம் இன்றியமையாததாயிருக்கின்றது.

**வடமொழி-உணர்ச்சி அவசியம்**

ஆயினும், பற்பல காரணச்செறிவால், தமிழ் மக்களிடையே வடமொழி யுணர்ச்சி குன்றிக்கொண்டே வருகிறது. இதற்கு வடமொழியை யெளிதிற் கற்றுக்கொள்ளுதற்குத் தக்கபடி தமிழில் இலக்கணம் முதலிய கருவி நூல் இல்லாமையொரு முக்கிய காரணமெனத் தோன்றுகிறது. பேச்சு வழக்கிலிருக்கும் பாஷைகளை இலக்கணவுதவியின்றியே நாம் கற்றுக்கொள்ளுதல் கூடும்; வழக்குவீழ்ந்த பாஷைகளை இலக்கணவாயிலாகவன்றிப் பிறவாறு உணர்தல் சாத்தியமாகாது. இக்கருத்திற்கிசைய வடமொழி யிலக்கணமொன்று தமிழில் எழுதல் நலமாம். உலகத்திலுள்ள இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவதாகப் பாணினீயம் கணிக்கப்படுகின்றது. அதன் வரலாற்றினை ஓரளவு உணர்ந்துகொள்ள முயலுவோம்.

**வடமொழி-உணர்ச்சி குன்றி வருதல்**

பாணினி யாசிரியரைக் குறித்துச் சிறியதொரு வரலாறு கூறப்பட்டு வருகின்றது. பூர்வத்தில் **'வர்ஷர்'** என்றொரு ஆசாரியர் இருந்தார். அவர்பால் கல்வி பயின்றுகொண்டிருந்த அநேக சிஷ்யர்களுள், **'பாணினி'** என்ற பெயருடைய ஒரு சிஷ்யரும் இருந்தனர். இவர் பிறந்த இடம் **ஸாலாதுரம்** என்னும் நகரமாகும். இவரது தாயார் தாக்ஷி யென்ற பெயருடையாள். இந்தச் சிஷ்யர் மிகவும் மந்தபுத்தி; ஆனால், கல்விமீது அளவுகடந்த ஆசையுடையவர். தமது ஆசிரிருக்கு எவ்வளவோ சுச்ருஷைகள் செய்தும் அவற்றால் இவர் ஒரு பயனும் எய்தவில்லை. கடைசியில் இவருடைய ஆசாரிய பத்தினி இவரை வெளியே போய்விடும்படி கட்டளையிட நேர்ந்தது. பின்னர் வித்தியாவிருப்பத்தால் மனம் நலிவுற்று வருந்திய பாணினி ஹிமாலயத்திற்குச் சென்று அங்கே ஈஸ்வரனை நோக்கிக் கடுந்தவஞ் செய்தார். சந்திரசேகரப்பெருமானும் பாணினியின் தவத்திற்கு உவந்து எல்லா வித்தைகட்கும் ஆதாரமாகிய வியாகரணத்தை அவருக்கு உபதேசித்தருளினார். இங்ஙனம் வித்தைகளனைத்தையும் பெற்றுக்கொண்ட பின்னர், பாணினி தம்முடன் ஒரு சாலை மாணுக்கராகிய காத்தியாயனரோடு **வா**தம் நிகழ்த்தலாயினர். அது தொடங்கி ஏழுநாளாகியும் முடிவு பெறவில்லை. **எட்டாவது** நாளன்று பாணினி வெற்றி யெய்தினர். அப்பொழுது சம்புமூர்த்தி ஆகாயத்தில் தோன்றி 'இவரால் (பாணினியால்) ஐந்திர வியாகரணத்திற்குப் புவியில் அழிவுண்டாயிற்று' எனக் கூறி அந்தர்த்தானமாயினர். அன்று முதல் பாணினீயத்திற்குப் பிரசார மேற்பட்டதென்பர்.

**பாணினி வரலாறு**

இவ்வரலாறு எவ்வளவு காலத்திற்கு முன்புதொட்டுள்ளது என்று திட்டமாய் நிச்சயிக்கப்படவில்லை. ஆனால், கி. பி. 12-ம் நூற்றாண்டில் ஸோமதேவ பட்டரால் எதழுப்

பட்ட **கதாஸரித் ஸாகரத்திலும்,** அதற்கு முதனூலாகிய **பிருஹத்கதாமஞ்சரியிலும்,** இது காணப்படுகிறது. மேலும் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிற்கு வந்த **ஹ்யூன்த்ஸாங்** என்ற சீனயாத்திரிகரும் மேற்கூறியது போன்றதொரு கதையை யெடுத்துச் சொல்லுகின்றனர். ஆகவே கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந் தேனும் மேற்கூறிய வரலாறு வழங்கிவருகிறதென்பது நாம் இங்கு அறிதற்குரியது.

பாணினியாசிரியர் பக்கல் நம்மவர்களுக்குள்ள நன்கு மதிப்பினையும் பக்தியினையும் மட்டுமே இக்கதை தெரிப்ப தாக நாம் கொள்ளுதல் வேண்டும். அவர் மந்தபுத்தியா யிருந்தாரெனக் கூறுதல் தவறென்பதற்கு அவரியற்றி யருளிய பேரிலக்கணமே போதிய சான்றாகும். உலகத்தில் அறிவானும் கல்வியானும் அழியாப்புகழ் நிறுத்திய பெரி யோர்கள் அவர்களது இளமைப் பிராயத்தில் மூடர்களாயும் மந்தர்களாயும் இருந்தார்களெனச் சொல்லுதல் பெருவழக் காக இருந்திருக்கிறது. உதாரணமாக, காளிதாஸ மகா கவியின் வரலாற்றினைக் காண்க. இதுபோன்ற கூற்றுக் களெல்லாம் கதையழகிற்குவேண்டும் கற்பனைகளேயாம். ஆனால் இக்கதையில் இரண்டொன்றேனும் உண்மை யில்லாமற் போகவில்லை. பாணினி தம் காலத்துள்ள வட மொழி இலக்கிய இலக்கணங்களிற் பரிபூர்ண பாண்டித்யம் உடையராயிருந்தாரென்பது யாவராலும் மறுக்கற்பால தன்று. ஆனால் அவரது பாஷாபரிஜ்ஞான மொன்றே இங்கு எடுத்துக்கூறும் இயைபுடையது.

**வடமொழியின் இரு பிரிவு**

பாணினியார் காலத்தும், தற்காலத்தோடொப்ப, ஸம்ஸ்கிருத மொழி இரண்டு பெரும்பிரிவாகக் கிடந்தது. இந்து சமயங்க ளனைத்திற்கும் ஆதாரமாயிருக்கிற வேதத் தைப்பற்றி யறியாதார் நமது நாட்டில் யாரு மிரார் என்பது திண்ணம். அவ்வேதம் வட

மொழியா லியன்றுள்ளது. எனினும், வடமொழியி லுள்ள காவ்ய நாடக அலங்காரங்களில் நன்கு பயின்ற விற்பன்னர்கள்தாமும் வேதத்தின் பொருளுணர் தற்கண் பெரிதும் இடர்ப்பட்டு மயங்குவர். வேதம் என்று குறிப்பிட்டது **மந்த்ரப்ராஹ்மணங்களை** யென்று கொள்க. இந்த இடர்ப்பாடு இருத்தற்குக் காரணம் யாதெனில் வேதத்தில் வழங்கும் ஶப்தங்களும் காவ்யாதி களில் வழங்கும் ஶப்தங்களும் தம்முட் பெரிதும் வேறு படுகின்றன. மந்த்ரங்களிலுள்ள சில ஶப்தங்களில் அவை வேறு பாஷைக்குரியனவோ என்று திகைக்கும்படி அத் துணை வேறுபாடு காணப்படுகின்றது. இது வட்மொழி யிற் கர்லக்கிரமத்தில் ஏற்பட்ட உபசய-அபசயங்கள் காரணமாக வந்ததர்கும். வேதத்தில் மட்டும் பயின்று வரும் ஶப்தங்களை **வைதிக ஶப்தங்கள்** என்றும், மற்றை இதிஹாஸம் காவிய முதலிய வடமொழி நூல்களனைத் தினும் பயின்று வரும் ஶப்தங்களை **லௌகிக ஶப்தங்கள்** என்றும் வட்மொழியாளர் கூறுவர். பாணினியாசிரியர் 'வைதிக வழக்கு' 'லௌகிக வழக்கு' என்ற இருவகை வழக்குக்களையும் நன்குணர்ந்தவராவர். ஆனல் வைதிகம் என்றதனை 'வேதம்' **'சந்தஸ்'** என்றும், லௌகிகம் என்ற தனை 'லோகம் **'பாஷை'** என்றும் இவர் தமது வியா கரணத்தில் வழங்குவர். உதாரணமாக வேதத்திற்குரிய சொல்லிலக்கண வேறுபாட்டை யுணர்த்தும் ஓரிடத்தில் 'சந்தஸிபுநர்வஸ்வோ ரேகவசநம் (I. ii. 69) என்று பாணினி சூத்திரஞ் செய்திருக்கின்ருர்.

தமிழிலும் இதுபோன்றதொரு வழக்குவேறுபாடு வியவகரிக்கப் பட்டுள்ளது. தொல்காப்பியநூற் சிறப்புப் பாயிரத்திலே 'தமிழ்கூறு நல்லுகத்து, **வழக்குஞ் செய் யுளு** மாயிரு முதலின்' என்று கூறப்பட்டிருக்கின்றது. பாணினியாசிரியர் 'சந்தஸ்' என்று வழங்கியதனே

டொப்பத் தமிழிலும் 'செய்யுள்' எனப்பட்டது. பிரயோகவிவேக வுரையிலே "வழக்காவது உலகவழக்கும் செய்யுள் வழக்குமென இருவகைப்படும். அவற்றை வட நூலார் 'லௌகிகப் பிரக்கிரியை' 'வைதிகப் பிரக்கிரியை' என்பர்" என்று சுப்பிரமணிய தீக்ஷிதரும் உரைத்துச் சென்றார். தொல்காப்பியர் இவ்வழக்கு வேறுபாட்டினை ஏறக்குறைய 35 சூத்திரங்களால் உணர்த்துகின்றார். பவணந்திமுனிவரோ எனில், தொல்காப்பியர் காட்டியவற்றுட் பெரும்பாலனவற்றை நீக்கி, விஷயத்தை மிகவுஞ் சுருக்கி 5 சூத்திரங்களாற் கூறிமுடிக்கின்றார். இங்ஙனம் சுருக்கி முடிப்பதனால் இவ்வேறுபாடு தமிழிலக்கணவுணர்ச்சிக்கு அத்துணை ஆவசியகமில்லை யென்பது நன்னூலார்க்குக் கருத்தெனின், அது பொருத்தமுடையதே யாகும். ஆனால், இருவகை வழக்குக்களும் வேறு பொருள் கொண்டன என்று தோன்றுகிறது.

**தமிழிலும் இருவகை வழக்கு**

மேற்கூறியவாறு வைதிக லௌகிக பேதத்தால் இருவகைப்பட்டதாய வடமொழியின் இலக்கணமனைத்தையும் பாணினி யாசிரியர் நன்குணர்ந்து அம்மொழிக்கு எல்லாவகையானுஞ் சிறந்த வியாகரண மொன்று செய்தருளினர். இவ்வியாகரணத்தில் ஏறக்குறைய நாலாயிரஞ் சூத்திரங்கள் உள்ளன. நூல் முழுவதும் எட்டு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. இக்காரணத்தால் '**அஷ்டாத்யாயீ**' என அந்நூற்குப் பெயர் வழங்குகின்றது. அத்தியாயங்களுள் ஒவ்வொன்றும் **நந்நான்கு பாதங்**களால் நடைபெறுகின்றது. பேரிலக்கணமாகிய இந்நூலுக்குத் தனியே **ஐந்து அங்கங்கள்** உள்ளன. அவை: (1) அக்ஷரஸமாம்நாயம் (2) ஶிக்ஷை (3) கணபாடம் (4) தாதுபாடம் (5) லிங்காநுஶாஸநம் என்பனவாம். இந்த

**பாணினீயத்தின் பொருளடக்கம்**

அங்கங்கள் பொதுமுறையில் இன்ன இயல்பின என்றறிந்து கொள்ளுதல் நலமாகும்.

(1) **அக்ஷர ஸமாம்நாயம்** :—இது வடமொழிக்குரிய எழுத்துக்களை உணர்த்துவது. ஸமாம்நாயம்=தொகுதி.

(2) **ஶிக்ஷை** :—இது எழுத்துக்களின் உச்சாரண முறையை யுணர்த்தும் இயல். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின்கண் உள்ள '**பிறப்பியல்**' இந்த அங்கத்தோடு பலபடியானும் ஒத்துநோக்குதற்கு உரியது.

(3) **கணபாடம்** :—அஷ்டாத்தியாயியில் இன்ன சொல் தொடக்கத்தன இன்னவாறாகும் என்று பல இடங்களிலும் விதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 'திகாதிப்யோ யத்' (iv. iii. 54) என்ற சூத்திரத்தை எடுத்துக்கொள்க. இதன் பொருள் : 'உளதாவது' 'தோன்றுவது' என்ற பொருளோடு தத்திதப் பெயர் பெறவேண்டியக்கால் 'திக்கு' ஆதிய சொற்களுக்கு 'ய' என்ற விகுதி வரும் என்பதாம். திஶ்யம், கண்யம், பக்ஷ்யம் முதலிய தத்திதப் பெயர்களைக் காண்க. இவ்வாறு சூத்திரஞ்செய்த வளவில் 'திகாதி' என்பதன்கண் அடங்கிய சொற்கள் இவையெல்லாமென்று உணர்த்துங் கட்டுப்பாடு ஆசிரியர்க்கு ஏற்பட்டது. அதனால் அச்சொற்களை யெல்லாம் ஒரு கணமாகப்பாணினியாசிரியர் தொகுத்துவைத்தனர். இங்ஙனமே நூலின்கண் குறிக்கப்பட்டுள்ள கணங்களுள் ஒவ்வொன்றினும் அடங்கிய சொற்களிவையென்று தெரிவிக்கும் பாடம் 'கணபாடம்' என்று பெயர் பெறும். 'உயிரீற்றன' 'மெய்யீற்றன' 'பண்புணர்த்துவன' 'பல எழுத்தின' என்றின்ன பொதுத்தன்மை யொன்றினால் முற்றும் அடக்கிக் கூறமுடியாத சொற்கள் பல ஒரே இலக்கணவிதிக்கு உட்பட்டு நிற்கும்போது அவற்றை யொருசேரத் தொகுத்துக் கணங்களாய்ப் படித்து விடுதலே தக்கதாகின்றது. ஒரு கணத்

தில் எந்தமொழி முதலாவதாகப் படிக்கப்படுகின்றதோ அந்த மொழியால் அந்தக்கணம் பெயர்பெறுவதாகும்: உதாரணமாக: ஸர்வ, விஶ்வ, உப, உபய என்று வருங் கணம் ஸர்வாதிகணமென வழங்கப்படுகின்றது.

(4) **தாதுபாடம்:**—இது வடமொழியிலுள்ள வினைப் பகுதிகளனைத்தையும் இத்துணையென்று அறுதியிட்டு அவற்றை இலக்கணநெறியாற் பத்துவகையாக வகுத் துணர்த்துவது. வினைப்பகுதிகள் வி भू, एध्, स्पर्ध्, अद् என வருவனவாகும். இப்பொழுதுள்ள தாது பாடத்தில் भूसत्तायां एधवृद्धौ எனத் தாதுவும் அதனையடுத்து அதன் பொருளும் காணப்படுகின்றன. பொருளுணர்த்தும் சொற்கள் பிற்காலத்தவரொருவரால் சேர்க்கப்பட்டன என்பர்; பாணினியாசிரியர் கூறியனவல்ல.

தாது பாடத்தை யொத்த இலக்கணப்பகுதி தமிழ் மொழிக்கு இதுவரை ஏற்படவில்லை. இங்ஙன மொன்று வேண்டுமெனத் தொல்காப்பியர் உணர்ந்திருந்தாரென்று கொள்ளுதற்குங்கூடச் சான்றில்லை. நன்னூலார் இதன் ஆவசியகத்தை யுணர்ந்திருக்கிறாரென அனுமானித்தற்கு இடமுண்டு. காலஞ்சென்ற வித்வான் அ. குமாரசுவாமிப் பிள்ளை யவர்களும், குருமலை ஸ்ரீ சுந்தரம்பிள்ளையவர்களும் இவ்வழியிற் சிறிது உழைத்திருக்கின்றார்கள். ஆனால், தமிழ்மொழியி லுள்ள வினைப்பகுதிகளையெல்லாம் முறைப் படுத்தி வகுத்துக்கூறும் நூல்[1] இனித்தான் வெளிவர வேண்டுவதாயிருக்கிறது.

(5) **லிங்காநுஶாஸநம்:**—இது வடமொழியிலுள்ள பெயர்ச் சொற்களை யெடுத்து இன்ன சொல்லுக்கு இன்ன

---

1. ஸ்ரீ. மு. இராகவையங்கார் அவர்கள் இவ்வழியிற் சிறிது முயற்சி செய்துள்ளார்கள். தமிழ் - லெக்ஸிகன் இதற்குப் பெரிதும் துணைபுரிவதாகும்.

லிங்கம் (ஆண், பெண், அலி) என்று வியவஸ்தை செய்து விதித்துக் கூறுவது. தமிழ் மொழியில் லிங்கம் பொருளின் தன்மைபற்றி ஏற்பட்டுள்ளது. உதாரணமாக 'நம்பி வந்தான்' 'நங்கை வந்தாள்' என்ற இடங்களில் 'நம்பி' 'நங்கை' என்ற சொற்கள் எப்பொருள்களை யுணர்த்துகின்றனவோ அப்பொருள்களின் தன்மை முறையே ஆண்பாலும் (புல்லிங்கம்) பெண்பாலு (ஸ்த்ரீலிங்கம்) மாயிருத்தல்பற்றி, அச் சொற்களும் முறையே ஆண்பாற் சொல்லும் பெண்பாற்சொல்லும் ஆயின. வட மொழியில் இங்ஙனம் வருதலில்லை; சொற்பற்றியே லிங்கவியவஸ்தை யேற்பட்டுள்ளது. உதாரணமாக 'மனைவி' யென்று பொருள்படும் दारा: என்ற சொல் **புல்லிங்கமும் பகுவசநமும்** (பன்மை) ஆகும். பொருட்டன்மையால், இது ஸ்த்ரீலிங்கமும் ஏகவசநமும் (ஒருமை) ஆமென்பது கூறவேண்டா. இங்ஙனமாதலின் வடமொழியிற் சொல்லை யுணரும்போதே அதன் லிங்கத்தையும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகின்றது. லிங்காநுஶாஸநம் இக்காரணத்தாலேயே கூறப்பட்டுள்ளது.

இந்த ஐந்து அங்கங்களில் 'அக்ஷர ஸமாம்நாயம்' மஹேஶ்வரரால் அருளிச் செய்யப்பட்டதென்பர். மற்றைய நான்கும் பாணினி முனிவர் தாமே இயற்றியனவென்பதிற் சந்தேகமில்லை.

அங்கங்களுள் 'கணபாடம்' 'தாதுபாடம்' என்று வரும் பெயர்களுக்கேற்ப அஷ்டாத்தியாயியைச் 'சூத்திரபாடம்' என விசேஷித்து வழங்குதலுமுண்டு. இதற்குக் காரணம் நூல் முழுவதும் சூத்திர யாப்பினால் ஆக்கப்பட்டிருப்பதுவேயாம். ஆனால், 'சூத்திரம்' என்று கூறிய மாத்திரத்தில் பாணினீய சூத்திரம் தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றில் வருவன போன்று இருக்குமென நினைத்தல் தவறு. தமிழாசிரி

**சூத்திர லக்ஷணம்**

யர்கள் சூத்திரத்தின் லக்ஷணத்தை நன்குணர்ந்தவர்களே யாவர். தொல்காப்பியர்,

........................சூத்திரந் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே

எனச் செய்யுளியலிலும்,

மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்திற் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்

என மரபியலிலும் விரிவாகக் கூறியுள்ளார். பவணந்தி முனிவர் மேலே இரண்டு சூத்திரங்களினும் காணப்படுங் கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அழகாகவும் சூத்திரத்தியல்பினை யுணர்த்தி யிருக்கின்றார் :

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்

என்பது நன்னூல்.

இங்ஙனமாகத் தமிழாசிரியரிருவர் கருதிய சூத்திர லக்ஷணமும் வடமொழியாளர் தந்துள்ள லக்ஷணமும் தம்முள் முக்கியாம்சங்களில் வேறுபடுவனவல்ல. 'சூத்திரம்' என்ற கருத்தும் சொல்லும் வடமொழியினின்று தமிழிற் பெறப்பட்டனவேயாம். ஆண்டு,

अल्पाक्षरं असन्दिग्धं सारवत् विश्वतोमुखम् ।
अस्तोभं अनवद्यञ्च सूत्रं सूत्रविदो विदुः ॥

என லக்ஷணங் கூறப்பட்டிருக்கின்றது. இரு மொழியினுங் கைக்கொண்ட சூத்திர - இயல்பு ஒன்றேயாயினும் வட நூலாசிரியர்கள் சொற் சுருங்க யாத்திருப்பதுபோன்று தமிழாசிரியர்களும் செய்தமைத்திருக்கின்றார்களெனக் கூற முடியவில்லை. தொல்காப்பியர் பெரும்பாலும் விரிவாகவே சூத்திரஞ் செய்தனர். இதற்குக் காரணம், சூத்திர சம்பந்தமான அளவில், அடிப்பட்ட இலக்கிய வழக்குத் தமிழில் இல்லாமையேயாமெனத் தோன்றுகிறது. ஆனால், தொல்காப்பியம் இப்பொழுது அமைந்திருக்கும் முறையே ஏற்றதாகுமெனக் கூறவேண்டும். மிகச் சுருங்கின சூத்திரங்களால் அவர் கூறுதுபோயினரென்று நாம் தற்காலத்தில் வருந்துதற்கில்லை.

**பாணினிய சூத்திரம்**

வடமொழி யாசிரியர்களுள்ளும், பாணினி முனிவர் போன்று, சில்வகை யெழுத்திற் சூத்திரஞ் செய்தோர் மிக அருகியே காணப்படுகின்றனர். 'அரை மாத்திரையேனும் சுருங்கவுரைப்பதில் லாபம் பெறுதல் கூடுமாயின், அதனைப் பாணினீயர்கள் புத்திரப்பேறு லபித்ததுபோற் போற்றிப் பாராட்டுவர்' (அர்த்தமாத்ரா லாகவேந புத்ரோத்ஸவம் மந்யந்தே பாணிநீயா:) என்று வழங்கும் முதுமொழி சொற்சுருக்க விஷயத்திற் பாணினி யாசிரியர் எத்துணைச் சிரமம் எடுத்திருக்க வேண்டுமென்பதை ஒருவாறு உணர்த்தி நிற்கிறது. அநேக எழுத்துக்களை யொருங்குணர்த்தவேண்டிய இடத்து **'ப்ரத்யாஹாரம்'** என்ற வழியைப் பாணினி கையாளுவர். 'ப்ரத்யாஹாரம்' இன்னதென்பது பின்னர் விளங்கும். உதாரணமாக **'ஞலூ'** என்பதனால் அநுநாஸிகாந்தஸ்

தங்கள் (மெல்லின இடையினங்கள்) ஒழிந்த மெய்யெழுத்துக்களை யுணர்த்துவர்; 'सुप्' என்பதனால் வடமொழி வேற்றுமை யுருபுகளனைத்தையும் ஒருங்குணர்த்துவர்; 'तिङ्' என்பதனால் வடமொழி வினைக்குரிய விகுதிகளனைத்தையும் உணர்த்துவர். இங்ஙனம் வரும் பிரத்தியாகாரங்கள் பல. மேலும் '**ஸம்ஜ்ஞை**' பலவற்றைப் படைத்துக்கொண்டு அவற்றைப் பாணினி யாசிரியர் தமது சூத்திரங்களில் அமைத்துச் சொற்சுருக்கம் பேணுகின்றனர். உதாரணமாக टि என்ற குறியீட்டினால் உயிரீற்றுச் சொற்களில் இறுதி யுயிரெழுத்தினையும் மெய்யீற்றுச் சொற்களில் இறுதி மெய்யெழுத்தோடு அதற்கு முன்புள்ள உயிரெழுத்தினையும் உணர்த்துகின்றனர். ஸமிக்ஜ்ஞைகளேயன்றி, **பரிபாஷைகள்** பல அமைத்துக்கொண்டு அவற்றாற் சொற்சுருங்கும்படி அவர் செய்திருக்கின்றனர். உதாரணமாக आद्यन्तौ टकितौ (I. i, *46*) என்ற சூத்திரத்தால் ஆகமத்திற்கு டகார அநுபந்தமிருப்பின் முதலிலும், அதற்குக் ககார அநுபந்தமிருப்பின் இறுதியிலும், அவ்வாகமத்தைச் சேர்த்துக்கொள்க என்று விதிக்கப்பட்டிருக்கிறது. 'ராம' என்ற பதத்திற்கு ஆறும் வேற்றுமைப் பன்மையுருபு 'ஆம்' என்பது; இதற்கு நகார ஆகமம் வருமென்று கூறப்பட்டிருக்கின்றது; இந்த ஆகமம் வருமென விதித்த இடத்தில் 'नुट्' என அது குறிக்கப்பட்டது; டகார அநுபந்தம் இங்கே யிருப்பதனால், 'ஆம்' என்ற உருபின் முன்பாக நகாரம் தோன்றி 'நாம்' என்றாகிப் பின் 'ராம' என்ற அங்கத்தின் ஈற்றகரம் நீண்டு '**ராமாணும்**' என உருபொடு புணர்ந்து முடிகின்றது. இவ்வாறு அநுபந்த எழுத்துக்களாலே வியாகரண காரியங்களையும் அவை செய்யப்படவேண்டும் இட முதலாயினவற்றையும் உணர்த்தி விடுதலினாலே பாணினீய சூத்திரங்கள் சாலவும் சொற்சுருக்கம் எய்தியுள்ளன.

இதுவரை விவரித்த சூத்திர பாடத்தாலும் கண பாடம் தாது பாட முதலிய அங்கங்களாலும் பாணினியாசிரியர் இயற்றிய வியாகரணமானது எவ்வகையானுஞ் சிறப்புமிக்க நூலென்றே கொள்ளற்பாலது. உலகமெல்லாம் ஒருங்கு புகழும் முதல்தரமான பெருநூல். மக்களாய்ப் பிறந்தாருள், பாணினியார் போன்று அத்துணை யறிவாற்றல் படைத்தவரென மிகச் சிலரையே சுட்டிக் கூறுதல் கூடும். பாஷா தத்துவங்களனைத்தையும் ஒருங்குணரும் அகன்ற பேரறிவும், அவற்றை முறைப்படுத்தி வகுத்து நுணுகியாராயும் மதிநுட்பமும், ஆராய்ந்தவற்றை யொருநிலையிற்கொணர்ந்து யாண்டுந்தவறாத இலக்கண விதிகள் அமைக்கும் பேராற்றலும் ஒருவராலும் அளவிடுந் தரத்தவல்ல. பலபடக்கூறியென்? ஒருவரது அறிவுவன்மையை மதிப்பதற்கு அவர் இயற்றிய நூலினை யளவு கருவியாகக் கொள்ளல் தகுமெனின், பாணினி யாசிரியரது வியாகரணமும் அவரை என்றும் அதிசயிக்கத்தக்க புத்திசக்தி வாய்ந்த ஒரு மஹா புருஷரே யென நிலைநாட்டுமென்பதில் சந்தேகமில்லை.

**பாணினி இலக்கணம் உலகம் புகழும் பெரு நூல்**

எனினும், இரண்டு வகையால் பாணினீயமும் குறைபாடுடையதா யிருத்தல்வேண்டுமென்று கருதுதல் தவறாகாது. முதலாவதாக. 'முற்றுமுணர்ந்தவரில்லை' என்னும் உண்மை ஓரிடத்தும் பொய்த்துவிடுவதில்லை. எவ்வளவு பெரியோராயினும்—எத்துணை அறிவாற்றல் படைத்தவரேயாயினும்—மக்களினத்துட் பிறந்த அவ்வொரு காரணத்தாலேயே, அவரது அறிவிற் சிறிதேனும் குறைபாடிருத்தல் வேண்டுமென்று நாம் ஊகித்தற்கு இடமுண்டு. ஏனெனின், மக்கள் இயற்கையிலேயே அளவுபட்ட அறிவுடையவர். இக்கருத்தையே ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் வேறொரு முறைபற்றி,

**பாணினீயத்தின் குறைபாடுகள்**

'இம்முறை யெல்லாம் எவர்பகுத் தறியினும்
அவத்தை வசத்தால் அலைகுவர் திடனே
அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்'

என்று கூறினர். ஆகவே பாணினியாரது நுண்ணிய ஆராய்ச்சிக்கும் அகப்படாது புறத்தே மறைந்துகிடந்த சப்த சாஸ்திர தத்துவங்கள் சில சில இருந்தன என்று கொள்ளுவதில் அவ்ஆசார்ய சிரேஷ்டருக்கு யாதோர் இழுக்கும் இல்லை. இரண்டாவதாக, இயற்கை யுலகிலுள்ள ஜீவ ராசிகளோடொப்ப, மக்கள் வழங்கும் மொழிகளுக்கும் தோற்றம் வளர்ச்சி அழிவு என்பன உண்டென்பதும் நாம் எப்பொழுதும் மனக்கொளவேண்டுவதோர் உண்மையாம். இவ் உண்மையை அடிக்கடி மறந்துவிடுகிறோம். [தொல்காப்பியரது நூலோடு மாறுபட்டு இக்காலத்து ஏதேனும் ஓர் இலக்கிய வழக்குக் காணப்படுமாயின், அதனைப் பிழையென்று தள்ளுவார் இன்றும் உளர். பாஷைகளின் இயல்பை யொரு சிறிது ஞாபகத்தில் வைப்போமாயின். இவ்வாறு செய்யத் துணியோம். 'கடிசொல் லில்லைக் காலத்துப் படினே' எனத் தொல்காப்பியனார் தாமும் மேலே சுட்டிய வுண்மையை அறிவுறுத்தி யிருக்கின்றார். பவணந்தியும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்-வழுவல கால வகையி னானே' என்று கூறியுள்ளார். ஆகவே, வட மொழியிலும், பாணினியார் காலத்திற்குப் பிற்பட்டுச் சில வழக்காறுகள் தோன்றியிருத்தல் வேண்டும்; சில அழிந்துபோயிருத்தலும் வேண்டும். இவ்வாறு ஏற்பட்ட உபசய-அபசயங்களுக்குப் பாணினீயத்தில் இலக்கணங் காணுதல் சிறிதும் ஏலாதென்பது கூறவேண்டா.

மேற்கூறிய இருவகையானும் பிறந்த குறைபாடுகளைக் **காத்தியாயனர்** என்ற ஒரு பெரியார் தோன்றிச் சில விவரண சூத்திரங்கள் இயற்றிச் சேர்த்துத் தம் ஆராய்ச்சிக்கு

எட்டியவரை பாணினீயத்தைச் செப்பஞ் செய்தனர். வரருசி என்பதும் இவர்க்கு ஒருபெயர். இவரது விவரண சூத்திரங்கள் 'வார்த்திகம்' என்னும் பெயரான் வழங்கும். கூறியன, கூறாது விடுத்தன, குன்றக்கூறியன : இவற்றை நிரப்பிப் பொருளை வியக்தமாக்குவது வர்த்திகமெனப்படும். 'உக்தாநுக்த துருக்தார்த்த வ்யக்திகாரிது வார்த்திகம்' என்பது லக்ஷணம். வார்த்திகஞ் செய்தமையாற் காத்தியாயனரை வார்த்திககாரர் என்றும் கூறுவர்.

**காத்தியாயனரது வார்த்திகம்-பதஞ்சலியின் மகாபாஷ்யம்**

இந்த வார்த்திகத்தாலும் இலக்கணம் நிரம்பாமை உணர்ந்த பேராசிரியர் ஒருவர் மஹாபாஷ்யம் ஒன்றியற்றிப் பாணினீயத்தை நலமுற்று வித்தனர்.

# 2. வடமொழியும் தமிழும் *

**இருமொழிக்குமுரிய தொடர்பு**

நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் ஏற்பட்டுள்ள அடிப்பாட்டுத் தொடர்பினைக் குறித்து இருவேறு கொள்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிலர் தமிழ் ஒரு தனிமொழி யென்பர்; இக்கொள்கையுடையார் பிஷப் கால்டுவெல் (Bishop Caldwell) முதலிய பாஷா சாஸ்த்ர விற்பந்நர்கள். சிலர் வடமொழியினின்றும் பிறந்த வொரு மொழியே தமிழ் என்பர்; இக்கொள்கையுடையார் ஸ்ரீமாந் R. சுவாமிநாத ஐயரவர்கள் முதலிய அறிஞர்கள். '**நற்றாய்**' என்று யான் முதற்கட்டுரையிற் சுட்டியொழிந்தது இவ் இரண்டாவது வகைத் தொடர்பினையே. ஒன்றற்கொன்று முற்றும் மாறுபட்ட இக்கொள்கைகள் சிலகாலத்திற்கு முன் மிக்க வாதப் பிரதிவாதங்களுக்குக் காரணமாயிருந்தன எனப் பலரும் அறிவர். மேன்மேலும் வந்துபெருகிக் குவிந்துகொண்டிருக்கும் நூதன வியவகாரங்களினாலே முற்றும் புதையுண்டு கிடக்கும் இவ்விவாத விஷயத்தை இப்போது கிண்டிக் கிளறி வெளிக்கொணர்ந்து சொற்போராடுவது எனது நோக்கமேயன்று. பாணினீயம்பற்றி யான் எழுதியவை அத்தகைய விவாதத்திற்கு இடங்கொடுப்பதுமன்று. வடமொழியால் நமது தமிழ்மொழி பண்டைக் காலந்தொட்

---

* பாணினீய - லகுதீபிகை என்ற எனது கட்டுரை குறித்து, ஸ்ரீமாந் சு. இராஜையனாரவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் எழுதியிருப்பனவற்றை நன்றாகக் கவனித்து வாசித்தேன். ஐயனாரவர்களது உரையினைமட்டும் நோக்கிய அளவில் செந்தமிழ் நேயர்கள் கட்டுரையின் கருத்தைப் பிழைபட வுணர்தல்கூடும் என்றெண்ணி எதிருரை யொன்று விரைந்து எழுதலாயினேன்

டுப் பல பிரகாரத்தாலும் போஷிக்கப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறதென்ற ஒரு விஷயமே யான் கூற அமைந்தது. யான் கூறியுள்ளதும் இதுவே. **'செவிலித்தாய்'** நிலையென்று எனது கட்டுரை குறிக்கின்றதும் இதனையே யாகும். வேறு யாதொரு தொடர்பினையும் உட்கொள்ளாது **'போஷித்து வளர்த்தல்'** என்ற ஒரு கருத்தினை மாத்திரம் தந்து நிற்பது செவிலித்தாய் நிலை. 'செவ்வி தின் வளர்த்த தாதி செவிலி கோடாய் கைத்தாயாம்' என்பது சூடாமணி நிகண்டு. இச் செவிலித்தாய்நிலைக்கும் நற்றாய் நிலைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. தமிழுக்கு 'நற்றாய்' என்று வியவகரிக்கும் பொழுது தமிழ் மொழியின் உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சியே பிரதானமாகும். இவ் ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளையும் கற்றுணர்தல் அத்தியாவசியமாக வேண்டப்படுவது; பாஷாசாஸ்திர விசாரணை மார்க்கத்தில் தக்க பயிற்சியும் வேண்டும்; இத்தகுதி யுடையாரே 'நற்றாயோ? அன்றோ?' என்னும் விசாரணையை மேற்கொள்ளுதற் குரியர். விசாரணையின் முடிபும் வெகு காலம்வரை கேவலம் **'கொள்கை'** மாத்திரமாகத்தான் இருத்தல்கூடும். தமிழுக்குச் செவிலித்தாய் என்று வியவகரிக்கும்பொழுது மேற்கூறியவற்றிற் பெரும்பாலன வேண்டப்படுவனவல்ல. இதற்கு உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சி அநாவசியகம்; தமிழ், வடமொழி யென்ற இரு பாஷைகளின் உணர்ச்சியே போதியதாகும்; பாஷா சாஸ்திரப் பயிற்சியும் அத்தியாவசியமாக வேண்டப்படுவதன்று. இதற்குரிய விசாரணையின்முடிபு கேவலம் கொள்கை மாத்திரம் ஆதலின்றிச் சுலபசாத்தியமாய் யாவரும் அங்கீகரிக்கத்தகுவதோர் உண்மையாயும் நிற்கக்கூடியது. தமிழ் மொழிக்கு வடமொழி செவிலித்தாய் நிலையிலுள்ளதென்று தெளிவித்தலே கட்டுரையின் முழு நோக்கமாகும்.

மேலேகாட்டிய வேறுபாட்டினை ஐயனாரவர்கள் நன்கு அறிந்தவர்களாகக் காணவில்லை. 'தெய்வச் செந்தமிழ் மொழிக்குச் செவிலித்தாயென வடமொழியைக் கூறுதலே பொருந்துவதாகுமெனப் பிள்ளையவர்கள் கூறினும் அவர்கள் நுணுக்கவுரையின்கட் கருத்தொருப்படுகின்றிலேம்' என்று ஐயனாரவர்கள் எழுதுதலால் 'செவிலி' என்றதன் கருத்து நிராக்ஷேபமாயுள்ளதென அவர்கள் ஒருவாறு உணர்ந்தமை தோன்றும். இவ்வாறு ஊகித்தல் சரியாயின், 'தமிழ் மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா ?' என்று தமது மறுப்புரைக்கு மகுடஞ்சூட்டி அவ்வுரையினிறுதியில் 'இன்னிசை வாய்ந்து உலகெங்கணும் தன்னிசை பரப்பிய் கரையிறந்த கடலன்ன நஞ்செந்தமிழ்க்கு மதிவளம் பெருக்குஞ் சிறப்பியல்பு ஒரு சிறிதுமில்லா வடமொழியைச் செவிலித்தாயெனல் பொருந்தாமையறிக' என்று அவர்கள் கூறி முடித்தலின் கருத்து அறிதற்கரிதாயிருக்கின்றது. உலகமெங்கணும் தன்னிசை பரப்பிய செந்தமிழ்! கரையிறந்த கடலன்ன செந்தமிழ்! மதிவளம் பெருக்குஞ் சிறப்பியல்பு ஒரு சிறிதுமில்லா வடமொழி! இவை போன்றன உண்மையாமென நம்புவாரை இவ்விருபதாம் நூற்றாண்டிற் காணுதலரிது. எனது தாய்மொழியின் புகழ் உலகெங்கும் பரவவேண்டுமென்ற ஆசை மிகவுடையேன். எனது தாய்மொழியில் அளவற்ற நூல்கள் இயற்றப்பட்டு அவை கடல்போற் பெருகவேண்டுமென்ற விருப்பமும் மிகவுடையேன். ஆனல், ஏற்கெனவே இவ்வாசைகள் நிறைவேறிவிட்டன என்றெண்ணுதல் உருவெளித்தோற்றங் கண்டதனேடொக்குமென்று ஐயனாரவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**தமிழுக்கு வடமொழி செவிலித்தாய்**

'செவிலித்தாய்' என்ற கருத்தினை ஐயனாரவர்கள் தெளிவாயுணர்ந்து கொள்ளவில்லை யென்றேன் : இதன்

உண்மை வேறு வழியாலும் வெளியாகின்றது. மறுபபுரையின் தொடக்கத்தில் 'வடமொழியே தமிழுக்குத் தாய்மொழி'யென்பது எனக்கு உடம்பாடென்றும் அதனை வலியுறுத்துதற்கே யான் ஏதுக்கள் காட்டியிருக்கிறேன் என்றும் கூறுகின்றார்கள். அன்றியும், 'தமிழ்மொழி மிகப் பழையதாதலும் அஃதொரு தனித்த முழுமுதற் சொல்லாதலுங் கருதாத'வனுவே னென்று என்னை அவர்கள் குறிப்பதோடு, அவர்களது மறுப்புரையில் 10-பக்கங்கள் வரை தமிழின் முழுமுதற்றன்மையினையும் அதன் பழமையினையும் பற்றி விரித்தெழுதுகின்றார்கள். ஈண்டெல்லாம் 'செவிலி'யென்பது பிழைபட உணரப்படுகின்றது. தமிழின் முழு முதற்றன்மையை யான் மறுத்ததுமில்லை; வடமொழி தமிழுக்குத் தாய்மொழி யென்பதில் யான் உடன்பட்டது மில்லை. இக்கருத்துக்கள் என்னுடையனவே அல்ல.

தமிழின் பெருமை முழக்கம்

இங்ஙனமாக, யான் கருத்திற்கொள்ளாதன சிலவற்றை எனது கருத்துக்களெனத் தாமே நூதனமாகப் படைத்து ஏறட்டுக்கொண்டு அவற்றை மறுத்தல் ஐயனுரவர்கள் புதிதாய்க்கண்ட தருக்கநெறி போலும்! என்னைப் பிழைபட உணர்ந்து, எனது கட்டுரையிற் காரணங்களால் வலியுறுத்தி நிறுவிய பிரதான முடிவினை அறவே கைந்நெகிழவிட்டு, ஏதோ சில சில எழுதுகின்றார்கள். மறுப்புரையின் முக்கியகதி இதுவே.

யான் தந்துள்ள ஏதுக்களையேனும் சரியாக உணர்ந்திருக்கிறார்களா என்பதை நோக்குவோம். தமிழ்மொழியை வடமொழி போஷித்து வந்திருக்கிறதென்பது மூன்று வாயில்களால் அறியலாகும். அவை: (i) தமிழிலுள்ள சொற்கள்[1] (ii) தமிழ் நூல் விஷயங்கள்[2]

1. Vocabulary 2. Subject-matter.

**செவிலித்தாய் என்றதன் காரணங்கள்**

(iii) தமிழிலக்கியமரபு[1] என்பனவாம். இவற்றிற்கு அடிப்படையாக வடமொழியோடு ஒத்து நிற்கக்கூடிய அளவிலே தமிழை வளம்படுத்த வேண்டுமென்ற பேரவா தமிழ்நாட்டில் வேரூன்றிக் கிடந்தது. தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுக்கப் புகுந்த நூல்கள் தாமும் வடமொழி வியாகரணங்களுக்குப் பெரிதும் கடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வடமொழியோடு தமிழ் மிக நெருங்கிய தொடர்புடையதாயிருத்தல்பற்றித் தமிழில் பாண்டித்தியம் பெற விரும்புவோர்க்கு வடமொழி யுணர்ச்சி இன்றி யமையாததாகும். எனது கட்டுரையின் ஸாராம்சம் இவ்வளவே.

**வடமொழி உணர்ச்சியின் இன்றியமையாமை: மூவர் கருத்துக்கள்**

சொற்களைப் பற்றிக் கூறுமிடத்துச் சுவாமிநாத தேசிகரது கருத்தும் எனது கருத்தோடொத்திருப்பதனை யெடுத்துக்காட்டினேன். இலக்கண விஷயத்தில் வடமொழி வியாகரணங்களுக்கு நாம் கடப்பட்டிருக்கிறோமென்பதை உணர்த்துமிடத்துச் சுப்பிரமணிய தீக்ஷிதர் அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முறையே பாணினீயமும் ஐந்திரமும் முதனூல்களாமெனக் கொள்வரென்றும் பரஞ்சோதி முனிவர் முதலானோர் பிறவாறு கொள்வரென்றுங்கூறி, இஃது எவ்வாறாயினும் வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பியம் முதலியன கடப்பட்டுள்ளன என்பது மேற்குறித்த அனைவர்க்கும் அங்கீகாரமாம் என்றேன். தமிழிற் பாண்டித்தியம் பெற விரும்புவோர்க்கு வடமொழி யுணர்ச்சி இன்றியமையாததாமென உரைக்குமிடத்து ஆசிரியர் சிவஞான சுவாமிகளும் இங்ஙனமே கருதினரெனச் சுட்டினேன். தேசிகர், தீக்ஷிதர், சுவாமிகள்: ஆகிய மூவரும் கூறியுள்ளன

1. Literary tradition.

எனது முடிபிற்கு ஏதுக்களாமெனன் என்றல் தரப்படவே யில்லை. உண்மை இவ்விதமிருக்க, இப்பெரியோர் மூவரும் கூறியன என்றல் ஏதுக்களாகக் காட்டப்பட்டனவென்று ஐயனாரவர்கள் எழுதுதல் யாது காரணம்பற்றியென அறியக்கூடவில்லை. ஒருவரது கொள்கைக்கு அல்லது முடிவிற்குப் பிறரொருவரது கருத்து ஒருபொழுதும் ஏதுவாதவில்லை. அவை யிரண்டும் உண்மையென்று தெளியப்பட்ட விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு பிறத்தல் வேண்டுமென்பது நியமம்.

**சில போலி ஆராய்ச்சிகள்: சொற்கடன்**

இனி, இம்மூவரும் தந்துள்ள கருத்துக்களை எவ்வாறு தருக்கித்துத் தங்கருத்தை நிலையிடுகின்றார்களென நோக்குதல் வேண்டும். 'ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?' என்று தேசிகர் வினவியதனை 8 பக்கங்களில் (401-408) ஆராய்கின்றார்கள். ஆனல் அஃது ஓரிடத்தும் மறுக்கப்படவேயில்லை. 'தமிழ் முதுமக்கள் வழங்கிவந்த தமிழில் பிறமொழிச் சொற்களும் வந்து கலத்தல் இயல்பே' என்பது தான் ஐயனாரவர்களது முடிபு. எனது கட்டுரையில் 'இதனைத் தமிழிற்கோர் குறைபாடாகக் கருதுதல் தவறு. தமிழ் மக்களது அறிவு-வளர்ச்சி காரணமாகவும் நாகரிகமுதிர்ச்சி காரணமாகவும் சொற்கடன் ஏற்பட்டுளது' என்று எழுதியிருந்தேன். ஐயனாரவர்களும் யான் கூறியதனையே மேற்கொண்டு அதற்கு 'விருத்தியுரை' யொன்று பெருக்கி யெழுதியிருக்கின்றார்கள்.

[அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முதனூல் முறையே பாணினீயமும் ஐந்திரமும் ஆமென்று சுப்பிரமணிய தீக்ஷிதர் கூறியதனை 5 பக்கங்களில் (411-415) விசாரணை செய்கின்றார்கள். இங்ஙனம் 'முதனூல்' எனக் கூறுதல் முற்றும் பிழையென்பது சிவஞான சுவாமிகளால்

ந்ன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. முதனூல் என்ற கருத்து வேறு; ஒன்றற்குப் பிறிதொருநூல் கடப்பட்டுள்ளது என்ற கருத்து வேறு. இதனை நாம் ஞாபகத்தில் வைத்தல்வேண்டும். ஐந்திரம் முதலியன நமது தமிழிலக்கணங் கட்கு முதனூல்களாமெனக் கூறுவார் இக்காலத்து யாரும் இரார் என்றெண்ணுகிறேன். ஆனால் இவை முதனூல்களல்ல வென்பதனோடுமட்டும் ஐயரவர்கள் திருப்தியடையவில்லை. (பாணினீய முதலிய வடமொழி வியாகரணங்கட்குத் தொல்காப்பியம் முற்பட்டுள்ள தென்பதும், அதுவே சரித்திர நூல் வல்லாரெல்லார்க்கும் ஒப்ப முடிந்ததென்பதும்' காட்ட முயன்றூர்கள். 'பாணினீய முதலிய வடமொழி வியாகரணங்கள்' என்றெழுதப்படுகின்றது. இங்கே வியவகரிக்கப்பட்டுள்ளனவெல்லாம் இரண்டே வியாகரணங்கள்: ஐந்திரமும் பாணினீயமும். ஐந்திரவியா கரணத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனல் அவர் களது கருத்தாகவேண்டும்! சிறிது முன்பு 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என அவர்கள் தாமே எடுத்துக்கூறிப் பின்னர் ஐந்திரத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனக் கருதும்படி யெழுதுவது வியப்பாக இருக்கின்றது. சரித்திர நூல் வல்லார்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததென்றூர்கள். இவ்வாறு கூறியவர்கள் சரித்திர நூல் வல்லாரில் ஒருவரை யாவது எடுத்துக் காட்டினூர்களில்லை.

**ஐந்திரமும், பாணினீயமும் தமிழ்-இலக்கணங்களுக்கு முதனூல்களா?**

தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முற்பட்டதென ஐயரவர்கள் தெளிவிக்கும் முறையினைச் சிறிது நோக்குவோம். இக்கொள்கை தமிழபிமானிகள் சிலரால் இக் காலத்து வெளியிடப்பட்டுவருகிறதெனினும், கர்ணபரம் பரையிற் கேட்கப்படும் வரலாற்றிற்கு விருத்தமாயுள்ளது. சிவஞானசுவாமிகள் தமது பாயிரவிருத்தியில், 'பாணினீய முதலிய வியா

**தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முற்பட்டதா?**

காரணங்களுமுளவாக ஐந்திர நிறைந்த தொல்காப்பிய னென்று' பனம்பாரனார் கூறினமைக்குக் காரணந் தருகின்றார்கள். இதனால் தொல்காப்பியனார் காலத் துப் பாணினீயம் உளதாதல் சுவாமிகளுக்கு உடன் பாடாம். வடமொழியிலக்கணத்தைப் பாணினீ யார்க்கு மேனாளுரைத்ததுபோலத் தமிழ்மொழி யிலக் கணத்தை அகஸ்தியருக்கு உணர்த்தி வடமொழியோடு தமிழைச் சமமாக்கியருளினார் சிவபெருமானென்பர் பரஞ் சோதி முனிவரும். இதனால் அகத்தியத்திற்கு முற்பட்டே பாணினீயமுளதாதல் முனிவருக்குங் கருத்தாகும். கர்ண பரம்பரையாகவேனும் கொள்ளத்தக்க இவ்வரலாற்றை யொழித்துத் தமது நூதன கொள்கையை அங்கீகாரஞ் செய்தற்கு இரண்டு காரணங்கள் தருகின்றார்கள். அவற் றுள் ஒன்று மிகவும் புதுமை வாய்ந்தது. 'இலக்கண ஆராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பினதாய சொல்வரலாற்று முறையை'த் தொல்காப்பியர் கூற வில்லை; ஆகவே அம்முறையைக் கூறியுள்ள பாணினிக்கு 400 வருடங்கட்கு அவர் முற்பட்டவராதல் வேண்டும்: என்பது தான் அக்காரணம். இதன் வன்மை மென்மை களை யாராய்தல் அநாவசியகம்; இது போன்ற காரணங் கூறித் தமிழுலகை அவமதியாதிருக்கும்படி ஐயரவர் களைப் பிரார்த்திக்கிறேன். அவர்கள் கூறுவது தொல் காப்பியம் ஒரு நிரம்பிய இலக்கணமன்று எனக் கொள்ளு தற்குத் தக்க காரணமாகலாம். வேறொருமுடிபும் அதி னின்று பெறுதல் ஏலாது. 'முற்றத்துறந்து முழுத்தவம் எய்தி முழுமுதலறிவினராய் விளங்கியவ'ரெனத் தொல் காப்பியரை யோரிடத்துக்கூறிப் பிறிதோரிடத்துச் சொல் வரலாற்று முறையைப் பாணினியாலன்றிப் பிறவாறு அறிந்துகூற மாட்டாதவராயினாரென்று பெறவைத்தல் பரஸ்பர விரோதமென்றுகூட ஐயரவர்கள் உணரவில்லை. இவ் அரிய காரணங்கொண்டு, பாணினீயத்திற்கு முற்பட்

டது தொல்காப்பிய மெனத் துணிந்து, பாணினியின் காலத்தை ஆராய்ச்சியால் வரையறுத்து, தொல்காப்பியர் இற்றைக்கு 3200 வருஷங்கட்கு முன்புள்ளவர் என முடிக்கின்றார்கள். ஐயனாரவர்களது இரண்டாவது காரணம் இன்னும் 1100 வருஷங்களுக்கு முன்பாகத் தொல்காப்பியரைக் கொண்டு செல்ல உதவுகின்றது. தொல்காப்பியர் காலத்தே குமரியாறுண்மையும், அது கடல்கோட்பட்ட காலம் இற்றைக்கு 4300 வருஷங்கட்கு முன்னென்பது பௌத்த வம்சாவளியால் தெரிகின்றமையும், அக்காலம் பைபிளிற் கூறப்படும் 'நோவா' என்பவர் காலத்தோடு ஒத்திருக்கின்றமையும், ஆகவே தொல்காப்பியனார்காலம் 4300 வருஷங்கட்கு முன்னென்று தெளியப்படுகின்றமையும், அவர்களால் விரித்துரைக்கப்படுகின்றன. தமது கொள்கைகளை எவ்வகையாலாயினும் நிறுவவேண்டுமென்று துணிந்து வெளிவந்திருக்கும் ஒரு சிலர் கால-ஆராய்ச்சி செய்யு முறையை இது நன்கு உதகரிக்கின்றது.

மேலைக் காரணத்தில் அமைந்த தொடர்களுள் ஒவ்வொன்றும் சந்தேக ஆஸ்பதமாயுள்ளதாகும். முதலாவதாக, தொல்காப்பியர் காலத்தே குமரியாறு இருந்தமை நிச்சயித்தல் ஏலாது. 'குமரி'யென்றே கூறப்பட்டுள்ளது; 'ஆறு' என்றேனும், 'மலை' என்றேனும், அன்றி 'முனை' என்றேனும், தொல்காப்பிய நூல்கொண்டு அறிதற்கில்லை. இப்பொழுதும் இந்தியாவின் தெற்குக்கோடி 'குமரி' யென்னும் பெயரால் வழங்குகின்றது. பனம்பாரனார் இத் தெற்குக் கோடியினையே கருதியிருத்தலுங்கூடும். இரண்டாவதாக, அப்பெயர்கொண்டு யாறொன்றிருந்ததெனக் கொண்டவிடத்தும், அது கடல்கோட்பட்ட காலம் நிர்ணயித்தல் கூடாது. வம்சாவளிகளில் அநேக கடல்கோள்கள் கூறப்படுகின்றன. எக்காலத்து நிகழ்ந்த கடல்கோளால்

**காரணங்கள் ஐயத்திற்கிடமானவை**

குமரியாறு கடல் வாய்ப்பட்டதென்று அறிதல் ஏலாது. 4300 வருஷங்கட்கு முன் நேர்ந்ததொரு கடல்கோளால் அங்ஙனமாயிற்றென ஐயரவர்கள் கருதுகின்றார்கள். இது பொருந்தாது; ஏனெனின் அக் கடல்கோளால் தான் சிங்களம் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டதாக இலங்கைச் சரித்திரங்கள் உணர்த்துகின்றன. சிங்களம் இந்தியாவோடு சேர்ந்திருந்த காலத்தில் இயற்றப்பட்டதெனத் தமிழ் நூல்களுள் எதனையுஞ் சொல்லுதற்கு ஆதாரமே யில்லை. மூன்றாவதாக, மேற்கூறிய கடல்கோள் நோவாவின் காலத்து நிகழ்ந்ததெனப் பைபிள் தெரிவிக்கும் பிரளயமாதல் வேண்டுமென்று ஐயரவர்கள் கருதுகின்றார்கள்! தமது அன்பிற்குப் பாத்திரனான நோவாவும் அவனாற் பாதுகாக்கப்பட்ட உயிர்களும் தவிர, உலகத்திலுள்ள மற்றையுயிர்களனைத்தையும் ஒருசேர அழிக்கக் கருதிக் கடவுள் நாற்பதுநாள் இரவும் பகலும் இடைவிடாது மழை பெய்வித்துப் பிரளயம் நிகழ்வித்தார் என்னும் பைபிள் கதைக்கும் இலங்கைச் சரித்திரங்கள் கூறும் கடல்கோளுக்கும் யாது சம்பந்தம்! ஒரு விஷயத்திலேனும் பொருந்தக் காணவில்லையே! ஈரிடத்துங் கூறப்படுஞ் செய்திகளிற்போலும் ஒற்றுமையில்லையே. பைபிளிற் காணும் பிரளயம் சரித்திர விஷயமாகக் கொள்ளுதற்குரியதன்று; சரித்திர விஷயமெனக்கொண்டவிடத்தும் மக்கள் வாழ்க்கைச் சரித்திரத்தில், எப்போதென்று கணித்தற்கரிய புராதன காலத்தில், ஒரு ஜலப்பிரளயம் நேர்ந்ததென்றதற்கு அறிகுறியாகக் கொள்ளலாமேயன்றிப் பிறவாறு அதனைக் கொள்ளுதற்கில்லை. இப்பிரளயம் நிகழ்ந்த காலமும் பைபிளைக்கொண்டு நிச்சயித்தலரிது. பலர் பலவாறு கணக்கிட்டுக் கூறுகின்றனர். ஒரு கணக்கில் கி. மு. 2105-ல் அது நிகழ்ந்ததென்று கூறப்படுகின்றது; வேறொரு கணக்கில் கி. மு. 3153-ல் என்று எழுதப்படுகின்றது. நிச்சயமென்பது

சிறிதுமில்லாத இவ்விஷயத்தில் ஒன்றுந் துணிதற் கிடமே யில்லை.

இங்ஙனமாக எங்குநோக்கினும் சந்தேகமயமாயுள்ள சில சில போலிக் காரணங்களைச் சரித்திர-ஆதார முள்ளன போல எடுத்துக்காட்டிக் கர்ணபரம்பரையிற் கேட்கப்படும் வரலாற்றினை ஐயனாரவர்கள் அநாதரவு செய்கின்றார்கள். வரலாற்று முறையை மறுக்கும்விதம் இவ்வாறாயிற்று. தொல்காப்பியத்தின்கண், பாணினியாரது கருத்துக்கள் சில காணப்படுதற்கு இரண்டு உதாரணங்கள் என்னாற்காட்டப்பட்டன. அவற்றை மறுத்து யாதொன்றுங் கூறினார்களில்லை யென்பது அறிஞர்களால் சிந்திக்கற்பாலது.

**போலிக் காரணங்கள்**

இதனையடுத்து, சிவஞானசுவாமிகள் 'வடமொழி யுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' என்று கூறியதனைப்பற்றி ஐயனாரவர்கள் எழுதுவனவற்றை நோக்குவோம். அவ் வாக்கியத்தின் பொருளை 2 பக்கங்களில் (415-416) விளக்குகின்றார்கள். பொருள்விளக்க மொன்று எழுதும் ஆவசியகந்தான் உண்டோவெனப் பலரும் ஐயுறுதற்கு நியாயம் உளது. சுவாமிகள் தமது ஆராய்ச்சித்திறத்தானும் கருத்துக்கள் தெளிவுபெற நிகழ்கின்ற இயல்பானும் நிரம்பிய சொல்வன்மையானும், யாண்டும் பொருண்மயங்க இடமின்றி நயம்பட எழுதுந் தன்மையாளர். இவ்வியல்பிற் கேற்கவே ஈண்டும் வாக்கியம் தெளிவாக அமைந்திருக்கின்றது. எனினும் அது பிழைபட வுணரப்படுகின்றது. பாணினீயம் முதலிய வடமொழி வியாகரணங்களுக்கில்லாத சிறப்புத் தமிழிற்குப் பெரிதும் உண்டாதலாலே 'தெய்வச்செந்தமிழின் தொன்மையும் பெருமையும் உணர்ந்து இன்பமுறல் வேண்டுவார்க்கு வடமொழிப்பயில்வும் வேண்டப்படுவ தொருதலையா'மென்று

**சிவஞான சுவாமிகளின் வாக்கியப் பொருள்**

காரணங்காட்டி, இக்காரணம் பற்றியே சுவாமிகள் மேற்குறித்த வாக்கியத்தை எழுதியுள்ளார்கள் என்பதேதான் ஐயனுரவர்களது விளக்கப்பொருள். ஆனல், வாக்கியத்திற்கு நேரே முந்தியிருக்குந் தொடர் இவ்விளக்கவுரை பிழையென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. 'யாம் கூறியதே வடநூலார்க்கும் உடன்பாடாதல் மாபாடியம் வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்பதே அத்தொடர். இதனுல் தாம் கூறியதற்கு ஆதாரமாக வடநூற் கருத்துக்களைத் தருகின்ருரென்பது புலனும். சுவாமிகளது முதற் சூத்திரவிருத்தியிற் பல இடங்களிலும் இங்ஙன்ம் ஆதாரங் காட்டுதலைக் காணலாம். தமிழிலக்கண வுணர்ச்சிக்கு வடநூல் வியாகரணங்கள் பெரிதும் பயன்படுவனவாம் என்பதே அவர்களது கொள்கை. ஆனது பற்றியே தமிழ் நூலொன்றேவல்ல உரையாசிரியர் முதலியோரைச் சிறிது கடிந்துரைத்தும் இருமொழியினும் வல்ல சேனவரையரைப் புகழ்ந்துரைத்தும் செல்வர். உதாரணம் முதற் சூத்திர விருத்தியில், 26-ம் பக்கத்திற் காண்க. ஆகவே, சிறப்பில்லா மொழியொன்றினை யறிந்தவர்க்கே சிறப்புடைய பிறிதொரு மொழியின் பெருமை உணரலாகும்: என்ற வேற்றுமைநயம்பற்றி யன்று சுவாமிகள் மேலைவாக்கியம் எழுதியது. இவ்வுண்மையை 'யோகிகளியற்றிய நூல் வல்லார் வாய்க்கேட்டுணர்க' என்று ஐயனுரவர்கள் எழுதிய வாக்கியங்கொண்டே அவர்களுக்குப் புலப்படுத்த நேர்ந்தமைக்குப் பெரிதும் மனம் உளைகின்றேன். முடிவில் 'உலகியற்பொருளறிவும் பிறவும் கைவந்தவர்க்குத் தமிழுணர்வொன்றுமே போதாது, வடநூலுணர்வும் வேண்டப்படும் என்பது சிவஞானசுவாமிகளுக்கும் கருத்தாகும்' என்று யான் நினைப்பதாக எழுதியிருக்கிருர்கள். யான் ஓரிடத்தும் இங்ஙனம் எழுதியதில்லை. அன்றியும், இத்தொடர் பல பொருள்களை யுட்கொண்டதாகவும் மிகப்

பொதுவாகவும் உள்ளது; பொருள் நிச்சயமில்லா இவ் வாக்கியத்தை யெழுத எவருந் துணியமாட்டார்கள். வேறொரு விஷயமும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். சுவாமிகள் 'ஒன்றுபற்றி யொரோவிடத்துக் கூறியதுகொண்டு பிள்ளையவர்கள் வடநூல் **வழீஇயது** தமிழ்நூலெனக் குறித்தார்கள்' என்று ஐயனுரவர்களால் எழுதப்பட்டுளது. இக்கருத்தும் எனக்குப் புதுமையே யாகும். வடநூல் **வழூவி**த் தமிழ்நூலாயிற்றென்பதிற் பொருள் யாதும் இல்லை; அர்த்தமில்லாத தொடர்களையும் யான் கூறுதனவற்றையும் என்பாற் படுத்துவது ஐயனுரவர் களுக்குத் தகாது. வடநூல் **வழியது** தமிழ்நூலென்பது அவர்கள் கூறக்கருதியதாயின், அவ்வகையும் யான் ஓரிடத் தும் எழுதியதில்லை.

இதுகாறும், எனது முடிபிற்கு ஏதுவாதலின்றி எனது கருத்துக்களில் இரண்டினை ஆதரிப்பனவாக யான்தந்த இருவரது கூற்றுக்களையும், எனக்கு உடன் பாடன்றெனினும் அபிப்பிராயம் இத்துணை சென்றுளது எனக் காட்டற்கு மாத்திரம் யான் கூறிவிடுத்த தீக்ஷிதரது கொள்கையினையும், ஐயனுரவர்கள் ஆராய்ந்து முடித்த பரிசு இவ்விதமென வுணர்த்தினேன். இனி, யான்தந்த ஏதுக்கள் மூன்றனுள், தருக்கித்தற்கென அவர்கள் எடுத்துக்கொண்ட இரண்டனை யும் எவ்வாறு ஆராய்ந்திருக்கிறார்களென நோக்குதல் வேண்டும். முதலாவதாக, தமிழிலுள்ள சொற்களில் ஒரு பெரும்பகுதி வடமொழிப் பதங்களாம் என்றேன். இதனை 4 பக்கத்தில் (398-401) விசாரணை செய்கின்றார்கள். ஆனால் வடமொழியினின்றும் பிறந்ததே தமிழ் என்று யான் கருது வதாகக் கூறிக்கொண்டு அதனையே மறுக்கிறார்கள்! ஓரிடத் தும் யான்தந்த கருத்து மறுக்கப்படவேயில்லை. எனது முடிபினையே அவர்களும் வலியுறுத்துகின்றார்கள். சங்கச்

**சொற்பொருள் விசாரணை**

செந்தமிழ் நூல்களில் ஆரியச்சொற்கள் காணப்படுதலும் அவை பிற்றைஞான்றைத் தமிழ்நூல்களிற் பெருவரவினவா யுண்மையும் அவர்களுக்கும் உடன்பாடே. ஆனால் ஆரியருந் தமிழ்மக்களும் 'நெருங்கிவாழாது வேறுயிருந்த காலத்தே எழுதப்பட்ட நூல்களில் விரவிய சொல் வழக்குக் காணப்படுதல் 'சிறிதும் இல்லையென்க' என்று மட்டுஞ் சேர்த்திருக்கின்றார்கள். இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலெனக் கூறப்பட்டுள்ள தொல்காப்பியத்தின் கண்ணே, செயயுளீட்டச் சொல் வகைகளுள்ளே, வடசொல்லும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. 'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், **வடசொலென்**—றனைத்தே செய்யு ளீட்டச்சொல்லே' என்பது தொல்காப்பியம். ஆகவே இடைச்சங்க் நூல்களினும், கடைச்சங்க நூல்களினும் வடசொற்கள் பயின்றிருந்தமை தெளியலாகும். முதற்சங்கத்தாரது நூலென **அகத்தியம்** கூறப்பட்டிருக்கின்றது. 'பலவி னியைந்தவுமொன்றெனப் படுமே-அடிசில் பொத்தகம் சேனை யமைந்த-கதவம் மாலை கம்பல மனைய' என்றது அகத்தியச் சூத்திரமாகப் பழைய வுரைகாரர்களால் தரப்பட்டிருக்கின்றது. இச்சூத்திரத்தினுள்ளே வடசொற்கள் பயின்றுவந்திருத்தல் காணலாம். எனவே முதற்சங்கத்து நூலினும் வடசொற்கள் ஆளப்பட்டுள்ளமை விளங்கும். முதற்சங்க காலத்துக்குமுன் தமிழ்நூல்கள் இருந்தனவாகக் கூறுதற்கு ஆதாரமில்லை. ஆரியரோடு விரவாதகாலத்துத் தமிழ்மக்களிடையே நூல்களிருந்தனவெனற்கும் ஆதாரமில்லை. நூல்களிருந்தனவென்று கொண்டவிடத்தும் அவற்றைப்பற்றியொன்றும் கூற ஏலாது. இக்காரணங்களால் ஐயரவர்கள் சேர்த்தெழுதியிருப்பது பொருந்தாது.

எனது ஏதுக்களில் இரண்டாவதாக, 'நூற்குரிய விஷயங்களெனத் தமிழில் எடுத்தாளப்பட்டவற்றுட் பெரும்

பாலன வடமொழி நூலிலுள்ள விஷயங்களாம்' என்று யான் கூறியதனை 5 பக்கங்களில் (407—411) மறுத் தெழுதுகின்றூர்கள். ஐயஹரவர்கள் மறுக்கும் முறையை இப்பகுதி நன்கு விளக்கு கின்றது. யான் தந்துள்ள ஹேது அவர்களால் கீழ்வரும் ரூபத்தில் தரப்படுகின்றது:—

**விஷய விசாரணை**

'செந்தமிழ் நல்லிசைப் புலவர் நூற்குரிய பொருள்க ளெனக்கொண்டு உரைத்தவெல்லாம் வடமொழி நூற்குரிய பொருள்களாமன்றித் தனித் தமிழ்க்கென ஒரு பொருள் ஏற்பாடு இல்லை.'

இதற்கும் யான் கூறியதற்கும் பெரிதும் வேறுபாடு உளது. **பெரும்பாலன** வடமொழி நூல்விஷயங்களாமென் றேன்; அவர்கள் **எல்லாம்** வடநூற்குரிய பொருள்களாம் என்றுதமக்கு ஏற்றவாறுமாற்றிக்கொண்டார்கள். இவ்வாறு மாற்றியது கைப்பிசகுமன்று. வேண்டுமென்றே மனமாரக் கருதிக்கொள்ளப்பட்டதாமெனல் 'தனித் தமிழ்க்கென ஒரு பொருளேற்பாடு இல்லை'யென்று எதிர்மறைமுகத்தானும் அவர்கள் கூறுதலால் விளங்கும். யான் கூருததனையும் கருதாததனையும் கூட்டி யமைத்துக்கொண்டதனோடு அவர் கள் நிற்கவில்லை. தமிழ்க்கெனவுரிய பொருளின் ஏற்பாட்டி னைப்பற்றி விரிவாய் ஆராய்கின்றூர்கள்! பொருட் பாகுபாட் டினைப்பற்றி யான் யாதும் கூறவில்லை. நூற்குரிய விஷய மென்றதனல் யான் கருதியது வேறு; ஐயஹரவர்கள் கொண்ட பொருட்பாகுபாடு வேறு. இங்ஙனம் எனது முக் கியமான கருத்தினையும் திரித்துணர்ந்து கொள்கின்றூர்கள். இத் திரிபுணர்ச்சி எனது முதல் உதாரணமாகிய திருக் குறளை நோக்கிப் பிறந்ததாகும். யான் காட்டிய இரண்டொரு உதாரணங்களை யொருவகையான் மறுத்துவிட்டால், பல வுதாரணங்களினின்றுந் திரட்டப் பெற்றவொருமுடிபு மறுக்

க்கப்பட்டதாகுமென நினைத்தார்கள் போலும்! முதலுதாரண மாகிய திருக்குறளை எடுத்துக்கொண்டு அதன்கண் தமிழ் நூற்குரிய பொருட்பாகுபாடே காணப்படுவது என நிறுவ முயல்கின்றார்கள். நிறுவுமுறை வருமாறு:—

1. அகம், புறம்: என்றது தமிழ்ப்பாகுபாடு: இது தொகை.

2. அறம் பொருள் இன்பம் வீடு: என்பது மேலை தன் விரி.

3. இங்ஙனம் விரித்தும் தொகுத்தும் கூறும் மரபு தனித் தமிழிற்கே உரியது.

4. அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ் மரபிற்கே உரியது.

5. வள்ளுவர் வீடுங் கூறியுள்ளார்; நாற்பொருட் பாகுபாட்டினை முற்றும் எடுத்தாளுகின்றனர்.

ஆதலின் வள்ளுவர்கொண்டது தமிழ்நூற்குரிய பாகு பாடே.

இவற்றுள் முதற்கூற்றொழிய ஏனையவெல்லாம் பிழையாகும். அகம், புறம்: என்ற தமிழ்ப் பாகுபாட்டால், திருக்குறள் விஷயத்தை விளக்குதற்கு ஏலாது. ஆனதுபற்றி அறமுத லிய பாகுபாடு தமிழ்க்குரியதே யென நிறுவப் பெரிதும் முயல்கின்றார்கள். அகம், புறம் என்ற தொகையின் **விரியே** அறமுதலிய நான்கும் என்றார்கள். இருவகைப் பாகுபாடும் வேறு வேறு நோக்கம்பற்றியும் நியாயம் பற்றியும் எழுந்துள்ளனவாதலின் ஒன்றினைத் தொகையென்றும் மற்றதனை அதன் விரியென்றும் கூறுதல் சிறிதும் பொருந் தாது. விரித்தும் தொகுத்துங் கூறும் மரபு தனித்தமி ழிற்கே உரியதென்றார்கள். இவ்வாறுகூற ஐயரவர்கள் துணிந்தமைக்குப் பெரிதும் ஆச்சரியமடைகின்றேன்! இது

தமிழர்க்கன்றி வடமொழிவாணர்க்கு அறிவென்பதே இல்லை யென்று கூறுவதனேடொக்கும்! முதல் அத்தியாயத்தில் கௌடில்யர் தமது நூற்கருத்தைத் தொகுத்துக் கூறிப் பின் முறைப்பட விரித்துச் செல்கின்ருர். இஃதொன்றே அவர்கள் கூறியது தவறெனக் காட்டற்குப் போதியது.

அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ் மரபிற்கே யுரியதென்ருர்கள். வடமொழியில் அறமுதலிய நான்கும் 'சதுர்வர்க்கம்' என்ற சங்கேதத்தால் வழங்குதல் பிரசித்தம். 'சதுர்வர்க்க பலம் ஜ்ஞானம்' என்பது ரகுவம்சம் (X-22). 'த்ரிவர்க்கோ தர்ம காமார்த்தை: சதுர்வர்க்க: ஸமோக்ஷகை:' என்பது அமரம். கௌடில்யரும் காமந்தகரும் 'த்ரிவர்க்கம்' 'சதுர்வர்க்கம்' என்பவற்றைப்பற்றிக் கூறுகின்ருர்கள். ஐயரைவர்களும் 'பொருள்கள் உலக வழக்கானும் வேதவழக்கானும் அறமுதலியவாக விரித்துக்கூறப்படும்' எனத் தம்மையறியாமல் இலக்கண விளக்கத்திலிருந்து எடுத்தெழுதிவிட்டார்கள். ஆகவே இக்கூற்றும் பிழையாம். வள்ளுவர் வீடுங் கூறியுள்ளார் என்ருர்கள். முப்பாலாக வெளிப்பட வகுத்துக்கூறிய நாயனரை வீடுங்கூறினரென்றல் எங்ஙனம் பொருந்தும்? திருக்குறளுக்கு 'முப்பால்' எனவொரு பெயரும் உளதன்ரே? புருஷார்த்தம் நான்குங் கூறினரென உரைத்திருப்பதெல்லாம் உபசாரமாத்திரையே யென்று அறியத் தக்கது. வீடுங்கூறினரென்று கொண்டவிடத்தும் எனது உதாரணம் பாதிக்கப்படுமாறில்லை: அறம் பொரு ளின்பம் வீடென்னும் பாகுபாடு தமிழ்க்குரியதன்று என்பது சித்தாந்தமாகலின்.

மரபு விசாரணை

முதலுதாரணம் பற்றிய ஆராய்ச்சியை இங்ஙனமுடித்து இரண்டாவது உதாரணமாகிய இராமாயணத்தை யெடுக்கிருர்கள். 'கம்ப நாடர் வான்மீகி ராமாயணத்தைப் படியெடுத்துக் காதைகள் முறைபிறழாமற் செய்தார்' என்

பதே அவர்கள் கூறுவது. இராமசரிதமாகிய விஷயத்தை யெடுத்துக்கொண்டது மாத்திரமன்றிக் கதையினை விரித் துரைக்கு முறையின்கண்ணேயும் வான்மீகியாரைப் பின்பற் றினர் கம்பர் என்பது அவர்கள் கருத்தாக முடிகின்றது. ஆகவே இவ்வுதாரணமும் பிழையெனக் காட்டப்படவில்லை.

இவ்வாருக, எனது முன்னுரையின் பிரதான முடி பினைக் கைந் நெகிழவிட்டு, என்னையும் எனது கருத்துக் களையும் ஆதரித்துரைத்த ஆசிரியரிருவரையும் மயங்கி யுணர்ந்துகொண்டு, யான் தந்த ஹேதுக்களைச் சரிவர அறிந்துகொள்ளாது, அவற்றைக் கண்டித்துக் கூறுவார் போன்று சில சில எழுதி, இராஜையனுரவர் கள் மறுப்புரையொன்று வெளியிட்டிருக்கின் ருர்கள். தமிழுக்கு வடமொழி செவிலித் தாய் நிலையில் உதவி வந்திருக்கிறதென்ற முடிபு அணுத் துணையும் மறுக்கப்படவில்லை. தமிழன்னை மீதுள்ள உண் மையான பக்தியினுல் அவளுக்கு உண்மைத்தொண்டு புரி தல் வேண்டுமென்னும் நோக்கமொன்றே எனது உரை களுக்குக் காரணமாமென்பதை மாத்திரம் ஐயனுரவர்களுக் குத் தெரிவித்து எனது எதிருரையை முடிக்கின்றேன்.

**எதிருரையின் முடிவுரை**

# 3, தொல்காப்பியரும் மொழி வளர்ச்சியும்

## 1

தமிழின் தொன்மை

தென்னிந்தியாவில் வழங்குந் திராவிட மொழிகளுள்ளே தமிழ்மொழி தனிப்பட்ட சிறப்புடையதாக விளங்குகின்றது. அதன் சிறப்பியல்புகளுள் ஒன்று ஒருவர் கண்ணையும் தப்ப முடியாததாக உள்ளது. (தெலுங்கு மொழியை எடுத்துக்கொள்வோமாயின், அதற்குரிய ஆதியிலக்கியமாகிய நன்னய பாரதம் என்ற நூல் கி. பி. 11-ம் நூற்றாண்டில் தோன்றியதாகும்.) கன்னடமொழியை யெடுத்துக்கொள்வோமாயின்; அதற்குரிய ஆதியிலக்கியமாகிய கவிராஜமார்க்கம் என்ற நூல் கி. பி. 9-ம் நூற்றாண்டில் தோன்றியதாம்.) மலையாள மொழியை யெடுத்துக்கொள்வோமாயின், அதற்குரிய ஆதியிலக்கியமாகிய ராமசரிதம் என்ற நூல் கி. பி. 14-ம் நூற்றாண்டில் தோன்றினமை பிரசித்தம்.) ஆனால் தமிழ் மொழியின் ஆதியிலக்கியங்களோ, இப்போது அறுதியிட் டிருக்கின்றபடி கிறிஸ்துவப்தத்தின் ஆரம்ப காலத்திலே தோன்றியனவாகும். இங்கே ஆதியிலக்கியங்களென்றது இப்போது அகப்படுவனவற்றுள் காலத்தால் முற்பட்டனவற்றையே. இவ்விலக்கியங்களின் திருந்திய வடிவங்களையும் செய்யுளழகுகளையும் முதிர்ந்த பக்குவத்தையும் நோக்குமிடத்து, கிறிஸ்துவப்தத்திற்கு மிகமிக முற்பட்ட காலத்தே தமிழிலக்கியங்கள் உருப்பெறத் தொடங்கி யிருத்தல் வேண்டுமென்று எளிதில் ஊகித்தல் கூடும்.

இத்தொன்மைபற்றி, தமிழ் மக்களாகிய நாமனைவரும் பெருமை மேற்கொள்ளுதல் இயல்பே. இதனினு மிக்க

தொரு சிறப்பு நமது மொழிக்கு உள்ளது. திராவிட வகுப்பிற் பிறமொழிகட்குரிய ஆதியிலக்கியங்களெல்லாம் வடமொழி நூல்களின் வழிவந்தனவாம். உதாரணமாக, தெலுங்கு நூல்களுள் காலத்தால் முந்திய நன்னைய பாரதம் என்ற நூல் வடமொழியிலுள்ள வியாஸ பாரதத்தைப் பின்பற்றியது. தமிழிலக்கியங்களுள் காலத்தால் முந்திய நூல்கள் இப்பெற்றியனவல்ல. இவைகள் பரந்துபட்ட உலகியலறிவும், இயற்கையொடு ஒற்றித்து நின்று அவ்வியற்கை நலன்களனைத்தையும் ஆழ்ந்து நுகரும் உணர்ச்சிவலியும், பொருள்களை நுணுகி யாராய்ந்தறியும் அறிவாற்றலும் உடைய தமிழ்ப் புலவர்கள் தாமே புதுவதாகப் புனைந்த செய்யுட்களால் இயன்றன. புறநானூறு என்ற சங்ககாலத்துத் தொகை நூலை யெடுத்துக்கொள்க. இதன்கண்ணுள்ள செய்யுட்கள் வடமொழி நூலொன்றினைப் பின்பற்றி இயற்றப்பட்டன வென எவரும் கூறுர். இங்ஙனமே பிற தொகைநூல்களும் அமைந்துள்ளன.

**பொருண்மைச் சிறப்பு**

இது பொருண்மைபற்றிய சிறப்பியல்பு. பெரும்பாலும் இப்பொருண்மை தமிழ்மொழிக்கெனத் தனியுரிமை பூண்டு நிற்பினும், ஒரோ விடங்களில் பிறமொழிநூற் கருத்துக்களோடு ஒப்புமை யுடையதாய் அமைதலுங் கூடும். அருகியே வரற்பாலதாகிய இவ்வொப்புமை தானும் அமைதற் கியலாத பிறிதொரு சிறப்பியல்பு மூன்றுவதாக நோக்கத் தக்கது. (தெலுங்கு முதலிய பிறமொழிக்குரிய ஆதியிலக்கியங்கள் வடமொழி யிலக்கணங்களைப் பின்பற்றிய செய்யுட்களால் இயன்றுள்ளன. ஆனல் தமிழ்மொழியிலுள்ள ஆதியிலக்கியங்களாகிய எட்டுத் தொகை நூல்களோவெனின், தமிழிற்கே சிறந்துரியவாய் வடமொழி யிலக்கண இலக்கியங்களிற் காணப்பெருதவாயுள்ள இலக்கண மமைந்த செய்யுள் வகை

**செய்யுட் சிறப்பு**

களால் இயன்றுள்ளன. அகவற்பா, கலிப்பா, வெண்பா முதலியன தமிழிற்கே தனித்துரிய செய்யுள் வகைகளாம். இவைகள் தமிழ் மக்களது கருத்து நிகழ்ச்சிக்கும், தொன்று தொட்டு வந்து வழக்கு நிரம்பிய தொடரமைதிக்கும், தமிழ் மக்களது செவியுணர்விற் கொத்த இசை யினிமைக்கும் பொருந்துமாறு அமைந்தன ; தமிழிற்கே தனியுரிமையென முத்திரையிடப்பெற்று வெளிப்போந்து வீறுற்று உலவின.)

இங்ஙனமாக இலக்கியத் தொன்மையாலும், இலக்கியப் பொருண்மையாலும், இலக்கியத்துக்குரிய செய்யுள்மர பாலும் திராவிட மொழிகளுக்குள்ளே தமிழ் மொழி சிறப்பியல்களுடையதாதல் காணலாம். இச்சிறப்பியல்களுள் பின் இரண்டற்கும் அடிப் படையாயுள்ளது யாது என்ற கேள்வி யெழுதல் இயல்பு. தமிழ்மொழியின் இயற்கையில் அமைந்த தத்துவமொன்றே இச்சிறப்பியல்களாகப் பரிணமித்தது என்றலே அமை வுடைத்து. இத் தத்துவத்தை 'Individuality' அல்லது 'Genius' என்று ஆங்கில அறிஞர் கூறுவர். தமிழின் தனிப்பண்பு என்று நாம் இதனைக் குறிப்பிடலாம்.

**தமிழின் தனிப்பண்பு**

தமிழின் தனிப் பண்பு என்பது பற்றிச் சிறிது கூர்ந்து ஆலோசித்தல் இன்றியமையாதது. முதலாவது, இப்பண்பு யாவர்க்கும் எளிதிற் புலப்படக்கூடியதாய்ப் பிறமொழிகளின் பண்புகளினின்று எளிதில் வேறு காணக் கூடியதாய்த் தெளிவாயுள் ளது. இரண்டாவதாக, இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மொழியின் சரிதத்தை ஒருவகையாக நாம் அறிந் திருக்கின்றோம். [எத்தனையோ மொழிகளோடு கலந்துற வாட வேண்டும் நிலைமை அதற்கு ஏற்பட்டது ; எத்த னையோ சமயப்போராட்டங்களால் அதன் இலக்கிய நெறி அலைப்புண்டது; எத்தனையோ உட்கலகங்களாலும் புறக் கலகங்களாலும் தமிழ்மொழி வழங்கிய நிலம் தாக்குண்டு

**தனிப்பண்பின் இயல்பு**

அதிர்ந்தது. எனினும் இப்பண்பு தமிழ்மொழியின் சரிதத்தில் ஓரிடத்தேனும் காணப்படாமற் போகவில்லை; யாண்டும் முனைத்துக் காணப்படுகின்றது. மூன்றுவதாக, இப்பண்பு மொழிவளர்ச்சியின் கதியையும் இலக்கிய வளர்ச்சியின் கதியையும் ஒருவாறு நெறிப்படுத்தி, அவை இன்னவாறு செல்லவேண்டுமென்று நியமனஞ் செய்கின்றது.]

இந்நியமத்தைக் கடப்பது யாவர்க்கும் அசாத்தியமாயிற்று. இயற்கைச் சக்திகளை வெல்லவேண்டுமாயின் இயற்கைச் சக்திகளைக்கொண்டே வெல்லுதல் வேண்டும். இயற்கைச் சக்திகளை ஒரு நெறிப்படுத்த வேண்டுமாயின், அவ் இயற்கைச் சக்திகளைக்கொண்டே அவ்வாறு செய்தல் இயலும். இயற்கைச் சக்திகளுக்கு அடங்கினுலன்றி, இயற்கையை வெல்லுதல் கூடாது. பிரகிருதி சாஸ்திரத்தில் நிலை கண்ட இவ்வுண்மையோடொத்து, தமிழின் தனிப் பண்பிற்கு அடங்கியே, மொழியிலும் இலக்கியத்திலும் மாறுபாடுகள் இடம் பெறுவனவாயின.

இவ்வாறு கூறிய அளவில், கைகாலை அசைக்க வொட்டாதபடி தளைக்கும் விலங்கு போன்று இத் தனிப்பண்பு உளதாயிற்றென்று எண்ணுதல் தவருகும். (இப்பண்பு ஒரு கடுந்தளை போன்றதாயின், வளர்ச்சியென்பதும் அபிவிர்த்தியென்பதும் இல்லாமற் போய்விடும். இவ்விரண்டும் இல்லையெனின், வெகு சீக்கிரத்தில் கேடுவிளையுமென்பது திண்ணம். கேடுருது வளர்ந்தோங்கி வந்த தன்மையினுலும் அவ்வப்போது புதியனவாக எழுந்த நூல்களாலும் மொழி வளர்ச்சியினுலும் மேற்குறித்த தனிப்பண்பு மொழி வளர்ச்சி முதலியவற்றிற்கு இடையூறு விளைக்காதபடி பயன்பட்டு வந்ததென்றே நாம் கொள்ளவேண்டும்.) நமது சமுதாய வளர்ச்சியிலே இரண்டு வகையான சக்திகள் உளவாதலைக் காணலாம். (ஒன்று வளர்ச்சியை மட்டுங் குறியாக உடைய தாய்ப் பிறிதொன்றனையுங் கணியாதபடி நம்மை ஈர்த்துச்

செல்லும் சக்தி; இதனை 'Liberalism' என்ற ஆங்கில பதத் தாற் குறிப்பிட்டால் எளிதில் விளங்கக் கூடும். பிறிதொரு சக்தி வளர்ச்சியை மட்டுப்படுத்துப் பூர்வநிலையை வலிமை யுறுவித்தலைக் குறியாகவுடையது. இதனை 'Conservatism' என்ற ஆங்கிலப் பதம் நன்கு விளக்கவல்லது. இந்த இரண்டுவகையான சக்திகளும் சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. இந்த இரண்டும் ஒன்றோடொன்று போராடியே முன்னேற்றம் சிறிதுசிறிதாய் நிகழ்வதாகும். இரண்டாவது கூறிய 'Conservatism' என்னும் நியமசக்தி யில்லையாயின், சமுதாய நிலை கெட்டுப் போய்விடும். இந்நியம சக்தியைப் போன்றதே மேற்குறித்த தனிப்பண்பு. எனவே உண்மையான மொழி வளர்ச்சிக்கு இடந்தந்து தனது பூர்வ நிலையைப் பாதுகாத்து வந்தது இத் தனிப்பண்பு என்று நாம் ஐயமறக் கொள்ளலாம்.

'மொழிவளர்ச்சி' என்று கூறிவந்தேன். இம்மொழி வளர்ச்சி தானும் எத்தகையதென நோக்குதல் வேண்டும்.

**மொழி வளர்ச்சியின் காரணங்கள் : வாணிகம்**

மிகப் பூர்வகாலந்தொட்டு, நந்தமிழ்நாடு வாணிகத்தில் மிகச்சிறந்ததொன்று யிருந்துவந்தது. கிரேக்கர்களும், ரோம் நகரத்தினரும், அராபியரும், சீன தேசத்தவரும் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ் நாடு வந்து, தங்கள் பண்டங்களை விற்று, முத்து முதலிய தமிழ் நாட்டுப் பண்டங்களைக் கொண்டு தங்கள் தங்கள் தேசத்திற்குச் சென்று வருவாராயினர்.

**குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு**
**குணதிசை மருங்கிற் காரகில் துறந்து)**

என்று வருஞ் சிலப்பதிகார அடிகள் இவ்வாணிகத்தின் தன்மையை ஒருவாறு விளக்குவன. இவ் அயல்நாட்டினருள் ஒருசிலர் தமிழ்நாட்டிற் பலவிடங்களிலும் நிலையாய்க் குடியிருந்தோரு முளர். இவர்கள் வாழ்தற்கெனத் தனியே

அமைக்கப்பட்ட ஊர்ப்பகுதிகளும் காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களில் இருந்தன வென்பது

**கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்**
**பயனற வறியா யவன ரிருக்கையும்** (சிலப். 5, 9-10)

எனச் சிலப்பதிகாரம் கூறுதலால் அறியப்படுகின்றது. (யவனர் முதலிய அயல் நாட்டு வணிகர்கள் கூட்டுறவினால் தமிழ்மொழி நல்ல பயனை யடைந்திருத்தல் வேண்டும். தமிழ்ச்சொற்கள் அனைத்திற்கும் சொல்லாக்கங் காட்டும் நூலொன்று தக்க ஆராய்ச்சியின் பயனாக வெளிவருமாயின், அப்பொழுது பிறமொழி மக்களால் தமிழ் அடைந்துள்ள வளத்தினை யளந்தறிதல் கூடும்.) இப்பொழுது ஒரு சொல்லை மாத்திரம் குறிப்பிட்டு அமைகின்றேன். ('எழினி' என்ற சொல்லைத் தமிழறிஞர்கள் அறிவார்கள்; இச்சொல் 'திரைச் சீலை' என்று பொருள் படும். இது 'யவனிகா' என்ற சொல்லின் திரிபாகும். எனவே இச்சொல் யவனர்களோடு தொடர்புடையதென நன்குணரலாகும். ஓரை, சுருங்கை என்பனவும் இத்தகையனவே.)

**பிறநாட்டினரோடு கூட்டுறவு**

வாணிக மூலமாக ஏற்பட்ட மொழிவளர்ச்சி யொருபாலிருப்ப, தமிழ் மக்கள் தம்நாட்டிற் குடியேறிய அந்நியர்களோடு பயின்று வந்தமையாலும் அடுத்துள்ள பிறநாடுகளுக்குச் சென்று வாழ்ந்து பின் திரும்பித் தம்மவரோடு கலந்திருந்தமையாலும், மொழிவளர்ச்சி மற்றொருபால் ஏற்பட்டது. இவ்வாறு புகுந்த சொற்களுள் பெரும்பாலனவற்றைத் திசைச் சொற்களெனப் பண்டையாசிரியர்கள் குறியீடு செய்துள்ளார்கள். தொல்காப்பியனாரும்,

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று**
**அனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே** எனவும்

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி** எனவும்

கூறுகின்றனர். இங்கே பன்னிரு நிலமென்றது

**தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி**
**பன்றி அருவா அதன்வடக்கு—நன்றுய**
**சீதம் மலாடு புனனடு செந்தமிழ்சேர்**
**ஏதமில் பன்னிருநாட் டெண்**

எனக் கூறப்பட்ட பன்னிரண்டு கொடுந் தமிழ் நாடுகளே யாம். தமிழொழிந்த பிற தேயத்து மொழிகளை இலக்கண நூலார் பதினேழ்நிலத்து மொழியெனக் குறிப்பிடுவர். பதி னேழ் நிலங்கள்

**சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக்குடகம்**
**கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலிங்கம் கலிங்**
**கம் வங்கம்**
**கங்க மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்**
**தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்நிலந் தாமிவையே**

என மயிலைநாதர் கூறுவர். தொல்காப்பியனரது ஆசிரிய ராகிய அகத்தியனர் காலத்தும் இத்தேயங்கள் பலவற்றி னின்றும் சொற்கள் தமிழிற் புகுந்தன என்ற வுண்மை

**கன்னித் தென்கரைக் கட்பழந் தீவம்**
**சிங்களம் கொல்லம் கூவிளம் என்னும்**
**எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவம்**
**கன்னடம் வடுகு கலிங்கம் தெலிங்கம்**
**கொங்கணம் துளுவம் குடகம் குன்றம்**
**என்பன குடபா லிருபுறச் சையத்**
**துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும்**
**முடியுடை மூவரு மிடுநில வாட்சி**

**யரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள்**
**பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த**
**பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்**

என்று மயிலைநாதர் காட்டும் அகத்தியத்தால் உணரலாகும். இவ் வடிகளால் தமிழ்நாட்டோடு தொடர்புடைய பிறநாடு களும் அப் பிறநாட்டு மொழிகளும் ஒருவாறு அறியக் கிடக் கின்றன.

மயிலைநாதர் காட்டும் உதாரணங்கள் இங்கே அறிதற் குரியன: (தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்றம் என் றும், சோற்றினைச் சொன்றி என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச் சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும் வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழி நாட்டார் சிறு குளத்தைப் பாழி என்றும், பன்றி நாட்டார் செறு வைச் செய் என்றும், அருவாணட்டார் சிறுகுளத்தைக் கேணி என்றும், அருவாள் வடதலையார் புளியை எகினம் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், மலா டார் தோழியை இகுளை என்றும், புனனாட்டார் தாயை ஆய் என்றும் வழங்குவர் (நன். 272, உரை).)

வாணிகம் காரணமாகவும் கூட்டுறவு காரணமாகவும் நிகழ்ந்த மொழிவளர்ச்சியைக் கவனித்தோம். (இனி, அரசி யல் மாற்றம், படையெடுப்பு முதலியவற்றால் ஏற்படும் மொழிவளர்ச்சியைக் கவனித்தல் வேண்டும். இம்மாற்றங்கள் முதலியன பிற் பட்ட காலத்தில் மிகுதியாக நேர்ந்தன. இவற் றாற் சொற்கள் வழக்கிற் புகுந்தமையைக் கலிங்கத்துப் பரணி மிக அழகாகத் தெரிவிக்கின்றது:

**அரசியல் மாற்றம் முதலியன**

**மழலைத்திரு மொழியிற்சில**
**வடுகுஞ்சில தமிழும்**
**குழறித்தரு கருநாடியர்**
**குறுகிக் கடைதிறமின்**

போரின்கண்ணே சிறைப்படுக்கப்பட்டு வேளம்புகுந்த கருநட தேயத்துப் பெண்டிர் சில வடுகுச் சொற்களையும் சில தமிழ்ச் சொற்களையும் தம் மழலைப் பேச்சிற் கலந்து குழறி மொழிந்தன ரென்பது இங்கே கூறப்படுகின்றது. இச் செய்யுள் தோன்றிய காலம் 11-ம் நூற்றாண்டாகும். இதற்கு முன்னும் பற்பல காலங்களில் அரசியல் மாற்றங்கள் நேர்ந்திருத்தல் வேண்டும். அவ்வக் காலங்களில் வழக்கிற் புகுந்த சொற்களும் பலவாதல் வேண்டும். உதாரணமாக, நாயக்க அரசர்கள் தமிழ் நாடுகளை யாண்டபொழுது வழக்கிற் புகுந்த வடுகுச் சொற்கள் எத்தனையோ உள்ளன. தமிழ் நாட்டு அரசியற் சரிதமும், மொழிநூற் சரிதமும் விரிவாக ஆராய்ந்து எழுதப்படும்பொழுது, இவ் வழக்காறுகள் தெள்ளிதின் உணரப்படும்.)

**அறிவுக் கூட்டுறவு**

மொழி வளர்ச்சிக்குரிய காரணங்களுள் மேற்குறித்த மூன்றனையுந் தவிர, வேறொரு அதிமுக்கியமான காரணமும் உளது. (அது 'அறிவுக் கூட்டுறவு' என்று சொல்லற்பாலது. இரண்டு சமுதாயங்கள் ஒன்றுகூடுமிடத்து ஒன்றன் பழக்கவழக்கங்கள் பிறிதொன்றன் பழக்க வழக்கங்களைச் சிறிதேனும் வேறுபடுத்தாமற் போகா. ) இங்ஙனமே மக்களுள் இருவர் ஒன்றுகூடிய விடத்து ஒருவன் மற்றவனைப் பல பிரகாரத்தானும் வேறுபடுத்துவன். இவ்வேறுபாடு வேண்டுமென்று முயன்று நிகழ்த்துவதுமன்று. மக்களுக்கு இயல்பாக உரிய நடிப்புக் குணமொன்றே இங்ஙனம் ஒருவனை மற்றொருவன் பின்பற்றுதற்குப் போதியது.

இதுபோன்றே அறிவுக்கூட்டுறவும் முற்காலத்து நிகழ்ந்து வந்தது. இக் கூட்டுறவிற்கு முக்கிய வாயிலாக அமைந்தது சமயமாம். கிறிஸ்துவப்தத்தின் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஜைன சமயமும்

பௌத்த சமயமும் வட இந்தியாவில் தோன்றிப் பாரத தேச முழுமையும் பரந்து சமய- உணர்ச்சியை நிலைபெறச் செய்தமை யாவரும் நன்கறிந்ததே. (சமய- உணர்ச்சியைப் பரவச் செய்தலில் முன் னின்றவர் இவ்விரு சமயங்களையுஞ் சார்ந்த துறவிகளே யாவர். இத்துறவிகள் தங்கள் சமயசாஸ் திரங்களையும்பிற நூல்களையும் நன்குகற்றுப்பின்பு அவற்றைப் போதித்தற் பொருட்டுத் தங்கள் தேசங்களை விடுத்து, அந் நிய நாடு புகுந்து, அந்நாடுகளே தமக்குரிய தாயகமாகக் கருதி வாழ்ந்து, ஆண்டுள்ள மக்களுக்குத் தங்கள் சமய சாஸ்திர முதலியவற்றைப் போதித்து, தங்கள் சமயங்களை மேற்கொள்ளச் செய்து, சமய நூலறிவோடு உலகியல் நூலறிவினையும் நம் நாட்டிற்குதவிய பேருபகாரிகள். இவ் வாறு கொளுத்தப்பட்ட அறிவு விளக்கு அங்கங்கே சுடர்விட் டெரிந்து ஒவ்வொரு நாட்டிலும் ஒளி பெருகி, மக்களுக்கு ஞானக்கண்ணாக உதவிற்று.

**அறிவுக் கூட்டுறவின் வாயில் : சமயம்**

இத் துறவிகளின் பெருஞ் செயலைச் சில காலத்துக்கு முன் நமது நாட்டிற்கு வந்து கிறிஸ்துவ சமயத்தையும் மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திர முதலியவற்றையும் ஒருங் குணர்த்திவந்த பாதிரிமார்களுக்கு ஒப் பிடலாம். பாதிரிமார்கள் தங்கள் மதங்களைப் பரப்புதலையே முதற்பெரு நோக்கமாகக் கொண்டிருந்த போதினும், முடிவிலே, பலவகைக் கல்வித்துறைகளையும் இந்நாட்டில் நிலையிடுவதற்குக் காரணமாயிருந்தார்கள்.) சம யப் பிரவர்த்தனை யெவ்வாறாயினும் அதன் பிற்பயனாய்த் தோன்றிய கல்வி யுணர்ச்சி ஒன்றானும் அழிவுறாதபடி மக்க ளிதயத்திலே வேரூன்றி நிலைபெற்று விட்டது. இது போன்றதொரு பயனே ஜைன முதலிய சமயங்கள் பரவத் தொடங்கிய முற்காலத்திலும் விளைந்திருத்தல் வேண்டும். சமய-உணர்ச்சியோடு தொடர்ந்து பற்பல உலகியல் நூலறி

**துறவிகளின் பெருஞ் செயல்**

வும் பரவத் தொடங்கி, பின் அச் சமய-உணர்ச்சி மாறியவிடத்தும் அந்நூலறிவு மாருது நிலைநின்று மக்களுக்குப் பெரும் பயன் அளித்து வந்தது.

இத்துறவிகள் தங்கள் ஸ்வதேசத்தில் கற்றுவந்த மொழியைத் தாங்கள் சென்ற தேசங்களிலும் பயின்றதோடு அவ்வத்தேசத்து மக்களுக்கும் கற்பித்து வந்தனர். இம்மொழிகள் பெரும்பாலும் வடமொழியாகவும் பாகத மொழியாகவும் இருந்தன. யாதொரு வரையறையுமின்றி இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இத்துறவிகள் சென்று சமய வளர்ச்சியின் பொருட்டு உழைத்து வந்தமையால் இம்மொழிகளும் இந்தியா முழுவதும் பரவி இந்தியப் பொதுமொழிகளாக நிலவத் தலைப்பட்டன. இவற்றுள் பாகத மொழிகள் வடமொழியின் சிதைவு எனக் கருதப்பட்டமையால், பொதுமொழியாக முடிவிற் கொள்ளப்பட்டது வடமொழியேயாம். பின்பற்பல காரணச் செறிவால் இம்மொழி பொதுமொழியாக நிலைபெற்றுவிட்டது. இக்காலத்து ஆங்கிலம் இந்தியப் பொதுமொழியாகக் கருதப் படுதற்குப் பாதிரிகளும் ஒருவாறு காரணமா யிருந்தது போல, வடமொழி பொதுமொழியாதற்கு முற்காலத்துச் சமயப் பிரவர்த்தனஞ் செய்துவந்த துறவிகள் முதலாயினோருங் காரணமா யமைந்தனர்.

**இந்தியப் பொது மொழி வடமொழி**

வடமொழி இந்தியப் பொதுமொழி யென்பது இக்காலத்துப் புதுவதாகக் கூறப்படும் புதுக்கருத்தன்று. நமது முன்னோர்கள் இதனைத் தெளிவாக உரைத்துள்ளார்கள். (மயிலைநாதர் தமது நன்னூல் விருத்தியில், 'இஃது, ஒரு நிலத்திற்கே யுரியதன்றிப் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் புவனாதிகட்கும் பொதுவாய் வருதலின், திசைச் சொல்லின் அடக்காது வேறோதினார் என்க. அஃதென்னை? வடக்கண்மொழி யென்றாராலோ வெனின், ஆண்டு வழக்

குப் பயிற்சியை நோக்கி அவ்வாறு கூறினர் என்க' என்றெழுதினர். இதன்கண் 'பொதுமொழி' என்ற கருத்து வற்புறுத்தப்படுதலோடு, 'விண்ணிற்கும் புவனுதிகட்கும் பொதுவாய் வருதலின்' என்றும் கூறப்படுகின்றது. எனவே தேவர்களுக்குரிய மொழி என்றுங் கருதப்பட்டமை தெளிவாம். இக்கருத்தினையே கம்பராமாயணமும்

**தேவ பாடையின் இக்கதை செய்தவர்**

என்ற அடியில் வைத்துள்ளது.* பிரயோக விவேக நூலாரும் தமது நூலில் 'சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும்' என்று கூறினர். தேவபாஷை யென்று கூறுவதன் கருத்து வடமொழி 'இந்தியப் பொதுமொழி' என்பதனைப் புனைந்துரை வகையால் வற்புறுத்துதலே யென்று நாம் கொள்ளலாம்.

**அறிவுக் கூட்டுறவினுல் விளைந்த மொழி—வளர்ச்சியின் இயல்பு**

சமய வளர்ச்சி மூலமாகவும் வடமொழி மூலமாகவும் ஏற்பட்ட அறிவுக் கூட்டுறவு மொழிவளர்ச்சிக்கு அதி முக்கிய காரணமாயிருந்தது. வாணிக முதலிய மூன்று காரணங்களால் வந்த சொற்கள் சாதாரண மக்களிடை வழக்கிற் புகுந்து பின் இலக்கியங்களில் இடம் பெறுவன; இச் சொற்களிலே இலக்கிய வழக்கிற் புகுமுன்புதானும் மறைந்தொழிந்தனவும் பலவாதல் வேண்டும்; அன்றியும் இவற்றிற் பெரும்பாலன தோன்றிய அவ்வக் காலத்திற் பொருளுணர்தற்கு எளியவாய்ப் பின்பு உணர்தற்கு அரியவாயிருக்கும். அறிவுக் கூட்டுறவினுல் விளைந்த சொற்கள் அறிஞர்களிடையே புகுவன; தாழ்த்தலின்றி இலக்கிய வழக்கில் உடன் இடம் பெறுவன; பொருள் வரையறுத்துணர்தற்கு இயல்வன; மொழியின் வாழ்வில் நீடித்து நிற்பன.

---

* இச் செய்யுள் மிகப் பழைய ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை.

மேற்கூறியன போன்ற காரணங்களால் புதுச் சொற்கள் தமிழிற் புகுந்து மொழி வளருங்காலத்தே, அம் மொழியின் தனிப் பண்பு அவ்வகை வளர்ச்சிக்கு இடங்கொடுத்து நின்றதெனக் கூறினேன். ஆனால், இறுதியிற் குறிப்பிட்டபடி அறிவுக் கூட்டுறவினால் மொழி வளர்ச்சியுண்டாங் காலத்து, அறிஞர்கள் வேண்டுமென முயலும் முயற்சி காணப்படுகின்றது. இம் முயற்சியிலே அவர்கள் மனப்போக்கின்படியே சென்று வரம்பழியும்படியாக நேரிடுதலுங் கூடும். சமயங்களும் பிற கொள்கைகளும் புதியனவாகப் பரவும்போது இம் முயற்சி அதிவேகத்துடன் நடைபெறும். மொழி வளர்ச்சியின் ஆரம்ப காலத்தே இம் முயற்சி வரம்புகடந்து செல்லாதபடி நிதானமாய்ச் செல்லுதல் வேண்டும். இவ்வாறு செல்லும் படி செய்து, மொழியின் தனிப்பண்பைக் காப்பாற்றுதல் தமிழ்-ஆசிரியர்களது பெருங் கடமையாகும்.

**ஆசிரியர் கடமை**

கிறிஸ்துவப்தத்திற்குச் சில பல நூற்றாண்டுகட்கு முன்னே ஜைனம் முதலிய சமயங்கள் தென்னாடாகிய தமிழ் நாட்டிற் பரவத் தொடங்கினஎனவும் மேலே கூறினேன். இக் காலம் தமிழ் வளர்ச்சிக்கு மிகச் சிறந்ததாக இருந்தது. அறமென்னும் உபாநத்தின் மீது கட்டப்பெற்ற சமயப் பெருங்கோயிற்குத் தமிழ் மக்களனைவரும் எளிதில் அடிமையானார்கள். அந்தச் சமயத்திற்குரிய சாஸ்திரங்களையும் அவற்றிற்குத் துணையாயுள்ள பிற நூல்களையும் தமிழ்மக்கள் விரும்பிக் கற்கத் தொடங்கினர். அந்தச் சாஸ்திரங்கள் முதலியன எழுதப்பெற்ற வடமொழியையும் தமிழறிஞர்கள் நிரம்பக் கற்றார்கள். தாயினுஞ் சிறந்த தங்கள் தமிழ் மொழியிலும் பலவகை நூல்கள் இயற்றத் தொடங்கினர். இவ்வாறு இயற்றத் தொடங்கிய (தொல்லாசிரியருள், தொல்காப்பியரே முதன்மை பெற்றவர். இவர் தமிழின் தனிப்பண்பினை நன்குணர்ந்து அதற்குக் கேடுவாராதபடி

பாதுகாத்து எவ்வாறு தம் அரியநூலை இயற்றினரென் பதை இனி நோக்குவோம்.

## 2

(தொல்காப்பியர் இயற்றிய பெருநூல் 'தொல்காப் பியம்' எனப் பெயர்சிறந்த தமிழ் இலக்கண நூலாகும்.) இந்நூல் நமது பார்க்கியவசத்தால் இன்று காறும் நிலைபெற்றிருக்கின்றது. இதன் சிறப் புப் பாயிரத்திலே( 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என ஆசிரியர் குறிக்கப்படுகின் ருர். 'ஐந்திரம்' என்பது வடமொழி வியாகரணங்களுள் ஒன் றென்பதும், பாணினீய வியாகரணத்திற்குக் காலத்தால் முற்பட்டதென்பதும் அறிஞர்கொள்கை. சர்வவர்மன் என் பவர் இயற்றிய காதந்த்ரமும் வேதங்களுக்குரிய ப்ராதிசாக் கியங்களும் இவ் ஐந்திர வியாகரணமுறையைப் பின்பற்றி யனவென்று டாக்டர் பர்ணல் கூறுவர். எனவே ஆசிரியர் தொல்காப்பியனர் வடமொழியை நன்கு பயின்றவரென் பதும் அதன்கணுள்ள ஒன்பது வியாகரணங்களுள் ஒன் ருகிய ஐந்திரத்திலே நிறைந்த புலமையுடையவ ரென்பதும் நன்கு விளங்கும்.

**தொல்காப்பிய ரது கல்விப் பெருமை**

ஆனல் வடமொழியறிவையும் ஐந்திரப் புலமையையும மாத்திரந் துணையாகக்கொண்டு தமது பேரிலக்கணத்தைத் தொல்காப்பியர் இயற்றிஞரல்லர்.(முதலாவது, அவர் காலத் துத் தமிழ் கூறு நல்லுலகத்துள்ள உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் நன்கு ஆராய்ந்தனர். இங்கே நல் லுலகு' என்றது செந்தமிழ் நிலத்தையும் அதனெடு சேர்ந்த பன்னிரு நிலங்களையும் எனக்கொள்ளுதல் வேண்டும்.) எனவே தமிழ் வழங்கிய நாடுகளனைத்தினுமுள்ள இருவகை வழக்குக்களையும் முற்ற ஆராய்ந்தார் என்பது பெறப்படும்.

இரண்டாவதாக, செந்தமிழ் நிலத்து வழக்குக்களையும் அவற்றை ஆராய்ந்தெழுதிய நூல்களையும் தமது நூலுக்குச் சிறப்புரிமை யுடையனவாகக் கருதி அவற்றைத் தொல்காப்பியர் பன்முறை நன்கு கற்று உண்மைநிலை கண்டனர். மூன்றாவதாக, தம் நூலுக்குரிய பொருள்களை நெடுங்காலமாகச் சிந்தித்து முற்ற ஆராய்ந்து தெளிந்தனர். இவ்வகை ஆராய்ச்சிகளை எல்லாந் துணைக்கொண்டே தொல்காப்பியர் தமது பேரிலக்கணத்தை இயற்றினர். இதனை இவரோடுடன் கற்ற பனம்பாரனர்,

> **வடவேங்கடந் தென்குமரி**
> **ஆயிடைத்**
> **தமிழ்கூறு நல்லுலகத்து**
> **வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்**
> **எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்**
> **செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு**
> **முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
> **புலந்தொகுத் தோனே**

எனத் தாம் இயற்றிய சிறப்புப் பாயிரத்துட் கூறியிருக்கின்றார்.

**தமிழின் தனிப் பண்பை விளக்கமாகக் காண்டல்**

ஆகவே தொல்காப்பியர் தாம் இயற்றக்கருதிய பெருநூலுக்கு எவ்வகை யாராய்ச்சிகள் இன்றியமையாதன எனக் கருதினரோ அவற்றையெல்லாம் செவ்வனே நிகழ்த்திப் பின் தாம் மேற்கொண்ட பெருஞ்செயலில் தலையிட்டனரென்பது போதருகின்றது. இவரது நுண்ணிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் தமிழின் தனிப் பண்பு மிக மிக விளக்கமாகத் தோன்றியிருத்தல் வேண்டும். ஐந்திர முதலிய வியாகரண உணர்ச்சியும் வடமொழி யுணர்ச்சியும் தமிழின் இயல்புகளை ஒப்புநோக்குதற்குப் பெரிதும் பயன்பட்டுத் தமிழின் தனிப்

பண்பினைக் குன்றின்மேலிட்ட தீபம் போல எளிதிற் புலப்படச் செய்திருத்தல் வேண்டும்.

(ஒவ்வொரு மொழியின் தனிப்பண்பும் அதன் ஒலிக் கணவியல்பிற் (Phonetic system) சிறந்து விளங்குவதாகும்.) மக்களுடைய குரலினின்று எழும் ஒலிகளுக்கு அளவேயில்லை. அவ்வொலிகள் அனைத்தும் அவர்கள் பேசும் மொழிகளிற் காணப்பட மாட்டா. ஒவ்வொரு மொழியினும் ஒருசில ஒலிகளே காணப்படுவனவாம். இவ்வொலிகளைக் குறித்தற்கே எழுத்துக்கள் அமைக்கப்பெற்றன. எனினும் ஒரு மொழியிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு அதன்கணுள்ள ஒலிகளைக் கணக்கிடுதல் கூடாது. ஏனெனின், எழுத்துக்களைக் காட்டினும் ஒலிகளின் தொகை மிகுதியாகவே பெரும்பாலும் உள்ளன. உதாரணமாக ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளைக் கூறலாம். சாதாரணமாக ஒரு மொழிக்குரிய தனியொலிகளின் தொகை அறுபதுக்கு மேற்பட்டுக் காணப்படுவதில்லையென எழுத்தொலி யாராய்ச்சியாளர் (Phoneticians) கூறுகின்றனர்.

*தனிப்பண்பு சிறந்து விளங்கும் இடம் ஒலிக்கணம்*

இவ்வொலிகளுள் ஒன்றேனும் தனித்து வாழமாட்டாது; ஓர் ஒலிக்கணத்தைச் (Phonetic system) சார்ந்ததாகவே இருக்கும். ஒலிக்கணம் என்ற கருத்தினை நாம் நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு மொழியிலுமுள்ள ஒலிகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவாயிருக்கும். இத்தொடர்பினை ஒரு குடும்பத்தினருக்குள் இருக்கும் உறவுமுறையோடு ஒப்பிடுதல் பெரிதும் பொருந்துவதாம். ஒரு குடும்பத்தினர் ஒருவரோடொருவர் ஒத்துவாழ்வார்; ஒவ்வொருவரும் குடும்ப நியதிக்கு உள்ளடங்கிச் செல்வர்; ஒவ்வொருவரும் இரத்தக் கலப்பினாற் பிணிப்புண்டு குடும்பத்தின் அங்கமாக இருப்பர். இங்ஙனமே ஒரு மொழியி

*ஒலிக்கணத்தின் இயல்பு*

லுள்ள ஒலிகள் அனைத்தும் ஒன்ருேடொன்று ஒத்துப் பொருந்தி, கணநியதிக்கு உள்ளடங்கி, ஒன்ருேடொன்று பிணிப்புண்டு ஏககணம் என்று சொல்லத் தக்கனவாயிருக்கும். குடும்பவொற்றுமை போன்றதோ ரொற்றுமை இவ்வொலிக் கணத்துள்ளும் இருப்பதாக அறிதல் கூடும்.

**மொழிதோறும் ஒலிக்கணம் வேறு**

ஒவ்வொரு மொழிக்கும் தனிப்பட்ட ஒலிக்கணம் உளது. அந்நிய மொழியொன்றினை நாம் கேட்ட மாத்திரத்தில் ‘இது தமிழன்று’ என்ற உணர்ச்சி இவ்வொலிக்கண வேறுபாட்டினாலேயே உண்டாகின்றது. அந்நிய மொழிகளைப் பயிலுவோர் இவ்வொலிக்கண வேறுபாட்டினை எளிதின் உணர்வர். இவர்கள் அம்மொழிகளிலுள்ள ஒவ்வோரொலியையும் தனிப்படத் தெரிந்து உச்சாரண முறையை அறிந்து, வேண்டும் முயற்சியெடுத்து, உச்சரித்து அம்மொழியைப் பயிலுவதில்லை. இவ்வாறு செய்யத்தொடங்குவாராயின். அம்மொழியை எக்காலத்தும் நன்ருக விரைந்து பேச வல்லவர்களாக மாட்டார்களென்பது திண்ணம்.மற்று எவ்வாறு பயிலுவதென்னின் ஒலிக்கருவியாகிய உறுப்புக்களைப் பொதுப்பட நிலைவேறுபாடு செய்துகொள்ளுவர். சிறு குழந்தைகள் ஆங்கிலம் பேசுவதாகப் பாவித்துத் தம் மழலை மொழியாற் குழறுவதை நாம் அடிக்கடி பார்த்திருக்கிருேம். இம்முயற்சி ஆங்கில - ஒலிக்கணத்தின் உச்சாரணத்திற்குரிய பற்பல உறுப்புக்களையும் பொதுப்பட நிலை வேறுபாடு செய்துகொள்ளுவதால் எழுவதாகும். இதனுல் தனியொலிகளைப் புறக்கணித்து ஒலிக்கணங்களை நாம் அறிந்து ஆட்சியிற் கொண்டுவருகின்ருேம் என்பது நன்ருக விளங்கும்.

பல மொழிகளைப் பேசவல்லவனை ‘ஹார்மோனியம்’ என்னும் இசைக்கருவி வாசிப்பவனேடு ஒப்பிடலாம்.

**வேறுபாட்டின் காரணம்**

சுருதியை வேறுபடுத்திய வளவில், ஒவ்வொரு ஸ்வரத்தின் இயல்பும் அந்தச் சுருதிக் கேற்க மாறுபடுகின்றது; எனினும் அந்த ஸ்வரங்களனைத்தும் ஒருகணத்திற்குரியன வென்னுமாறு ஒரு நெறிப்பட்டுச் செல்லுகின்றன. ஒலிக்குரிய உறுப்புக்களை நிலை வேறுபடுத்துதல் என மேலே கூறியது சுருதியை வேறுபடுத்தலோடு ஒப்பிடற்பாலது. இந் நிலைவேறுபாடுகள் எவ்வாறு உண்டாகின்றன? உச்சரண நிகழ்ச்சியில் நா முதலிய உறுப்புக்கள் பல தொழிற்படுதல் இன்றியமையாததாகும். இவற்றுள் ஒவ்வோர் உறுப்பின் ஒவ்வொரு நிலைக்குந் தக்கபடி மற்றை யுறுப்புக்களின் நிலை வேறுபடுவதாகும். ஒரு மொழியிலுள்ள ஒவ்வோரொலியினையும் அதன் தனிநிலையினும் சேர்க்கைநிலையினும் உச்சரித்து உச்சரித்துப் பயின்ற பழக்கத்தால் உறுப்புக்களில் ஒவ்வொன்றும் பல நிலைகளில் நின்று, அந்நிலைகளனைத்திற்குந் தக்கபடி மற்றையுறுப்புக்களும் பலவேறு நிலைகள் பெற்றுக் குறிப்பிட்ட ஒரு நெறியில் இயங்கிக் கொண்டிருக்கும். இங்ஙனம் இயங்கவே, உறுப்புக்களுள்ளே அமைதி யொன்று ஏற்படுகின்றது. இவ்வகை அமைதியின் பயனே ஒலிக்கணங்களாகும். இவ்வமைதியினை வேறுபடுத்துதலே உறுப்புக்களின் நிலைவேறுபாடு எனச் சுட்டியது. மேற்கூறியவாறு உறுப்புக்களின் முயற்சியே யன்றி, உயிர்ப்பின் வன்மை மென்மையாலும் ஒலிக்கணம் பாதிக்கப்படுகின்றது

**தமிழ்-ஒலிக் கணமும் தொல் காப்பியரும்**

(தமிழ்மொழிக்கெனத் தனிப்படவுரிய ஒலிக்கணத்தின் இயல்பினைத் தொல்காப்பியர் பிறப்பியலிலும் நூன்மரபிலும் மொழிமரபிலும் உணர்த்துகின்றனர். பிறப்பியலிலே எழுத்தொலிகள் ஒவ்வொன்றும் எவ்வெவ் வுறுப்புக்களின் துணையால் எவ்வெவ்வகை முயற்சிகளால் பிறக்கின்றன என்பது விளக்கப்படுகின்றது. முற்பட, தொல்காப்பியர்

காலத்து எழுத்துக்களின் பிறப்பிஞக்கத்தைக் குறித்து வழங்கிய கொள்கை சுருங்க உரைக்கப்படுகின்றது. தமிழ் மொழிக்குரிய ஒலிக்கணத்தில் அடங்கிய அனைத்து ஒலிகளும், அவ்வொலிகளுள் ஒவ்வொன்றன் பிறப்பும் குறிக்கப் படுகின்றன. இக்கொள்கையிலும் பிறப்பிஞக்கத்திலும் வடமொழி நூல்களுட் கூறியனவே பெரும்பாலும் காணப் படும். ஆனால் தமிழ்மொழிக்கே தனித்துரிய **ற, ன, ழ** என்ற மூன்று எழுத்துக்களும் பிறக்குமாற்றினைத் தொல் காப்பியர் கூர்ந்துணர்ந்து விவரிக்கின்றனர்.)

(பிறப்பியலில் ஒலிகளுள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட நிலையிற் பிறக்குமாற்றை யுணர்த்திய தொல்காப்பியர் ஓரொலி பிறிதொன்றனோடு சேர்ந்து நிற்கின்ற நிலையை மெய்ம்மயக்கம் உடனிலைமயக்கம் என இருகூறுபடுத்து நூன் மரபிலும், சொல்லுக்கு முதலாகெழுத்து ஈறுகெழுத்து என்பன முதலியவாகப் பகுத்து மொழி மரபிலும் உணர்த்து கின்றார். எழுத்துக்கள் ஒலிகளின் வரிவடிவ மென்பதை நாம் நன்கு கடைப்பிடித்துக் கொள்ளுதல் அவசியம். **ல** முன்னர்க் 'கசபவென்னு மூவெழுத்துரிய' (**தொல்.** நூன். 23) என்றால், 'ல்' என்பதனால் உணர்த்தப்படுகின்ற ஒலியின் முன்னர், க், ச், ப் என்பவற்றால் உணர்த்தப்படும் ஒலிகள் வரும்; பிற வாரா என்பது கருத்தாகும். நல்கு, வல்சி, செல்ப என்பன உதாரணங்களாம். தமிழின் ஒலிக்கண-இயல்போடு இச்சொற்களின் உச்சாரணம் பொருந்தியிருத் தல் காணலாம். ல்ம, ல்ய என்ற இருமெய்களின் சேர்க்கை தமிழின் ஒலிக்கணவியல்போடு மாறுபட்டு உச்சாரணம் எளிதில் அமையாமையும் காணலாம். வடமொழியிலாயின் கல்மஷம், கல்யாணம் என அம்மொழியின் ஒலிக்கணவியல் பொடு உச்சாரணம் முற்றும் பொருந்தியமைகின்றது. தமிழில் 'ல்ட்' என்ற ஒலிச்சேர்க்கை வரமாட்டாது; ஆங் கிலத்தில் கல்ட் (**cult**), ஸால்ட் (**salt**) என அச்சேர்க்கை

வருதல் காணலாம். தமிழில் 'ர் ன்' என்ற கூட்டொலி வாராது; கெர்ன்ல் (kernel) என ஆங்கிலத்திலும் பிர்னே (Birne) என ஜெர்மன் மொழியிலும் வரும். இவற்றுக்கெல்லாம் ஒலிக்கண வேறுபாடும் அதனால் விளையும் உச்சாரண நியமமுமே காரணங்களாவன. மேற்காட்டியவற்றால் தொல்காப்பியர் தமிழொலிக்கணத்தின் நுட்பவியல்புகளையெல்லாம் நுணுகி யாராய்ந்துள்ளா ரென்பது விளங்கும்.

## 3

**தொல்காப்பியரும் பிறமொழி இலக்கண ஆசிரியர்களும்**

தமிழொலிக்கண இயல்புபற்றித் தொல்காப்பியர் செய்துள்ள ஆராய்ச்சி போன்று பிறமொழிகளுக்கு இலக்கணம் வகுத்த ஆசிரியர்கள் செய்திலரென்று தோன்றுகிறது. ஒலிக்கணவியல்புகளில் ஒரு சில, சொற்கள் புணருமிடத்துக் காணப்படுவனவாம். இவ்வியல்புகளைச் சந்திவிதிகளாக இலக்கண நூல்கள் வகுத்துரைக்கும். தொல்காப்பியரும் இச் சந்திவிதிகளைப் புணரியல் முதல் குற்றியலுகரப் புணரியல் ஈறாகவுள்ள ஆறு இயல்களாற் கூறினர். இச் சந்திவிதிகளையே பிறமொழிகளுக்குரிய இலக்கண ஆசிரியர்களிற் பெரும்பாலார் நன்கு ஆராய்ந்து முறைப் படுத்துத் தெளிய உணர்த்தியிருக்கின்றனர்.

மெய்ம்மயக்கம் உடனிலைமயக்கம் முதலியவற்றை அவர்கள் ஆராய்ந்தாரல்லர். உதாரணமாக, பாணினியார் இயற்றிய வடமொழிப் பேரிலக்கணத்தில் இம் மயக்கங்கள் கூறப் பெறவில்லையெனத் தெரிகின்றது. இங்ஙனமாகத் தமிழொலிக்கண வியல்புகளில் ஒரு முக்கிய அம்சமெனக் கருதத் தக்க இப்பகுதி தொல்காப்பியமாதிய தமிழிலக்கணங்களில் மாத்திரமே காணப்பெறுகின்றது.

மெய்ம்மயக்கம் முதலியவற்றை முதன் முதல் ஆராய்ந்து தெளித்தவர் யாவர்? பண்டை இலக்கண நூல்களிற் பெரும் பாலன இறந்துபட்டமையினுலே ஒருதலையாகத் துணிந்து கூற இயலவில்லை. (தொல்லாசிரியர்கள் பிறர் கூறுவனவற்றை மேற்கொள்ளுமிடத்துத் தொல்காப்பியர் 'என்மனுர் புலவர்', 'என்ப' முதலிய வாச்கங்களாற் பெரும்பாலும் உணர்த்திச் செல்வர்.) இவ் வகை வாசகங்கள் மெய்ம்மயக்கம் முதலியன கூறும் பகுதிகளிற் காணப்படவில்லை. தொல் காப்பியத்துக்கு உரை வகுத்த உரைகாரர் களும் இப்பகுதிகளுக்குரிய உரையிற் பிறநூல் மேற்கோள்கள் காட்டிஞர்களல்லர். இக்காரணங்களால் இவ் வொலிக்கண நுட்பங்களை முதன்முதலில் தொல்காப் பியரே ஆராய்ந்து வெளியிட்டிருக்கலாமென்று தோன்று கிறது.

**முதன் முதலில் தமிழின் ஒலியியல்புகளை ஆராய்ந்தவர் யார்?**

ஒலிக்கண இயல்புகளை இங்ஙனம் நன்குணர்ந்த தொல் காப்பியர் வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களைத் தமிழில் வழங்குமிடத்து அதிகரிக்க வேண்டும் விதிகளை அவ்வொலிகளின் இயல்புகளோடு பொருந்தவே அமைத்திருக்கின்றனர். உதாரணமாக,

**தொல்காப்பியரது முறை**

(வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

(தொல். சொல். 395)

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்

(தொல். சொல். 396)

என்ற சூத்திரங்களைக் காண்க. வடசொற்கள் தமிழிலே வழங்குமிடத்து, சில சொற்கள் இருமொழிக்கும் பொதுவா யுள்ள எழுத்துக்களால் இயன்றுவரும். கமலம், விமலம்

என்பன இவ்வாறு வந்தன. சில சொற்கள் சிதைந்து வரும். இவ்வாறு சிதைந்து வருவனவற்றுள் ஆணை, நட்டம், கண்ணன் முதலிய பாகதச்சிதைவுகளும் உரைகாரர்களால் அமைக்கப் படுகின்றன. சொற்கள் சிதைந்து வருமுறையை,

> **அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை**
> **வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்**
> **விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்**
> **நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்**
> **நாட்டல் வலிய என்மனார் புலவர்**
>
> (தொல். சொல். 397)

என்ற சூத்திரம் அறிவிக்கின்றது. இங்கே குறிப்பிட்ட முறைகளுள் ஏற்பன கொண்டு பிறமொழிச் சொற்கள் திரிந்துவருவனவாம். ஆனல் திரிந்துவருதல் தமிழ்மக்களுடைய உச்சாரண நெறிக்கு—பேச்சு வழக்கத்திற்கு—ஒத்ததாயிருத்தல் வேண்டும்; அஃதாவது தமிழ்மொழிக்குரிய ஒலிக்கண-இயல்புகட்கு ஒத்ததாதல் வேண்டும். மேலைச் சூத்திரத்தில் 'என்மனார் புலவர்' என்று காணப்படுவதனல், தொல்காப்பியரால் நன்கு மதிக்கப்பட்ட முந்து நூலாசிரியர்களுடைய கருத்தினையும் வழக்கினையும் ஒட்டியே இங்ஙனம் விதி வகுக்கப்பட்டதெனக் கொள்ளுதல் சாலும்.

**தொல்காப்பியரது வடசொல் ஆட்சி**

தாம் விதித்த விதிகட்குத் தாமே இலக்கியம் காட்டுவார் போன்று தமது பேரிலக்கணத்திலே பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் திரித்து ஆசிரியர் தொல்காப்பியனர் வழங்கியுள்ளார். இவ்வாறு வழங்கிய சொற்கள் இருவகைப்படுதல் காணலாம். ஒன்று வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களான் இயன்ற வடசொற்

களாம். அவையாவன ஒலியியல்பில் தமிழோடு ஒத்து இயங்கும் ஒரு சில வடசொற்களாகும். இவற்றைப் பெரும்பாலும் திரித்தலின்றி ஆசிரியர் வழங்கினர். பிறிதொருவகை, பாகதச் சொற்களாகும். இப்பாகதச் சொற்கள் வடசொற்களின் திரிபென்பதே பூர்வாசிரியர்களின் கொள்கை. இக்காலத்துள்ள ஆராய்ச்சியாளர் இவ்வாறு கொள்ளுவதில்லை. வழக்கிலிருந்த பாகதச் சொற்களை இலக்கண நெறிப்படி திருத்தியமைத்தனவே அச்சொற்களின் வடமொழி வடிவங்கள் என்பர். இவ்விரு கொள்கைகளின் வன்மை மென்மைகளை இங்கே ஆராயவேண்டும் ஆவசியகமின்று. பாகதத்தின் ஒலிக்கண-இயல்பு பெரும்பாலும் தமிழொலிக்கண-இயல்போடு ஒத்திருத்தலால் பாகதச் சொற்களை வடிவுசிதையாது இருந்தபடியே தொல்காப்பியர் எடுத்தாண்டனர்.

ஒலிக்கண-இயல்பிலே வடமொழியும் தமிழும் வேறுபட்டும் பாகதமும் தமிழும் நெருங்கித் தொடர்பு பட்டும் இருத்தலினால், தொல்லாசிரியர்கள் வடமொழி வடிவங்களைக் காட்டினும் பாகத வடிவங்களையே தமிழில் எடுத்தாண்டு வந்தார்கள். தொல்காப்பியரும் இந்நெறியையே பின்பற்றித் தமது பெருநூலிற் சொற்களை எடுத்தாண்டனர். இங்ஙனம் செய்ததனால் தமிழொலிக்கணத்தின் தனிப்பட்ட பண்பானது பெரிதும் பாதுகாக்கப்பட்ட தாயிற்று.

இனி மேற்குறித்தவாறு தொல்காப்பியர் எடுத்தாண்டுள்ள வடசொற்கள்[1] வருமாறு:

அந்தம்: 487; பொ. 144, 145, 240.
அம்போதரங்கம்: பொ. 452, 455.
அந்தரம்: பொ. 144.
அமரர்: பொ. 79, 144.

1. சொற்களை யடுத்துள்ள எண்கள் திரு. நமசிவாய முதலியாரவர்கள் பதிப்பித்த தொல்காப்பிய மூலத்திற்குரியன. 'பொ' என்றது பொருளதிகாரம்.

UNIVERSITY EXTENSION LIBRARY

அமுதம்: பொ. 144.
அவி: பொ. 75.
ஆரம் (மாலை): பொ. 623.
உலகம்[1]; 541; பொ. 76, 77.
உவமம்: 204, 210; பொ. 49, 51, 52, 194, 239, 273, 279, 281, 284, 286, 287, 288, 292, 293, 296, 302, 306, 308.
உவமை: பொ. 280, 303.
உறு: 783.
ஏது: பொ. 165, 204, 468, 480, 644.
கபிலை: பொ. 87.
கரகம்: பொ. 611.
கரணம்: பொ. 140, 141, 142, 143, 144.
கருமம்: 568; பொ. 121, 168, 503.
காமம்: பொ. 53, 54, 75, 79, 81, 89, 106, 109, 111, 113, 117, 144, 145, 149, 150, 158, 161, 175, 190, 194, 270, 427, 488.
காயம் (விண்): 305.
காரணம்: 504, 505, 523; பொ. 109, 112.
காலம்[1]: 164, 241, 541, 554, 593, 595, 682 683, 685, 691, 697, 698, 699, 705, 713, 718, 723, 724, 725, 726, 729, 731, 732, 734, 738, 765, 899, 911, 936, 941; பொ. 39, 44, 74, 88, 110, 148, 184, 203, 245, 311, 504.
குணம்: 900.
குஞ்சரம்: பொ. 564.
சிந்தை: பொ, 109.
சின்னம்: பொ. 450, 453.
சூதர்: பொ. 88.
தா: 930.
தாரம்: பொ. 77.
திசை: 201, 431, 933.
தூது: பொ. 117, 268.
தெய்வம்: 487, 541; பொ. 20, 39, 50, 113, 148, 269, 416.
நாடகம்: பொ. 56.
நிமித்தம்: பொ. 39, 88, 101.
பதி: பொ. 189.
பருவம்: பொ. 144.
பலி: பொ. 75.

---

1. காலம், உலகம் என்பன தமிழ்ச்சொற்கள் என்றார் நச்சினார்க்கினியர்.

பூதம்: 242, 541.
மங்கலம்: பொ. 88, 241.
மண்டிலம்: பொ. 44, 421, 423.
மதி: 483; பொ. 125, 252.
மந்திரம்: 933; பொ. 468, 481.
மாயம்: பொ. 112, 145.
மானம்: பொ. 44.
முகம்: பொ. 150.
முரசு: பொ. 612.
வருணன்: பொ. 5.
வள்ளி: பொ. 85, 92.
வாணிகம்: பொ. 618.

வடமொழிச் சொற்கள் சிறிதளவே திரிந்துவந்தன மேலே தரப்பட்டன. அம்மொழியிலுள்ள தொகைமொழி தானும் யாதொரு வேறுபாடுமின்றி வழங்கப்பட்டிருப்பது அம்போதரங்கம் என்றதனை நோக்கியறியலாம்.

வடமொழிச் சொற்களை நேரே எடுத்தாளாது பாகதத்தின் வழியாகக் கொண்டு வழங்குதலே பண்டைக்காலத்துப் பெருவழக்காயிருந்ததென மேலே குறித்தேன். இவ் வழக்கோடொப்ப, பாகதத்தின் வழியாகத் திரித்து, தமிழ் மொழியோடு வேற்றுமை தோன்றுவண்ணம் ஆசிரியர் தொல்காப்பியர் தமது நூலில் வழங்கியுள்ள சொற்கள் வருமாறு:

அரசர்: பொ. 74.
அரணம்: பொ. 66.
அவை: பொ. 75.
ஆசான்: பாயி.
ஆசிரியர்: 315, 389.
ஆணை: 880.
இமை: 7.
இலக்கணம்: 510, 544, 545.
உரு: 17, 40, 139; பொ. 244.
உருவு: 17.
ஏமம்: பொ. 40, 53, 77, 109, 190
ஐயர்: பொ. 143, 144.
கவரி: பொ. 562, 580, 582, 600.

சுண்ணம் : 888, 890; பொ. 310.
தாபதம்: பொ. 74, 77.
தூணி : 239.
தேயம் : பொ. 43,74.
நிச்சம் : பொ. 96.
பக்கம் : பொ. 44, 65, 75.
படிமை : சிறப்; பொ. 30.
பண்ணத்தி : பொ. 483.
பார்ப்பனர் : பொ. 74, 191, 491, 492, 499.
பையுள் : 825.
மாராயம்: பொ. 65.
வண்ணம் : 562 ; பொ. 199, 515-536.

## 4

இதுகாறும் தமிழின் தனிப்பண்பு சிதையாது தொல்காப்பியர் தமது நூலினை இயற்றிய முறைகளுள் இரண்டனைக் கூறினேன். இரண்டும் அப்பண்பு சிறந்து விளங்குவதான தமிழொலிக்கண இயல்பினைப் பற்றியன. ஒலிக்கண இயல்போடு மிக நெருங்கிய தொடர்புடைய பாகதச் சொற்களைத் திரியாது எடுத்தாளுதலும், அவ்வியல்போடு தொடர்பற்ற வடசொற்களுள் வேண்டுவனவற்றை வேண்டுமளவு திரித்து எடுத்தாளுதலும், என இவ்விரண்டே யான் கருதிய முறைகள். இனி வேறொரு வகையால் தமிழ்மொழி வளர்ச்சியைத் தொல்காப்பியர் பேணியதனைக் கூறவிரும்புகிறேன்.

**தமிழ் வளர்ச்சியைப் பேணிய மூன்று முறை**

வடமொழி இந்தியப் பொதுமொழியாய் அமைந்தது என்ற உண்மையை முன்னரே விளக்கியுள்ளேன். கன்னடம் முதலிய மொழிகளின் இலக்கண நூலார் தத்தம் மொழிகளைத் தேசியம் என்பர். இக்கருத்தொடு பொருந்தவே, ‘சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாம்’ என்றும், ‘உரிச்சொல் என்பது பதினெண் தேசிகச்சொல் வடசொல்

**வடமொழிப் பயிற்சி பாரத தேச முழுமையும் பரவி யிருந்தமை**

லெனத் தொகையாற் பத்தொன்பதாம்' என்றும், 'தமிழுந் திசைச் சொல்லேயாம்' என்றும் பிரயோக விவேக நூலாரும் கூறினர். வடசொல்லினின்றும் வேறு பிரித்துத் 'தேசிகச் சொல்' எனக் கூறுவதனாலே, தமிழ் தெலுங்கு முதலிய மொழிகளைப் போலன்றி அவ்வடசொல் பாரத தேசமுழுமைக்கும் பொதுவான மொழியாகக் கருதப் பட்டதென்பது விசதமாம்.

இக்கருத்து ஏதோவொரு மாறுபாடான கொள்கை பற்றி எழுந்தது மன்று. வழக்குநோக்கியே இது தோன்றியதாகும். இவ்வழக்கும் பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருவதொன்றாம். குமரி முதல் இமயம்வரை வடமொழிப் பயிற்சி இன்றும் பரவி யிருத்தல் காணலாம். பயிற்சி யென்ற அளவில் அம்மொழி பேச்சு வழக்கிலிருப்பதாக எண்ணுதல் தவறு; நூல் வழக்கி லிருந்து வருவதாகவே கொள்ளுதல் வேண்டும். தமிழ், தெலுங்கு முதலிய மொழி கள் வழங்கும் பலவேறு நாடுகளிலும் முற்காலத்தும் இக் காலத்தும் வடமொழி பயிலப்பட்டு வருகின்றது.

**வடமொழியும் லத்தீனும்**

வடமொழியும் லத்தீன் மொழியும் பலவகைகளில் ஒப்பு மையுடையன. இரண்டு மொழிகளும் பேச்சுவழக்கற்றுப் பல நூற்றாண்டுகளாய் விட்டன. இக்காரணத் தினாலே இவற்றை இறந்துபட்ட மொழிக ளென்பர். வடமொழியினின்றும் ஹிந்தி, வங் காளம் முதலிய மொழிகள் தோன்றினமை போல, லத்தீன் மொழியினின்றும் பிரெஞ்சு, இத்தாலியன் முதலிய மொழி கள் (Romance languages) தோன்றின. பேச்சு வழக்கற்ற போதிலும் பாரததேசமுழுமையும் வடமொழி பயிலப்பட்டு வந்தமைபோல, ஐரோப்பிய கண்ட முழுமையும் லத்தீன் மொழி பயிலப்பட்டு வந்தது. இரண்டும் நூல்வழக்கிலே மிகுதியாகப் போற்றப்பட்டன. எண்ணிறந்த சமயநூல்

களும், சாஸ்திரங்களும், பிறநூல்களும் இருமொழிகளிலும் இயற்றப்பட்டன.

**வடமொழியின் ஆதிக்கம்**

ஒரு செய்தி இங்கே கூறுதற்குரியது: கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றுக்குரிய இலக்கணங்கள்தாமும் வடமொழியில் எழுதப்பட்டன. இது நமக்குப் பெரிதும் வியப்பினை விளைக்கத் தக்கது. வடமொழியின் தலைமைப்பாட்டினையும் பொதுநிலையையும் தீர்ந்தபொருளாகக் கொண்டாலல்லது இச்செயலை விளக்குதல் ஏலாது. பிறிதொரு காரணமும் உணரற்பாலதாம். இம்மொழிகளின் இயல்பும் இலக்கணமும் வடமொழியின் இயல்பு இலக்கணங்களோடு நெருங்கிய தொடர்பு உடையனவாகக் கருதப்பட்டிருத்தல் வேண்டும். இக்கொள்கை முற்காலத்துப் பெருவழக்கமாயிருந்தது போலும். தமிழ் மொழியைப் பற்றியும் இக்கொள்கை முற்காலத்து ஒரு சாராராற் கொள்ளப்பட்டிருந்தது எனற்குத் தக்க சான்று உளது. வீரசோழிய வுரையிலே (தாது. 1) 'தமிழ்ச்சொல்லிற் கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்' எனவருவது காண்க. இக்காலத்துள்ள மொழிநூல்-ஆராய்ச்சியாளரது துணிபிற்கு இது முற்றும் மாறுபட்டதாம். எனினும் வடமொழியின் ஆதிக்கியத்தை இது நன்கு விளக்கவல்லது.

**வடமொழியில் வியாகரணத் துறையின் சிறப்பு**

வடமொழியில் இயற்றப்பெற்ற நூல்களே இப்போது நமது கவனத்திற்குரியன. அந் நூல்களுள்ளே வியாகரணம் என்னுந் துறைபற்றியன எண்ணிகந்தன வென்றே கூறலாம். வியாகரணத்தை வேதத்திற்கு முகம் என்பர் வடமொழியாளர். மணிமேகலையினும்,

**கற்பம் கை; சந்தம் கால்; எண் கண்;**
**தெற்றென் நிருத்தம் செவி; சிக்கை மூக்கு;**
**உற்ற வியாகரணம் முகம் பெற்றுச்**
**சார்பில் தோன்ரு ஆரண வேதக்கு**
**ஆதி அந்தம் இல்லை** (*27, 100-104*)

என வந்துள்ளது. இத்தகைய வியாகரணத் துறையிலே இந்திரன் முதலிய ஒன்பதின்மர் ஒன்பது வகைப்பட்ட நூல்களை இயற்றினர் என்பர். பிராதிசாக்கியங்களே முதற்கண் தோன்றிய வியாகரண நூல்கள். பின்னர்ப் பன்னெடுங்காலமாக இத்துறையிலே ஆசிரியர்கள் உழைத்து வந்தனர். (இவ்வுழைப்பின் பயனாக, வடமொழி வியாகரணமென்பது பலவகையானும் நிரம்பி முற்றியது. பிறமொழிகளுக்குரிய வியாகரணம் இயற்றுவோர்க்கு, ஓர் எடுத்துக் காட்டாக அமைந்தது; அவர்கள் நூலியற்ற வேண்டும் நெறி இன்னதென்று வழிகாட்டிற்று; அவர்கள் மேற்கொள்ள வேண்டும் சமிக்ஞை, பரிபாஷை முதலியவற்றை வேண்டுமளவு உதவியது. இப் பரிபாஷைகள் பாரத தேச முழுமையும் அறிந்தனவாதலாலும், வியாகரணத் துறையிற் பல நூற்றுண்டுகளாக நிகழ்ந்த ஆராய்ச்சியின் பயனாகத் தோன்றியன வாதலாலும், பிறமொழிக்குரிய வியாகரணங்கள் இயற்றினோர் இவற்றைக் கையாளுவது இன்றியமையாததாயிற்று[1]. முன்னுள்ளோர் செய்த ஆராய்ச்சிகளைப் பின்னுள்ளோர் சாதி மதம் மொழி முதலிய வேறுபாடுகளைக் கருதாது, பயன்படுத்தினாலல்லது அறிவு மேன்மேலும் வளர்வதற்கு இடமின்றிப் போய்விடு மல்லவா?

1. (கிரேக்கமொழியின் இலக்கணமும் லத்தீன் மொழியின் இலக்கணமும் ஐரோப்பிய மொழிகளுக்குரிய இலக்கணங்கள் இயற்றுதற்கு ப்பயன் பட்டமையை இங்கே ஒப்புநோக்குதல் தகும்.)

*5*

இப் பேருண்மையையும் அதனாற் பயன்கொள்ள வேண்டும் ஆவசியகத்தையும் நன்குணர்ந்த தொல்காப்பியர் தமது பெருநூலுள்ளும் வடமொழி வியாகரணத்திற் பயின்று வரும் ஸங்கேத பதங்களைக் கையாளுவாராயினர். இங்ஙனம் கையாளுதற்கண்ணும் தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி அக் குறியீடுகளிற் சிலவற்றை மொழி பெயர்த்துக்கொண்டனர். அவை வருமாறு:—

**ஸங்கேத பதங்களைத் தொல்காப்பியர் மொழிபெயர்த்தாளுதல்**

அவையல் கிளவி (असभ्यम्) : 926.

அளபு (मात्रा) : 765.

அன்மொழி நிலையல்(अन्यपदार्थप्रधान) : 903.

இருமொழிமேலு மொருங்குடனிலையல் (उभयपदार्थप्रधान) :903.

உலகவழக்கு (लौकिकम्) : பாயி.

குறிப்பிற் றோன்றல் (गम्यमानम्) : 641.

செய்யுள் வழக்கு (छन्दस्) : பாயி.

தகுதி (योग्यता) : 500.

திசைச்சொல் (देश्यम्) : 881, 884.

தெரிபுவேறு நிலையல் (श्रूयमाणम्) : 641.

தொகை (समासम्) : 896, 904.

பின்மொழிநிலையல் (पूर्वपदार्थप्रधान) : 903.

முன்மொழிநிலையல்(उत्तरपदार्थप्रधान) : 903.

வெளிப்படா வாராச்சொல் (अनवगतसंस्कारान् निगमान्):782.

வெளிப்படு சொல்(संविज्ञातानि): 782.

வேற்றுமை (विभक्ति): 112.

இங்ஙனம் மொழிபெயர்த்தல் கூடாது எனத் தாம் கருதிய இடங்களிலும், மொழிபெயர்ப்பாயமைந்த சொல் பல பொருளுடைத்தாய் இடர்ப்படுக்குமெனக் கருதிய இடங்களிலும், வடமொழிச் சொற்களையேனும் அவற்றின் பாகத வடிவங்களையேனும் தொல்காப்பியர் துணிந்து எடுத்தாண்டுள்ளார். அவை வருமாறு:

**ஸங்கேத பதங்களை நேரே எடுத்தாளுதல்**

அதிகாரம்: பொ: 652.
இலக்கணம்: பொ. 544, 545.
உத்தி: பொ. 640, 652.
ஓரை: பொ. 133.
கரணம்: பொ. 140-144.
காண்டிகை: பொ. 641.
காரம்: 134.
காலம்: 683.
சூத்திரம்: பொ. 471, 472, 640-645.
ஞாபகம்: பொ. 652.
தாயம்: பொ. 218.
படலம்: பொ. 471.
பண்ணத்தி: பொ. 483.
பிண்டம்: 574; பொ. 471.
மாத்திரை: 7; பொ. 311, 410.
வாணிகம்: பொ. 618.
வைசிகன்: பொ. 618.

## 5

இனி, சங்கேத பதங்களைத் தொல்காப்பியர் எடுத்தாளும் பிறிதொரு முறையைக் கவனிப்போம். ஒருசில சங்கேத பதங்களின் லட்சணங்களையும் விவரங்களையும் அவர் மொழி பெயர்த்தும் அமைத்திருக்கின்றார். உதாரணமாக, (மாத்திரை யென்ற சங்கேத பதத்தை எடுத்துக்கொள்க. தமிழிலக்கணத்திற் பல இடங்களிலும் இப்பதம் எடுத்தாளப் படுகின்றது. ஆகவே இச்சங்கேதத்தின் லட்சணத்தைத் தெளிவுற உணர்த்த வேண்டுவது அவசியமாகின்றது.

**சங்கேதங்களின் லட்சணங்களையும் மொழி பெயர்த்தல்**

**கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே**

என்ற சூத்திரத்தால் இஃது உணர்த்தப்படுகின்றது. இந்த லட்சணம் வடமொழியிலுள்ள இரண்டு சுலோகப் பகுதிகளின் பொருளைச் சுருங்க உரைத்ததாகும். அவை வருமாறு:

**நிமேஷோந் மேஷ காலேந**
**ஸமம்மாத்ராது ஸம்ஸ்ம்ருதா:**
**அங்குலீ ஸ்போடனம் யாவத் காலே**
**மாத்ரேதி ஸோச்யதே**

பாணினியின் அஷ்டாத்தியாயி என்ற வியாகரணத்திலும் பதஞ்சலியின் மஹா பாஷ்யத்திலும் பாணினீய சிக்ஷையிலும் இவ்வித லட்சணம் கொடுக்கப்படவில்லையெனத் தெரிகின்றது. பட்டா களங்கதேவர் தமது கர்ணாடக சப்தானுசாஸநம் என்னும் இலக்கணத்திலே,

**ஐகத்வித்ரீமாத்ரா ஹ்ரஸ்வ தீர்க்க ப்லுதா:** || 3 ||

என்ற சூத்திரத்தின் உரையிலே மேற்குறித்த சுலோகங்களைக் கொடுத்திருக்கின்றனர். இவ்வாசிரியர் ஜைனராதலாலே ஜைனர்கள் இயற்றிய வியாகரணங்களில் மேலை லட்சணங்கள் தரப்பட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது. இஃது உண்மையாய் முடியுமாயின், தொல்காப்பியரது சமயம் இன்னதென உய்த்துணர்தற்கு இதுவுமொரு சான்றாகும். ஜைன சமயநூல்களிற் கூறப்பட்டுள்ள உயிர்ப் பாகுபாட்டினை வகுத்துணர்த்திய தொல்காப்பியர்,

**நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**

(மரபியல், 27)

என்று கூறியதனோடொப்ப, மாத்திரையின் லட்சணம் வகுக்கும் மேலைச் சூத்திரத்தின் கண்ணும்,

**நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே**

என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

**சங்கேதங்களை விவரித்தல்** சங்கேத பதத்தின் லட்சணத்தைத் தொல்காப்பியர் மொழிபெயர்த் துள்ளமைக்கு ஓர் உதாரணங் காட்டினேன். இனி இவ்வகை லட்சணங்களை அவர் விவரித்துக் கூறுகின்றமைக்கு ஓர் உதாரணங் காட்டுகின்றேன். மரபியலிலே,

**முப்பத் திருவகை யுத்தியொடு புணரின் (சூ. 95)**

என்று தந்திரயுக்திகளுக்குத் தொகை கூறியவர், அவை இன்னவென அவ்வியலின் இறுதிச் சூத்திரத்தில் வகை செய்துரைக்கின்றனர். இங்ஙனம் உரைக்குமிடத்து யுக்திகளின் இயல்புகளை விவரித்துச் செல்லுகின்றனர். 'நுதலியதறிதல்' என்ற முதலாவது தந்திரயுக்தியை எடுத்துக் கொள்வோம். இதனை இளம்பூரணர் 'சூத்திரத்திற் சொற்ற பொருளுணர்த்தலன்றி, இதன் கருத்து இதுவெனவுணர்த்தல்' என விளக்கினர். நுதலுதல் என்பது கருதுதல். இந்த யுக்தி வடமொழியில் 'அதிகரணம்' எனப்படுவதே யாகும். கௌடில்ய அர்த்தசாஸ்திரத்தில்,

**யமர்த்த மதிக்ருத்யோச்யதே தததிகரணம்**

என்றும், தந்த்ர யுக்தி விசாரம் என்னும் நூலில்

**தத்ராதாரோ அதிகரணம் தாத்பர்யம் தத்ர திஷ்டதி**

என்றும் இந்த அதிகரணம் விளக்கப்பட்டுள்ளது. இவ் விளக்கத்திற்கு இயைய, இந்த யுக்தியை 'நுதலியதறிதல்' எனத் தொல்காப்பியர் விவரித்துக் குறியீடு செய்தனர். இங்ஙனமே தந்திர யுக்திகள் பலவும் விவரிக்கப்பட்டுள்ளன.

**சங்கேதங்களை யெடுத்தாளுதலின் காரணங்கள்**

வடமொழி வியாகரணத்தின் கண்ணும் பாகத-இலக்கணத்தின்கண்ணும் பயின்றுவரும் சங்கேத பதங்களில் ஒரு சிலவற்றை மொழிபெயர்த்தும் ஒரு சிலவற்றை நேராகவும் ஒரு சிலவற்றைப் பொருட்கியைய விவரித்தும் தொல்காப்பியர் அமைத்துக்கொண்டனர் என்பது மேலே காட்டப்பட்டது. இங்ஙனம் அமைத்துக்கொண்டதன் காரணங்களுள் ஒன்றையும் மேலே சுட்டிக் கூறினேன். அஃதாவது பாரதநாட்டு மக்களனைவர்க்கும் பொதுவுரிமையாயுள்ளதை அறிவு வளர்ச்சியின் பொருட்டுப் பயன்படுத்திக் கொண்

டனர் என்பதே. இனி வேறொரு காரணத்தைப் பற்றி இங்கே கூற விரும்புகிறேன்.

(ஒவ்வொரு மொழிக்கும் உரிய சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு, புணர்ச்சிவிதி முதலிய செய்திகளை ஆராய்ந்து அவற்றின் நியமங்களை உணர்ந்து அந்நியமங்களை விதிகளாக வகுத்துப் புலப்படுத்துவது இலக்கணநூலின் முறையாகும். ஒரு மொழியின் இலக்கணத்தைத் தன்னந் தனியாக எடுத்துக்கொண்டு நியமங்களை விதித்தால், அவ் இலக்கணம் அத்தனை திட்பநுட்பஞ் செறிந்ததாகாது. இங்கே திட்பமென்று கூறியது இலக்கண விதி பரந்துபட்டு நின்று யாண்டும் வழக்கொடு முரணுதமையுந் தன்மையை; நுட்பமென்றது இலைமறை காய்போல மறைந்து கிடப்பதனையும் நுணுகிச்சென்று ஆராயுந் தன்மையை. திட்பநுட்பஞ் செறிந்த தாகாமையின் காரணத்தையும் நாம் நன்ருக உணர்தல் வேண்டும். ஒப்பு நோக்குதலின்றி ஒன்றன் தன்மையை நாம் எக்காலத்தும் அறிதலில்லை. ஒன்றிேேடு ஒத்தும் ஒவ்வாதும் உள்ள பிறிதொன்றனை அடுத்துவைத்து, இரண்டன் ஒற்றுமை வேற்றுமை நயங்களைச் செவ்வனே ஆராய்ந்தாலன்றி அவ் இரண்டனுள் ஒன்றன் தன்மையையும் நாம் அறிந்தவர்களாகோம். ஒப்புநோக்குதலை அடிப்படையாகக்கொண்டே 'ஸையன்ஸ்' என்று கூறும் விஞ்ஞான சாஸ்திரம் அமைவதாகும். இந்த ஒப்புநோக்குதலின் இன்றியமையாமையை வேருெரு வகையாலும் நாம் உணரலாம். உலகத்திலுள்ள மரஞ்செடி முதலியன எல்லாம் யாதொரு வேறுபாடுமின்றி, எல்லா வகையானும் ஒன்றனையொன்று முற்றும் ஒத்துள்ளன என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஒப்புநோக்குதல் என்பது இயலாததாய் முடியும். முடியவே அம்மரஞ் செடி முதலியவற்றை இனமினமாகப் பிரித்தலும் இங்ஙனம் பிரித்தலின்மேல் நிகழும் ஆராய்ச்சியுமின்றி, இவ்வாராய்ச்சி

யால் அமையும் தாவரசாஸ்திரம்[1] என்னும் சாஸ்திரமும் இல்பொருளாகும். இங்ஙனமே உலகியற்பொருள்கள்பற்றிய பிறசாஸ்திரங்களும் இல்பொருள்களாகும். அறிவு வளர்ச்சிக்கே தாரதம்மிய வுணர்ச்சியும் ஒப்புநோக்குதலும் இன்றியமையாதன என்பது ஒரு பேருண்மை.

இத்துணை இன்றியமையாததான ஒப்புநோக்குதல் நமது ஆராய்ச்சி விஷயத்திலும் பெரிதும் வேண்டற்பாலதென்பது சொல்லாமலே அமையும். சங்கேத பதங்கள் இவ் வகை ஒப்புநோக்குதற்குப் பெருந்துணையா யமைவன. எங்ஙனமெனின், வடமொழிச் சங்கேத பதங்களைத் தமிழிலக்கண நூலார் தமிழ்மொழிபற்றிக் கூறியவளவில், இருமொழிகட்குமுரிய பொருள்களிலொன்று சுருக்கமாகவும் தெளிவாகவும் நமது அறிவுக்குப் புலனாகின்றது. புலனாகவே, இரண்டற்குமுரிய ஒற்றுமை வேற்றுமையும் உணர்தற்கு எளியனவாய்க் கிடக்கின்றன. இவ்வாறு ஒப்புநோக்குதற்குப் பெருந்துணையாய் அமைதலினாலே சங்கேத பதங்களை முற்கூறிய மூவகையானும் தொல்காப்பியர் எடுத்தாண்டனர்.

அன்றியும், இந்தச் சங்கேத பதங்கள் இலக்கணப் பொதுநூல்[2] என்னும் சாஸ்திரம் தோன்றுவதற்கும் ஒருவாறு பயன்படுவனவாம். பலவகைச் சாஸ்திர வுணர்ச்சிகளிலும் கலையுணர்ச்சிகளிலும் சிறந்து விளங்கும் மேனாட்டாரிடத்தும் சில ஆண்டுகட்கு முன்னர்த்தான் இலக்கணப் பொது நூலொன்று வேண்டுமென்ற உணர்ச்சி தலைப்பட்டது. இவ்வகை யுணர்ச்சி விளைவதற்குரிய செய்கையினைச் செய்து மொழிவளர்ச்சியினையும் அறிவு வளர்ச்சியினையும் ஒருங்கு போற்றிய தொல்காப்பியரது பெருமை நாம் என்றுங் கொண்டாடத்தக்கதாம்.

---

1 Botany
2 Science of Grammar

# 4. சிலப்பதிகாரத்தில் சில இலக்கண வழக்குக்கள்

சிலப்பதிகாரத்தின் பெருமையைத் தமிழ் மக்கள் ஒருவாறு உணர்ந்திருக்கின்றனர். அதன் இலக்கியத்தைத் தமிழ் வல்லார் பாராட்டிப் பெரிதும் மகிழ்கின்றனர். அதன் சரித்திர வுண்மையினைச் சரித்திரம் வல்லார் எடுத்துக்காட்டி அமைகின்றனர். ஆனால் இக்காவியம் இன்னகாலத்துத் தோன்றியதென்பது இன்றுகாறும் வரையறை செய்து துணியப்படவில்லை. ஆராய்ச்சியாளரிற் பெரும்பாலார் அது கடைச்சங்க காலத்து நூலெனக் கொண்டுள்ளார். இந்நூலின் ஆசிரியராகிய இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனுடைய தம்பியாரெனக் கூறப்படுகின்றனர். செங்குட்டுவனைக் கடைச்சங்கப் புலவராகிய பரணர் பாடியுள்ளாராதலினால், இளங்கோவடிகளும் கடைச்சங்க காலத்தினரே யெனக் கொள்வர். அன்றியும் மணிமேகலையின் ஆசிரியராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கடைச்சங்கப் புலவராதலின், அச்சாத்தனாராற் கேட்கப்பட்ட சிலப்பதிகாரத்தின் ஆசிரியரும் கடைச்சங்க காலத்தினரே ஆதல்வேண்டும் என்பர்.

**சிலப்பதிகாரம் கடைச் சங்க காலத்ததா?**

ஆனால் இக்கொள்கையை முடிவாக அங்கீகரிப்பதில் பல தடைகள் தோன்றுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே கூறுவேன் :

எதிர்காலங் குறிக்கும் தன்மை யொருமை விகுதியாக அல்' என்பது தொல்காப்பியனாராற் படிக்கப்பட்டுளது (தொல், சொல். 200). 'உண்பல்', 'தின்பல்' என்பன உதா

ரணங்களாம். பிற்காலத்தில் 'அல்' ஈறு, 'அன்' ஈருக வழங்கத் தலைப்பட்டது. இளம்பூரணர் 'கடதற வென்னும்' (தொல். சொல் 200) என்னுஞ் சூத்திர வுரையில், **'இப்பொழுது** இதனை (அல் என்பதனை) உண்பன் தின்பன் **என** அன் ஈருக வழங்குப' என்று எழுதினர். நேமிநாதமுடையாரும் 'அல் லுந் தனித்தன்மை யாம்' (சொல். 39) என்றே கூறி யொழிந் தார். இதன் உரையில், "**இக்காலத்து** அல்வினை அன் ஞய் நடக்கவும் பெறும்; என்னை? 'அல்வினை அன்ஞய்த் திரியவும் பெறுமே.' உ-ம். '**கூ**றுவன்' என்ருர் அமித சாகரர்" என்று காணப்படுகின்றது. இக்கூற்றுக்களால் 'அன்' ஈற்றுத் தன்மை யொருமைவினைச் சொல் பிற்கால வழக்கென்பது தேற்றம்*.

**'அல்' என்ற விகுதி**

சிலப்பதிகாரத்தின் பதிகத்திலே,

**யானறி குவனது பட்டதென் றுரைப்போன்**

என்று வந்துள்ளது. இங்கே 'அறிகுவன்' என்று அன் னீறு வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம். சிலர் பதிகம் பாடியவர் இளங்கோவடிகளல்லரெனக் கூறுவர். இக்கூற் றின் வன்மை மென்மைகளை இங்கே ஆராய்தல் வேண்டா. நூலினகத்தும் இவ்வகை வழக்குக் காணப்படுகிறது. உதா ரணமாக, கொலைக்களக் காதையில்,

**சீறடிச் சிலம்பி னென்றுகொண் டியான்போய்**
**மாறி வருவன்** (92-93)

என வந்துள்ளது. இதன்கண் 'வருவன்' என அன்னீறு வழங்கப்பட்டமை காணலாம். சிலர் 'வருவென்' என்ற என்

---

* 'அறிவன் கூறுவன் நிற்பன் உண்பன் எனவும், லகரவா தேசம் பெற்று அறிவல் கூறுவல் எனவும் தன்மை யொருமைத் துணிவு வந்தது' என்பர் வீரசோழிய வுரைகாரர்.

னீற்றுச் சொல்லை அன்னீற்றுச் சொல்லாகப் பிரதி செய்தோர் பிழைபட எழுதியிருத்தல் கூடுமென்று வாதித்தல் கூடும். இவ்வகை வாதத்திற்கும் இடமில்லாத பிரயோகம் ஊர்சூழ்வரியிலே காணப்படுகின்றது. அங்கே,

**பட்டேன் படாத துயரம் படுகாலை**
**யுற்றே னுறாத துறுவனே யீதொன்று** (5-6)

என வந்துள்ளது. 'உறுவன்' என வழங்கப்பட்டுள்ளமை காணலாம். இதுவே பாடமென்பதும், 'உறுவென்' என்பது பாடமன்றென்பதும், 'உறுவன்': அல்லீறு அன்னீறு யிற்று' என அடியார்க்கு நல்லார் எழுதுதலால் விளங்கும். இங்ஙனமே மேற்கூறிய ஊர்சூழ்வரியில்,

**காதற் கணவனைக் காண்பனே யீதொன்று** (10)

எனவும்,

**தீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று** (12)

எனவும் அன்னீறு பயின்று வந்துள்ளது.

இப்பிரயோகங்களால் சிலப்பதிகாரம் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டெழுந்த காவியமாகும் என்பது தெளிவாகிறது.

எதிர்காலம் பற்றி 'அன்' ஈறுபெற்ற வினைகள் சிலப்பதிகாரத்திற் காணப்படுதலாலும், தொல்காப்பியத்தில் கண்ட 'அல்' ஈறு பிற்காலத்து 'அன்' ஈறாகத் திரிந்ததென இளம்பூரணரை யுள்ளிட்ட ஆசிரியர்கள் கூறுதலாலும், சிலப்பதிகாரம் பிற்பட்டதாமென மேலே பார்த்தோம். கடைச் சங்க நூல்களெனக் கருதப்படும் தொகை நூல்களில்[1] இவ் அன்னீற்று வழக்குக் காணப்பட்டாமை மேலே முடிபை வலியுறுத்துகின்றது. பதினெண்

1. • 'ஈங்கே தலைப்படுவன்' எனக் கலித்தொகையிலும் (64) 'மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே' எனப் புறத்திலும் (290) வருவன பிரதிகள்நோக்கி ஆராய்தற் குரியன. 'மறைக்குவென்' என்பது உண்மைப் பாடமாகலாம் எனத் தோன்றுகிறது.

கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியாரில் இவ் வழக்கு உளதாக மயிலைநாதர் சுட்டியிருக்கின்றனர்.

**கல்லாப் புன்மாக்கள் கவற்றவிடுவனோ** (நாலடி. 45)... எனவரும் இத்தொடக்கத்தன முடியாவென்க' எனக் கூறிப் பவணந்தியார் 'அன்' என ஒரு விகுதியைப் படித்ததற்குக் காரணங் காட்டிச் செல்வர் (சூ. 330. உரை) அவ்வுரைகாரர். ஆனால் நாலடியாரில் முத்தரையர்கள் கூறப்படுதலினாலே அந்நூல் சுமார் கி. பி. 700-ல் தோன்றியதெனக் கொள்ளுதலே தகுதி. வெவ்வேறு காலத்தினராய சைனப் புலவர்கள் பலர் இயற்றிய செய்யுட்கள் 8-ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டனவென்று கொள்ளினும் அமையும். ஆகவே இந்நூலில் 'விடுவனோ' என்பது போன்ற வழக்குக் காணப்படுதல் வியப்பைத் தருவதன்று.

இனி, பிறிதொரு வழக்கினை நோக்குவோம். தொல்காப்பியத்தே பெயரியலில்,

**நீயிர் நீயெனக் கிளந்து** (சூ. 20)

என்றும்

**நீயிர் நீயென வருஉங் கிளவி**
**பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள** (சூ. 34)

என்றும்

**அவற்றுள், நீயென் கிளவி ஒருமைக் குரித்தே**
(சூ. 35)

**ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே** (சூ. 36)

என்றும் வந்துள்ளமை காணலாம். இங்கே 'நீர்' என

**நீர் என்ற முன்னிலைப் பன்மை**

இக்காலத்து வழங்குஞ் சொல் காணப்படவில்லை. இது பிற்பட்டெழுந்த தொரு வழக்காகும். நன்னூலார் இப் பிற்பட்ட வழக்கினையும் உள்ப்படுத்து

**... ... ...முன்னிலை**

**எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ** (பெயரியல், 28)

எனச் சூத்திரம் வகுத்தனர்.

முன்னிலையில் 'நீர்' என்னும் சொல்வழக்குச் சங்கநூல்களிற் பயிற்சியில்லை.* இதற்கு ஒரு காரணமும் நாம் காணுதல் கூடும். புனல் என்று பொருள்படும் 'நீர்' என்னுஞ் சொல் பெருவழக்காகச் சங்கநூல்களில் உள்ளது. உதாரணமாக 'தீமுரணிய நீரும்' (புறம். 2), 'நீர்நாண நெய்வழங்கி' (புறம். 384), 'நீர்நீடாடிற் கண்ணுஞ் சிவக்கும்' (குறுந்தொகை. 354) என்பனவாதிய பிரயோகங்களைக் காண்க. இச்சொல்லோடு மயங்கும்படி பிறிதொரு சொல்லைச் சங்கப் புலவர்கள் வழங்குதல் செய்யார். சங்கச் செய்யுட்களுக்குத் தெளிவும் நேர்மையுமே இயல்பான குணங்களாம். இவ் இயல்பிற்கு மாறாக அவர்கள் செய்யுளியற்றல் பெரும்பாலும் இல்லை.

'நீர்' என்பது சிலப்பதிகாரத்திற் பலவிடங்களிலும் வந்துள்ளது. முதலாவது பதிகத்திலே

**அடிக ணீரே யருளு கென்றற்கு** (62)

என்று காணப்படுகின்றது. இப்பதிகம் பிற்காலத்தொருவர் செய்ததெனச் சிலர் விவாதித்தல்கூடும். இப்பிரயோகத்தை ஒதுக்கினும், நூலினகத்தே புகார்க் காண்டத்தில்

**காடிடை யிட்ட நாடு நீர் கழிதற்**
**கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ** (X.53-4)

எனவும்

---

* 'சொற்களின் சரித'த்தில் 'முன்னிலைப் பெயர்' — என்ற கட்டுரைப் பகுதியைப் பார்க்க. 'குன்று முண்டுநீர் பாடினிர் செலினே' (புறம். 110) எனக் காண்கிறது. இப் பாடம் பிரதிகள் நோக்கித் திருத்தத் தக்கது. 'நீஇர்' என்பது பாடமாதல் வேண்டும்.

**அடிக ளீரே யருளுதி ராயின்** (X. *62*)

எனவும்

**நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி**
**யறியா தடியாங் கிடுதலுங் கூடும்** (X. *88-9*)

எனவும் வருகின்றன. மதுரைக் காண்டத்தில்

**வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்** (XI. *74*)

எனவும்.

**இட்ட சித்தி யெய்துவிர் நீரே** (XI. *103*)

எனவும்

**கூடற் காவதங் கூறுமினீ ரென** (XIII. *114*)

எனவும் காணப்படுகின்றன. வஞ்சிக்காண்டத்தில்

**பல்லா னிரையொடு படர்குவிர் நீரென**
(XXVII. *239*)

என வந்துள்ளது.

இங்ஙனம் பெருவழக்காகச் சிலப்பதிகாரத்திற் பல இடங்களினும் இச்சொல் வழங்கக் காணுதலாலே, இந் நூல் கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தே தோன்றியது என்று கருதுதல் தகும். சங்கநூல்களில் ஒன்றாகக் கருதும் கலித்தொகையில் ஓரிடத்து

**இறந்து நீர் செய்யும் பொருளினும்** (கலித். 5)

என்றும், பிறிதோரிடத்து

**என்னீ ரறியாதீர் போல இவைகூறல்** (கலித். 6)

என்றும் இச்சொல் பயின்று வந்துள்ளது. இது கலித்தொகையும் பிற்பட்டது என்பதற்கு ஒரு சான்று; பிற சான்றுகளுமுள.

இம் முன்னிலைப் பன்மையைப் போலவே, தன்மைப் பன்மையாகிய 'யாங்கள்' என்பதும் கடைச்சங்க நூல்களிற் காணப்படாத தொரு வழக்காகும். இதுவும் பிற் காலத்ததே. சிலப்பதிகாரத்தில்

**'நீ போ, யாங்களும் நீணெறிப் படர்குதும்'** (XI. 161)

என வந்துள்ளது. இக்காப்பியம் பிற்காலத்த தென்ப தற்கு இவ் வழக்கும் ஒரு சான்ருகும்.

இனி, வேருெரு வழக்கினை நோக்குவோம். 'யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்' என்பது தொல்காப் பியம் (பெயரியல். 8). இங்கே தன்மை யொருமைப் பெய ராக 'யான்' என்பதொன்றே கொடுக்கப்பட்டுளது. சங்க நூல்களில் யாண்டும் இச்சொல்லே தன்மை யொருமையில் வழங்குகின்றது. 'யான் வாழு நாளும் பண்ணன் வாழிய' (புறம். 173), 'யானே, யீண்டையேனே' (குறுந்தொகை. 54) என்பன முதலியவாக வரும் வழக்குக்களால் இவ்வுண்மை தெளிய லாம். இது நாளடைவில் 'நான்' எனத் திரியலாயிற்று.* இன்றுகாறும் 'யான்' என்பதுவே இலக்கிய வழக்கில் முனைத்து நிற்கின்றது. நன்னூலார் இவ்வழக்கினை அமைதியுடையதாக்கி

**'நான்' என்ற தன்மை ஒருமை**

**தன்மை யான் நான் யாம் நாம்** (பெயரியல், 28)

எனச் சூத்திரம் இயற்றுவாராயினர். நான் என்பது கடைச் சங்க நூல்களில் **ஓரிடத்தேனும்** வழங்கப்படாமை நன்கு கவனித்தற்குரியது.

இங்ஙனம் இருப்பவும், சிலப்பதிகாரக் காப்பியத்திலே வாழ்த்துக் காதையில்,

---

* சில மலையாள அறிஞர்கள் நான் என்பதே பூர்வவடிவம் என்பர். இது பொருந்துவதன்று. 'சொற்கலை விருந்தில்' 'தமிழும் மலையாளமும்' என்ற கட்டுரையை நோக்குக.

**தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்**
**சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்**

என்றும்

**தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்**
**தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்**

என்றும்

**பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்**
**பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்**

என்றும் வந்துள்ளமை காண்கின்றோம். ஈண்டெல்லாம் பிரதிசெய்தோர் தவறாக 'யான்' என்பதற்கு 'நான்' என எழுதியிருத்தல் கூடுமன்றோ எனச் சிலர் ஆசங்கித்தல் இயலும். 'யான்' என்பதே பெருவழக்காகப் பல இடங்களிலும், இந்நூலில் வந்துள்ளது. அவ்விடங்களிலெல்லாம் பிழையின்றி நேரான சொல்லை எழுதியவர்கள் இங்கே 'நான்' எனப் பிழைபட எழுதுதற்குக் காரணம் யாதுமில்லை. சிலப்பதிகாரக் காப்பியத்தைப் பல பிரதிகள் கொண்டு செவ்வனம் ஆராய்ந்து பதிப்பித்துள்ள பதிப்பின் கண்ணும் இவ்விடங்களிற் பாடபேதமாகக்கூட 'யான்' என்பது காட்டப்படவில்லை. இவ்வகைப் பாட பேதங்கள் குறிக்கத்தக்கனவல்லவெனப் பதிப்பாசிரியரவர்கள் ஒதுக்குபவர்களுமல்லர். ஏனெனின் 'வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டு யானகலேன்' என்ற இடத்து நான் என்பதனைப் பாடபேதமாகக் காட்டியுள்ளார்கள். ஆதலால் 'நான்' என்பதுவே உண்மைப் பாடமெனக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் இவ்வாறு சமாதானங் கூறவேண்டும் அவசியத்திற்கே ஆசிரியர் இடம் வைக்கவில்லை. பிறிதோரிடத்து மோனையிற் றானே 'நான்' என்பது அமைந்து கிடக்கின்றது :

**தென்னவன் றீதிலன் தேவர்கோன் றன்கோயில்**
**நல்விருந் தாயினான் நானவன் றன்மகள்**

என்று இவ்வாழ்த்துக் காதையிலே கண்ணகியார் கூற்றாக வந்துள்ளது. இங்கே 'நான்' என்பதுதான் பாடமென்பது மிகத் தெளிவாயிருத்தல் காணலாம்.

**'இந்த' என்னும் சுட்டு**

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் 'இந்த' 'அந்த' முதலிய சுட்டுச் சொற்கள் பயின்று வரவில்லை. திருக்குறளிற் கூட இவ்வகையான பிரயோகம் இல்லை. பழங்காலத்தில் சுட்டி உணர்த்த வேண்டிய இடங்களில் 'அப்பொருள்' 'இவ்வைந்து' என்றாற்போல சுட்டு-எழுத்துக்களையே பிரயோகித்து வந்தார்கள். சிலப்பதிகாரத்திலே இப் பிற்பட்ட வழக்காகிய 'இந்த' என்ற சுட்டுச்சொல் (XXI, 51) பயின்று வந்துள்ளது.

இவ்வகையான சொல் வழக்குக்களினால் சிலப்பதிகாரம் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூலென்பது ஐயப்பாட்டிற்கு இடமின்றித் துணியத் தகுவதாயுள்ளது.

# 5. அண்மை விளி

"**அ**ண்மைச் சொல்லே இயற்கை யாகும்" என்ற தொல்காப்பிய விளிமரபுச் சூத்திரம் நான்கு உயிரீற்றுச் சொற்களுக்கு மாத்திரமுரிய விதியாகுமென்றும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னும் மூன்றுரைகாரர்களும் அவ்வாறே பொருள்வரைந்துள்ளார்கள் என்றும் யான் 13-ம் புறப்பாட்டுப் பற்றிய ஆராய்ச்சியுரையில்* எழுதியிருந்தேன். இதனைச் செந்தமிழ்ப் பத்திராசிரியரவர்கள் மறுத்து மேற்கூறிய மூன்றுரையாளர்களும் அங்ஙனங் கொள்ளவில்லை என்ற தம் முடிபை நிலைநிறுத்துதற்குப் பலபல விசாரணை செய்தார்கள். மூன்றுரைகளையும் வாசித்த மாத்திரையில் உண்மை எதுவென்றறிதல் எளிதாயிருத்தலின், இவ்விஷயம் பற்றி இன்னுஞ்சில எழுதுதல் அனாவசியகமாகும். உரைகாரர்களது கருத்து தமது கக்ஷிக்கு விரோதமாயுள்ள தென்றதனை நன்குணர்ந்தே 'இவனியார்' (13) என்னும் புறப்பாட்டாராய்ச்சி' யெழுதிய மாணவரவர்களும் தொல்காப்பியச்

**இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர்: கருத்துக்கள்**

---

* 13-ம் புறப்பாட்டுரை பற்றிய ஆராய்ச்சி, தமிழ்ப் பெரும் புலவருள் ஒருவரும், வடமொழி, தருக்கம் முதலியவற்றில் பெரும் பாண்டித்தியம் வாய்ந்தவரும், மதுரைச் செந்தமிழ்க் கலாசாலையில் தலைமை உபாத்தியாயரா யிருந்தவரும் ஆகிய ஸ்ரீமான் திரு. நாராயணய்யங்கார் எழுதிய ஒரு கண்டனவுரை நோக்கி எழுந்ததாகும். இவ்வுரை பற்றி எழுந்த விவாதத்தின், பொருட்டு, அண்மை விளி பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்களும் அவற்றின் உரை நெறியும் ஆராயப்பட்டன. இங்குக் குறித்த 13-ம் புறப்பாட்டு ஆராய்ச்சி தனி நூலாக அண்மையில் வெளிவரும்.

சூத்திரத்தினை எடுத்துக் காட்டியவிட்த்து அதனுரைகளைப் பற்றி யாதுங்கூறாது விடுத்தார்கள்.

மேலே சுட்டிய மூவரேயன்றி வேறிருவர் சொல்லதிகாரத்திற்கு உரையிட்டுள்ளார்கள். இவ்விருவருள் பேராசிரியரது உரையைப் பத்திராசிரியரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வுரையையும் அதுபற்றி அவர்கள் கூறியிருப்பனவற்றையும் பின்னர் ஆராய்கின்றேன். ஐந்தாவது உரைகாரராகிய* கல்லாடரது கருத்தை முற்படத் தருகின்றேன். அவருரை வருமாறு :—

'அண்மைச்சொல்லே யியற்கையாகும்': என்னுதலிற்றோவெனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று. மேற்கூறியவாறன்றி இன்னுழி யியல்பாம் என்கின்றமையின் **மேற்கூறிய வுயிரீறு நான்கினையுமுடைய அணியாரைக் கூவுஞ்சொற்கள்** இயல்பாய் விளியேற்கும என்றவாறு. உ-ம். நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோவாழி என வரும்.

**கல்லாடர் கருத்து**

இவ்வுரையினின்றும் கல்லாடரது கருத்து மிகத் தெளிவாய் விளங்குகின்றது. இளம்பூரணராதிய உரைகாரர்களோடொப்ப, இவரும் இச்சூத்திரம் நான்கு உயிரீற்றுப் பெயர்களுக்கு மட்டும் ஏற்புடையதொரு விதியாகும் என்றே கொண்டனர். மெய்யீற்றுப்பெயர்களை இதனுட் கொண்டிலரென்று கூறுதல் மிகையாம். இங்ஙனமாக,

---

* கல்லாடரது உரையையும், பேராசிரியரது உரையையும், இளம்பூரணரது உரையையும், எனது அன்பார்ந்த சகோதரர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் மூலமாய்ப் பெற்றேன். 'பேராசிரியருரை' யென்று இப்பகுதியில் வியவகரிக்கப்படுவது தெய்வச்சிலையாரது உரை யெனத் தெரிகின்றது. இவ்வுரை இப்போது வெளியிடப்பெற்றுளது.

ஆராய்ச்சியிற் சிறந்த நான்கு உரைகாரர்கள் வேறுபாடின்றி ஒரேமுகமாகக் 'கிழவோன்' அண்மைவிளியெனற்கு இச் சூத்திரம் ஆதாரமாகாதென்னுங் கருத்தினராயுள்ளார்கள்.

இனி, பேராசிரியருரையினையும் அதுபற்றிப் பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பனவற்றையும் சிறிது ஊன்றி நோக்குதல்வேண்டும். எனக்குக் கிடைத்த பேராசிரியருரைப்பிரதி தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலுள்ள பிரதியினின்றும் எடுத்தெழுதி யனுப்பப்பட்டது. அதன்கண்ணுள்ளதைக் கீழே தருகின்றேன்.

பேராசிரியர் உரை

'அண்மைச்சொல்லே யியற்கையாகும் - இத் திணைக் கண்வரு மெல்லாவீற்றுப் பெயரு மண்மைக்கண் விளியேற்குமாறுணர்த்திற்று. இச்சூத்திர முன்னும் பின்னு நோக்கி நிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்ததென்று கொள்க. மேற்சொல்லப்பட்ட வுயிரீற்றுப்பெயரு மினியோதுகின்ற புள்ளியீற்றுப்பெயரு................ப்பெயரு மண்மைக்க ணியல்பாகி விளியேற்கும்; **னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்.**

'நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோ வாழி மாதர் கூறு, அண்ணல் கூறு,...............தும்பி கூறு, அன்னங் கூறு, கானல் கூறு' எனவரும். பிறவுமன்ன. ஆவுமானியற் பார்ப்பனமாக்களு' மென்பது மண்மைவிளி."

இப்பாடத்திற்கும் பத்திராசிரியரவர்கள் பதிப்பித்த பாடத்திற்கும் ஒரு சிறிது வேறுபாடுண்டு. உரையில் 'புள்ளியீற்றுப் பெயரு' மென்பதனை யடுத்துச் சில வெழுத்துக்கள் மறைந்துபோயினமை தெரித்தற்கு இடம் விடப்பட்டிருத்தல் காணலாம். உதாரணங்களில் 'அண்ணல் கூறு' என்பதற்கும் 'தும்பி கூறு' என்பதற்கும் இடையே

ஒருதாரணம் விடுபட்டுப்போயினமை காட்டுதற்கும் இடந் தரப்பட்டிருக்கிறது.

பிறவுரையாளர்களோடு மாறுபட்டுப் பேராசிரியர் சூத்திரவுரை வகுத்துள்ளாரென்பதிற் சிறிதுஞ் சந்தேக மில்லை. இச்சூத்திரத்தினைச் சிங்கநோக்காகக் கொண்டமை யும் உரையால் வெளியாகின்றது. ஆனல் வியவகார காரணமாயுள்ளது எவ்வீற்றுச்சொல்லோ அவ்வீற்றுச் சொற்கள் சம்பந்தமானவரையில் இப்பேராசிரியருரைக்கும் பிறவுரைகளுக்கும் சிறிதும் வேறுபாடில்லை. ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி, நுணுக்கவாராய்ச்சியால் திரித்துக் கொள்ள முடியாதபடி, 'னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்' என்று மிகத்தெளி வாக அவ்வுரையின்கண் காணப்படுகின்றது. ஆகவே 'கிழவோன்' என்ற னகரவீற்றுச்சொல் இயற்கை யண்மை விளியாமெனற்கு 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்னும் சூத்திரம் ஆதாரமாகாதென்பதே பேராசிரியர்க்குங் கருத்தாதல் நன்கு அறியப்படும்.

இங்ஙனமாகப் பேராசிரியருரையினாலேயும் தமது கக்ஷி அநுகூலமடையவில்லை யென்பது கண்ட பத்திராசிரிய ரவர்கள் அவ்வுரைப் பகுதியில் தமக்குப் பிரதிகூலமாயுள் ளன இடைச்செருகலென்று கூறத் துணிந்தார்கள்.

பேராசிரியருரையை ஆதாரமாகக் காட்டினவர்கள் பத்தி ராசிரியரவர்களாம். அவ்வாறு காட்டின மாத்திரையானே இப்போதுள்ள உரைரூபமுற்றிலும் நம்பி யங்கீ கரிக்கத் தக்கதா யிருக்கவேண்டும் என்பது தானேபோதருகின்றது. இதற்கு மாருகத் தமக்கு உறுதுணை யெனக் கொண்ட ஆதாரத்தின் கண்ணே இடைச்செருகலுளதெனக் கூறுவதாயின், அவ் ஆதாரந்தான் எத்துணை வலியுடையதென்று எடுத்துச்

**பத்திராசிரியர் மறுப்பு**

சொல்லவும் வேண்டுமோ? உரைரூபத்திற் சிறிதேனுஞ் சந்தேக மேற்படுமாயின், அதனை யாதாரமாகக் காட்டுதலிற் பயனுமில்லை: அஃது அங்கீகார யோக்கியமுமாகாது. அன்றியும், இடைச்செருக லிருப்பதா யேற்படுமாயின், எவை யெல்லாம் அவ்வாறுள்ளனவென்று துணிந்தறிதல் வேண்டும். உண்மையுரை யென்று கொள்ளும் ஒவ்வொரு பகுதியும் பரிசோதனையால் இடைச்செருகல் அன்றென்பது தெளிவிக்கப்படுதல் வேண்டும். 'சிங்க நோக்கு' என்ற கருத்தும் அதற்கு அநுகூலமாயிருக்கும் ஒரு சிலவும் இடைச்செருகலல்லவென்பது ஒருதலையாகத் தெளிவிக்க வேண்டும் பொறுப்பு அவர்கள் பாலதாம். இப்பொறுப்பினைப் பத்திராசிரியரவர்கள் நிறைவேற்றவில்லை.

இலக்கணவுரை போன்ற விசேஷ நூல்களில் (Technical works) இடைச்செருகலுளதாதல் மிகவும் அரிதாம்.

**உரையில் இடைச் செருகல்**

இவ்வகை நூல்களிற் சில பிரதிகளையும், இராமாயணப் பிரதிகளிற் சிலவற்றையும் ஒப்பு நோக்கினார்க்கு இக்கூற்றின் உண்மை யெளிதிற் புலப்படும். இலக்கண உரைகளிலேயும் இடைச்செருகல் உளதென்பதற்கு உரையாசிரியருரையிற் சில பகுதிகளைப் போலியுரை யெனச் சேனாவரையர் நிறுவுதலை ஆதாரமாகத் தருகின்றார்கள். ஆனால் 'போலியுரை' எனப்படுவதன் கருத்து இடைச்செருகலன்றென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். ஆசிரியர் கருத்தினைப் பிழைபட வுணர்ந்து தவறாகக் கொண்ட பொருளே போலியுரை யென்று கூறப்படுவது. இங்ஙனமிருப்பவும், 'போலியுரை' என்று சேனாவரையர் முதலியோர் கூறியதனை இடைச்செருகலுண்மைக்கு ஆதாரமாகக் காட்டியது தமிழுலகத்திற்கு என்றும் வியப்பாகவே இருக்கும். இது நிற்க. விசேஷ நூல்களுள்ளும், எழுதுவாரும் படிப்பாருமின்மையால் இங்ஙனமோருரை யுண்டென்பதுதானும் தமிழ் மக்கள் வெகுகால

மாக அறியர்திருந்த ஒருரையின் கண்ணே இடைச்செருகல் காணப்படுதல் அரிதினுமரிதாம்.

இங்கே கூறியவற்றுல், பேராசிரியருரையில் இடைச்செருகலுளதென்னும் பத்திராசிரியரவர்கள் கூற்று மிகுதியும் ஐயப்பாட்டிற்கு ஹேதுவாய் நிற்பதெனல் அறியலாகும். அதிலேயும் உரையில் எப்பகுதி தம் கக்ஷியைப் பொய்ப்படுத்துவதோ அப்பகுதியே இடைச்செருகல் என்று அவர்கள் கூறும்பொழுது, ஏற்கெனவே நிகழ்ந்த ஐயம் வலியுற்று அவர்கள் கூற்றின் நொய்ம்மையை வெளியாக்குகின்றது. எனினும், இடைச்செருகலா மென்பதற்குப் பத்திராசிரியரவர்கள் தரும் நியாயங்களை ஆராயவேண்டுங் கடமை என்பாலுளது. 'னகரவீறு சிறப்பு விதி பெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற் காணப்படுகின்றது. னகரவீற்றுச் சொற்களுக்குரிய அண்மைவிளிச் சிறப்பு விதி விளிமரபின்கண் இல்லையாதலின் பேராசிரியர் அங்ஙனம் கூறுர் என்பதும், 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்' என்ற சூத்திரம் சிறப்பு விதியாதலில்லை யென்பதும் பத்திராசிரியரவர்கள் கூறும் நியாயம். இச்சூத்திரம் சிறப்பு விதியாகுமென்று பேராசிரியர் கருதியுள்ளாரா வென்னும் விஷயமே முதலில் ஈண்டாராய்தற்குரியது ; பிறிதன்று.

இதனை நிச்சயித்தற்குப் பத்திராசிரியரவர்கள் இடைச்செருகலெனத் தள்ளாது பேராசிரியரது உரைதானென ஒப்புக்கொண்ட உரைப்பகுதியே தக்க கருவியாகக் கொள்ளற்பாலது. பிறிதொன்றனைக் கொண்டால் அதனை இடைச்செருகலெனல் அவர்கட்கு மிக எளிது. அவர்கள் ஒப்புக்கொண்டவற்றில் 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்' என்றதன்கீழ்க் காணப்படும் 'எய்தியது விலக்கி

எய்தியது விலக்கி மேலதற்கோர் புறனடை உணர்த்துதல்

மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று' என்ற வாக்கியமுமொன்று. இந்த வாக்கியத்தின் உண்மைப் பொருளை விசாரிப்பதனுல் மட்டுமே, பேராசிரியரது கருத்து வெளியாகக்கூடும். எவ்விதியினு லெய்தியதனை விலக்கிற் றென்றும் **மேலதற்கு** என்றது எச்சூத்திரத்தினை யென் றும் நோக்குதல் வேண்டும்.

**மேற்கூறியதன் உண்மைப் பொருள்**

முதலாவதாக 'மேலதற்கோர் புறநடை' என்பதை யெடுத்துக் கொள்க. உரைகளில் இவ்வாறு வருமிடங்களை யெல்லாம் நோக்குவோமாயின், அஃது எச் சூத்திரம்பற்றி யெழுந்ததோ அதற்கு **நேரே யடுத்து** முன்புள்ள சூத்திரத்தினையேஉணர்த் துவதாக இருக்கிறது. இவ்விதம் உணர்த்த வில்லையெனின், 'மேலதற்கு' என ஒன்றனைக் குறிப்பிட்டுக் கூறுவதனுற் பயன் யாது மின்ரும். நச்சினூர்க்கினியர் இத் தொடரைச் சொல்லதிகாரத்தில் 10 முறை யெடுத்தாண் டுள்ளார் (சூ. 21, 36, 96, 114, 273, 277, 408, 428, 443, 454). ஈண்டெல்லாம் அவ்வச் சூத்திரங்களுக்கு **அடுத்து** முன்புள்ள சூத்திரங்களையே அது குறிப்பதாகும். இங்ஙன மன்றி முன்பு வந்துள்ள பிறிதொரு சூத்திரத்தினை இச் சொல் சுட்டுவதாதல் பண்டையுரைகளில் யாண்டுமில்லை யாம். ஆகவே 'எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று' என்ற வாக்கியத்தில் **மேலதற்கு** என்ற சொல்லாற் குறிப்பிடப்பட்டது சந்தேகத்துக்கிட னின்றி நிச்சயமெய்துகின்றது. தமிழ் மொழியிலுள்ள சொற்களுக்குப் பொருள் நியதி யுண்டாயின், பேராசிரியர் பொருள் நியதி யறிந்து சொற்களைப் பிரயோகித்திருப்பா ராயின் 'மேலதற்கு' என்ற சொல் இவ்விடத்தில் 'அன் னென்னிறுதி யாவாகும்மே' என்றதனையே குறிக்கவல்லது பிறிதொன்றனையும் குறிக்கமாட்டாது.

இனி, புறநடை யென்பதன் கருத்து யாதென அறிதல் வேண்டும். உரைகாரர்களது பிரயோகங்களை யுற்று நோக்கிஞல், அஃது இரண்டு வகையான் உணரப்படுவது காணலாம். (i) ஒரு சூத்திரத்தின் ஆணை செல்லுகின்ற விடத்து புறனடைச் சூத்திரத்தின் ஆணையும் உடனிகழ்ந்து விதியை முற்றுவிக்கும்; உதாரணமாக, 'அவைபல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்ற சூத்திரத்தினையும் அதற்குப் புறநடையாக வந்த 'மறைக்குங் காலை மரீஇய தொராஅல்' என்ற சூத்திரத்தினையும் நோக்கி இதனுண்மை தெளியலாம். (ii) சூத்திரத்திஞணை செல்லா தொழிந்து நின்ற இடத்துப் புறநடை சூத்திரத்தின் ஆணை நிகழ்ந்து இலக்கணத்தை முற்றுவிக்கும். உதாரணமாக 'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி-பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே' என்ற சூத்திரத்தினையும் இதற்குப் புறநடையாக வந்த 'அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்' என்ற சூத்திரத்தினையும் நோக்கி யுணர்க. 'அதிகாரப் புறநடை' என்ற விடத்தெல்லாம் இவ்விரண்டாவது பொருளினையே நெறிப்பட விரித்துணர்கின்ருேம்.

'மேலதற்கு' என்றதன் பொருளொடு பொருந்தப் 'புறநடை' யென்பதற்குப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். இங்ஙனம் கொள்ளுங்கால் இரண்டாவது பொருளே ஏற்புடையதாயமையும். 'அன்னெனன்னிறுதி' யென்பது அண்மைச் சொல்லிற்குச் செல்லாது. அங்ஙனம் செல்லாத அண்மையிடத்து, அண்மைச் சொல்லிற்கு அகரமாகும்' என்றதன் ஆணை நிகழ்ந்து, அன்னீறுபற்றிய இலக்கணத்தை முற்றுவிக்கிறது. ஆதலால், 'புறநடை யெனின் அன்னீறெல்லாம் அண்மைக்கண் ஆகாரத்திரிவும் உடன் பெறவேண்டும்' என்று கூறுவது பொருந்தாது. மேலைச் சூத்திரத்திற்குப் புறநடையாகக் கொண்டு 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்றதனுல் எய்தியதனை விலக்கு

வதாகக்கூறின், சிங்க நோக்கு "இடையிட்டு மறைக்கப் பட்ட பிறவீற்றிலும் செல்லாதொழியும்" என்று பத்திரா சிரியரவர்கள் கூறுவதும் பொருந்தமாட்டாது. ஏனெனில், சிங்க நோக்குச் சூத்திரத்தினை யடுத்து உயர்திணை மெய் யீறுகள் அனைத்தும் ஒருங்கு கூறப்படுதலின் இடையிட்டு மறைப்பதற்கு யாதுமில்லையாம்.

இனி 'எய்தியது விலக்கி' என்றதனை 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்றதன்கீழ்க் காணப்பட்ட போது எவ்வாறு வியாக்கியானித்தொழிந்தார்களோ (செந் தமிழ்-XVII:8-பக். 376 முதல்) அவ்வாறு செய்யாது, அதன் உண்மைப் பொருளை (பொதுவாக முன் வந்த சூத்திரமொன்றினுற் பெறப்பட்டதை விலக்குதல் என்ப தனை)த்தந்ததற்குத் தமிழுலகம் கடப்பாடுடையதாகின்றது. 'அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்-இயற்கையவாகுஞ் செயற்கையவென்ப' வென்பது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுப்பது என்றனர் நச்சினார்க்கினியர். இது மூன்று சூத்திரங்களுக்கு முன்புள்ள 'இ ஈயாகும்; ஐ ஆயாகும்' என்ற சூத்திரத்தால் எய்தியதனை விலக்கியது. ஆதலாற் பொதுவாக முன்பு வந்த சூத்திரமொன்றினை இத்தொடர் குறிக்க வல்லதென்பது அறியலாகும். 'மேலதற்கோர் புற நடை' யென்பது 'அன்னென்னிறுதி யாவாகும்மே' என்ற சூத்திரனையல்லது பிறிதொரு சூத்திரத்தினையுங் குறிக்க மாட்டாதாதல் மேலே நன்கு பெறப்பட்டமையின், 'எய்தி யது விலக்கி' என்பது 'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்னுஞ் சூத்திரம்பற்றியே யெழுந்ததாகும். இச் சூத்திரம் சிங்க நோக்காக நிற்பதென்பது பேராசிரியர் கருத் தாதலால் அது மெய்யீற்றினையும் தழுவுவதாய் முடிய, னகர-ஈறு சம்பந்தமான வரையில் அவ்வாறெய்தியது விலக்கப் பட்டது. இங்ஙனம் பொது விதியை விலக்கிப் பிறிதொரு விதி வகுத்தலினாலே 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்'

என்பது சிறப்பு விதியாமென்றலே பேராசிரியரது கருத்தாய் முடிந்தது.

ஈண்டெழுதியவற்றால் 'னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந்து ஏனையகொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற் காணப்படுவது அறியாதாரது இடைச்செருகலன்றென்பதும் முன்பின் வாக்கியங்களாற் றெளியப்பட்ட அவரது கருத்தோடு முற்றும் பொருந்துவதாகுமென்பதும் நன்குணரலாகும். 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்' என்பது அன்னீற்றுச் சிறப்புவிதியாமேயன்றி னகரவீற்றுச் சிறப்பு விதியெனல் பொருந்தாதாகலின், பேராசிரியர் அங்ஙன மெழுதார் என்கிறார்கள். விளிமரபில் னகரவீற்றில் அன்னிறுதிச் சொற்களும் ஆனிறுதிச் சொற்களுமே கொடுக்கப்பட்டுள்ளன. 'னகரவீறு சிறப்புவிதி பெறுதலின்' எனப் பேராசிரியருரையிற் காணப்படுவதால் இவை யிரண்டும் சிறப்புவிதி பெறுதல் வேண்டும். இவற்றுள் அன்னிறுதி சிறப்புவிதிபெற்றமை மேலெழுதியவற்றால் தெளியப்பட்டது. ஆனிறுதியும் சிறப்புவிதி பெற்றுளதாவென்பது ஆனிறுதிபற்றிய சூத்திரங்களுக்குப் பேராசிரியர் கூறிய உரைநோக்கியே துணியப்படுதல் வேண்டும். அங்ஙனம் நோக்காது னகரவீறு சிறப்புவிதி பெறவில்லையெனப் பத்திராசிரியரவர்கள் கூறுவது பொருந்தாது. மேலும் அன்னீறொன்றே அண்மைவிளி யேற்றற்குரியதென்பது பேராசிரியர் கருத்தாயினு மாகலாம். இவையெல்லாம் விளிமரபுச் சூத்திரங்களனைத்திற்கும் பேராசிரியருரை வெளிவந்த பின்னரே நிச்சயிக்கற்பாலது. இந்த உரையை வெளிப்படுத்தி நிச்சயஞ்செய்தலை விடுத்துப் பேராசிரியர் கருத்தை ஒருவாக்கியங்கொண்டே அறிய முயலுதல் நியாயமுறை யன்றாம்.

உரை கிடைத்த அள்வில் 'னகரவீறு சிறப்புவிதி பெறு தலின்' என்பது பேராசிரியர் கருத்தேயாகு மெனற்கு வேறு சான்றும் உளது.

'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தின் கீழ் னவ்வீற்றுதாரணம் கொடுக்கப்படவில்லை. உயர்திணை உயிரீறும் மெய்யீறும் சம்பந்தமானவரையில் உதாரணங்களைப் பூர்த்தியாகத்தருதலே பேராசிரியர் கருத்து. முதலாவதாக உயிரீற்றுதாரணங்கள் நான்கும் தருகின்றார். பின் 'னரலள' என்னும் நான்கு மெய்யீற்றுதாரணங்கள் தரப்படுதல்வேண்டும். 'கோவாழி' யென்பதனை யடுத்து 'மாதர்கூறு' என ரகரவீறு காணப்படுகின்றதே யன்றி னகர வீற்று உதாரணமில்லை. இதன் பின் லகர வீறு வரல்வேண்டும்; அவ்வாறே 'அண்ணல்கூறு' என்ற உதாரணம் உள்ளது. இதனையடுத்து ளகரவீற்று உதாரணம்வேண்டும்; இதற்குரிய இடம் விடுபட்டிருக்கிறது. இம்முறையை நோக்குமிடத்து 'னகரவீறு சிறப்பு விதி பெறுதலின் அஃதொழிக்கப்பட்டது' என்ற கருத்துப் பேராசிரியரதே யாதல்வேண்டுமென்பது உறுதியடையவில்லையா? ளகரவீற்று உதாரணம் காணப்படாமைபற்றி அவ்வீற்றினை விலக்கல் பேராசிரியரது கருத்தெனல் பொருந்தாதவாறு போல், னகரவீற்றுதாரணம் காணாததுபற்றி அதனை விலக்கினாரென்றல் சரியன்றெனின், அங்ஙனமன்று. ளகரவீற்றுக்குரியவிடம் தஞ்சைப்பிரதியில் விடுபட்டிருப்பதே பேராசிரியருரையில் அவ்வீற்று உதாரணங் காட்டப்பட்டிருந்தமைக்குச் சான்றும். னகரவீற்றுதாரணம் கொடுக்க வேண்டும் நிலையில் இடம் விடப்படவில்லையென்பது அறியத்தக்கது. உயிரீற்றுதாரணங்க ளொழிய ஏனையுதாரணங்களெல்லாம் இடைச் செருகலாமென்று கூறி, அறியாதார்

பேராசிரியர் உரைப் பிரதியின் ஆராய்ச்சி

கை ஈண்டுத் தெளியக்கிடத்தலாலே இடைச்செருகல் மிகுதியும் உளதென்பதைக் குறிப்பிற் பெறவைக்கிருர்கள். ஆனல் தஞ்சைப் பிரதியை நோக்குமிடத்து உண்மை யொருவாறு அனுமானிக்கக் கூடியதாயிருக்கிறது. அதில் "மேற் சொல்லப்பட்ட வுயிரீற்றுப் பெயருமினியோதுகின்ற புள்ளியீற்றுப் பெயரு........ப்பெயரு மண்மைக்க ணியல்பாகி விளியேற்கும்" என்று காணப்படுகிறது. இத்தொடரில் எழுத்துக்கள் மறைந்திருப்பதையும் உதாரணங்கள் காட்டப்பட்டிருப்பதையும் உத்தேசித்தால் 'மஃறிணை' யென்பது விடுபட்டுப் போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. வேறு பிரதிகள் நோக்கியே இதன் உண்மை யறியவேண்டியதா யிருப்பினும் "அவற்றை (அவ்வுதாரணங்களை) ஈண்டமைத்தற்கேற்ற குறிப்பு **ஒன்றுமில்லை**" யென்று பத்திராசிரியரவர்கள் கூறுவது பொருந்தாமை காணலாம்.

இவ்வாருகத் தஞ்சைப்பிரதி சில உண்மைகளைத் தெரிவிப்பதாயிற்று. பேராசிரியருங்கூட 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரம் ணகரவீற்றுப் பெயர்கட்கு உரியதன்றெனக் கொண்டமை தெளிவாகின்றது. ஆகவே தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைகண்டவர்களுள் ஒருவரேனும் 'கிழவோன்' என்பது இயற்கை யண்மைவிளியெனற்கு 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தினை ஆதாரமாகக் கொள்ளுங் கருத்துடையாரல்லர். மிகத் தெளிவான வாக்கியங்களை நுணுகிநுணுகியாராய்ந்து வேண்டும்பொருள் பெறவைத்தும், அவ்வாறும் வியாக்கியானஞ் செய்தொழிக்கக் கூடாததனை இடைச்செருகலென்று ஒதுக்கிவைத்தும், உரைகாரர்கள் கூருததனை அவர்கள் கூறினர்களெனக் காட்ட முயல்வது பெரிதும் விசனிக்கத்தக்கதாம். இவ்வாறு செல்லாது உரைகாரர்கள் அனைவரும் பிழைபோயினர்களென்று பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பின், அக்கூற்று எல்லாராலும் போற்

றற்குரியதாய் நன்மதிப்புப் பெறும். ஆனல், தொல்காப்பிய முழுமையு நன்கு கற்று அதன் பொருள் செல்நெறியையும் (Method of exposition) ஊன்றி நோக்குவார்க்குப் பேராசிரியரொழிந்த ஏனையுரைகாரர்கள் இவ்விடத்தில் உண்மையுரையினையே கூறியுள்ளார்களென்பது வெளியாகுமென நினைக்கின்றேன். 'தொல்காப்பியமும் அதன் உரைநெறியும்' என்ற விஷயம் தமிழ்மக்கள் எல்லாரானும் நன்கு ஆராய்ந்தறிதற்கு உரியது.

# 6. உறுப்புச்செய்யுள்

வெண்பாப்பாட்டியலில் 'உறுப்புச்செய்யுள்' எனச் **இலக்கணம்** செய்யுள் வகையொன்று கூறப்பட்டுள்ளமை பலரும் அறிவர். இதன் இலக்கணம்,

**வழக்கின் மரபியலின் நேர்ந்து வழுவாது**
**இழுக்கி வடவெழுத்தை இன்பம்—வழுக்காது**
**முன்னையோர் பாட்டில் பயின்ற மொழியன்றே**
**சொன்ன உறுப்பின் துணிபு** (பொது. 5)

என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவ் இலக்கணத்தின் படி, இச்செய்யுள் வகையில் வருஞ்சொற்கள் மூன்று இயல்புகள் உடையனவாயிருத்தல் வேண்டும்.

1 வழக்கினோடும் மரபினோடும் பொருந்தி வழுவாமை

2 வடவெழுத்துக் கலவாமை

3 இன்பம் நிரம்பிச் சான்றோர் செய்யுட்களிற் பயின்று வந்த சொல்லுடைமை

மூன்று இயல்புகளையும் தெளிவாக உணர்ந்துகொள்ளுதல் அவசியம். வழக்கு என்பது செய்யுள்வழக்கு, உலக வழக்கு என்ற இரண்டனையும் குறிக்கும். மரபு என்பது தொல்காப்பியத்துள் மரபியலில் விதித்தனபோன்ற நியமங்களைக் குறிப்பது. வடவெழுத்து என்பது வடமொழிக்கே சிறப்பாக உரிய எழுத்துக்கள். எனவே வருக்க எழுத்துக்களுள் பலவும் ஷ, ஸ முதலிய எழுத்துக்களும் பிறவும் விரவி வரலாகா. இயல்பாகவே இன்னோசையுடையனவாய் இன்பம் பயப்பனவும் சான்றோர் செய்யுட்களிற் பயின்று வந்த

முறையில் இன்பம் பயப்பனவுமாயுள்ள சொற்கள் ஆளப்படுதல் வேண்டும்.

இவ்வகைச் சொற்கள் அமைந்த கவியை 'உறுப்புச்செய்யுள்' என்று பெயரிட்டது எக்காரணம்பற்றி என்ற கேள்வி எழுதல் இயல்பே. வடமொழியில் தண்டியாசிரியர் 'காவ்யங்களின் சரீரமும் அலங்காரங்களும் தொல்லாசிரியர்களால் காட்டப்பட்டுள்ளன; கருதிய பொருளைப் புலப்படுக்கும் சொல்லின் தொகுதியே சரீரமாவது' (முதற்பரிச்சேதம். 10) என்று கூறினர். இவர் கூறியதனையே வீரசோழிய நூலாரும், (143)

**உரையுட லாக உயிர்பொரு ளாக உரைத்தவண்ணம்**
**நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்களாம்**
**தரைமலி மானிடர் தம் அலங் காரங்கள் தண்டிசொன்ன**
**கரைமலி நூலின் படியே உரைப்பன் கனங்குழையே**

எனச் சிறிது விளக்கினர்.

காவ்ய சரீரமாகிய சொற்றொகுதிக்குச் சொற்கள் உறுப்பாதல் தெளிவு. இச்சொற்களுள் ஒருசில நல்லியல்புகளுடையனவற்றால் இயன்று வருஞ் செய்யுளை 'உறுப்புச் செய்யுள்' என வெண்பாப் பாட்டியலாசிரியர் கொண்டனராம் எனத் தோன்றுகிறது. இப்பெயர் இப்போது அகப்படும் முந்துநூல்களிற் காணப்படவில்லை. வீரசோழியம் எவ்வகைச் சொற்கள் குற்றமற்ற உறுப்பாம் என்பதையும் எவ்வகைச்சொற்கள் பழிக்கப்பட்ட உறுப்பாம் என்பதையும் இரண்டு காரிகைகளால் உணர்த்துகின்றது. 144-ம் காரிகையில் குற்றமற்ற உறுப்பு விளக்கப்படுகிறது.

குற்றமற்ற உறுப்பு

**சார்ந்த வழக்கொடு தப்பா**
**வடவெழுத் தைத்தவிர்த்துத்**
**தேர்ந்துணர் வார்க்கும் இனிமையைத்**
**தந்துசெய் யுட்களினும்**

**நேர்ந்து சொலப்பட் டுயர்ந்தவ**
**ரால்நிர லேபொருளை**
**ஓர்ந்து கொளப்படுஞ் சொற்குற்ற**
**மற்ற உறுப்பென்பரே**

என்பது அக்காரிகை. 'தப்பா' என்பதனைத் 'தமிழினோடுங் கூடி' என வீரசோழிய உரைகாரர் விளக்குவர். இதன் பொருள் 'தமிழ் மரபினோடுங்கூடி' என்றுதல் வேண்டும். எனவே உறுப்புச்செய்யுள் பற்றி வெண்பாப் பாட்டியலிற் காணுங் கருத்துக்கள் அனைத்தும் இங்கே கூறப்பட்டுள்ளமை யுணரலாம். புதியதொரு கருத்தும் கூறப்பட்டுள்ளது. அது சொற்கள் திரிதற்பொருள்கோள் இன்றியே நிரலே பொருள் விளங்குவனவா யிருத்தல் வேண்டும் என்பதாகும்.

**பழிக்கப்பட்ட உறுப்பு**

இனி, பழிக்கப்பட்ட உறுப்பு யாதென நோக்குவோம். இப் பழிக்கப்பட்ட உறுப்பு 145-ம் காரிகையில் உணர்த்தப்படுகின்றது.

**தெற்றி வழக்கொடு தேர்ந்துணர்**
**வார்க்கின்பம் செய்யலின்றிப்**
**பற்றி வடநூல் எழுத்துக்க ளோடு**
**பயின் றுரையின்**
**மற்றிவை இல்லென்று வாங்கவும்**
**பட்டுப் பொருள்மருண்டிப்**
**பெற்றியுடைச் சொல் பழித்த**
**உறுப்பென்று பேசுவரே**

என்பது அக்காரிகை. இங்கே குற்றமற்ற உறுப்புக்களின் மறுதலை யியல்புகள் யாவும் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

இம் மறுதலை யியல்புகளாவன :—

1 வழக்கொடு மாறுபடுதல்

2 இன்பமின்மை

3 வடவெழுத்துப் பயின்று வரல்

4 சான்றோர் செய்யுட்களிற் பயின்று வாராமை

5 பொருள் மருண்டிருத்தல்

இவ்வியல்புகளை உட்கொண்டு வெண்பாப்பாட்டியலின் ஆசிரியரும்,

**துணிதற் கரிது பொருளென்றும் சோர்வு**
**பணிவுற்ற சொன்மேற் படுத்தும் –**
**[அணிப்பொருட்டால்**
**மற்றுமுண் டென்றும் உரைப்போர்**
**[வழூச்சொல்லின்**
**இற்றன்றே பாவின் இழுக்கு** (பொது. 6)

என்று விதித்தனர். இலக்கணவிளக்கப் பாட்டியலுடையாரும்,

**தெளிந்த வழக்கொடு சிறந்த பொருள்படூஉம்**
**இன்பம் ஒரீஇ வடவெழுத்தே மிக்கு**
**முதிர்சொற் புணர்க்கா தெதிர்சொற் புணர்த்து**
**மாலுறச் செய்தல் வழூவா மென்பர்**
(பாட்டியல்-126)

எனச் சூத்திரஞ் செய்தனர்.

இனி, நவநீதப்பாட்டியலில் மேற்குறித்த வீரசோழியக் காரிகை (145) பெரும்பாலும் வேறுபாடின்றி வந்துள்ளமை நோக்கத்தக்கது. இப்பாட்டியற்பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டிய பாடங்கள் பல வீரசோழியத்தில் வந்துள்ளமையும் கருதத்தக்கது. ஆகவே இப்பாட்டியற் செய்யுள் அதன் புத்துரை கூறுமாறு உறுப்புச் செய்யுளை உணர்த்துவதன்றும். பழித்த உறுப்பின் இயல்புகளையே எடுத்துச் சொல்வதாம்.

7

பழையவுரையும் இக்கருத்தினையே ஆதரிக்கின்றது. எனவே இச்செய்யுளின் உண்மைவடிவம்,

**தெற்ற வழக்கொடு தேர்ந்துணர்**
**விற்கின்பஞ் செய்தலின்றிப்**
**பற்றி வடநூல் எழுத்துக்க**
**ளைப்பழை யோருரையின்**
**மற்றிவை இல்லையென் றேத**
**லுடன்படல் மாலியலாற்**
**பெற்றி யுடைச்சொற் பழித்த**
**வுறுப்பென்று பேசுவரே** (82)

என்பதாதல் வேண்டும்.

வீரசோழிய உரைகாரர் கூறுவன ஒருசில ஈண்டுக் கருதற்பாலன. 'இவ்வுறுப்புக்களால் நிரம்பின உடல் (சொல்லின் தொகுதி அல்லது செய்யுள்) குற்றப்பட்டதா யிற்று என்பது. ஆயின் மணிப் பிரவாளத்துக்கும் விரவிய லுக்கும் வடவெழுத்துளவெனில், அவையிற்றுக்கன்று இவ்விலக்கணம், கீழ்க்கணக்கு முதலாகிய செய்யுட்களுக்கே என்று அறிக......அவைகள் (பழித்த சொற்கள்) அன்றுள் ளா ளொரு குரிசிலைப் புகழ்ந்து செய்யுங் கவியுள் மறந்தேயும் வரப்பெறுவெனக் கொள்க.'

இக்கூற்றால் கவிஞர் காவியம் இயற்றுதலில் பழித்த உறுப்பு வாராமற்காத்தல் ஒரு பெரு நியதி என்பது காண லாகும். 'புகழ்ந்து செய்யுங்கவி' என்றதனை நவநீதப்பாட் டியற் பழையவுரை (82) 'பரசுசெய்யுள்' எனக் குறித்ததாம் எனக் கருத இடமுண்டு. பிறி தோர் இயல்பை அது கருதிற்றெனக் கொள் ளுதலும் அமையும். உத்படர் என்னும் ஆசிரியர் தமது அலங்கார ஸங்கிரகத்தில் உப நாகரிகம், கிராமியம், பருஷம்

**பரசு செய்யுள்**

என்ற மூன்றுவகை நெறிகளை உணர்த்துகின்றார். இவற்றுள் 'பருஷம்' என்பது பரசுசெய்யுள் எனப்பட்டது எனக் கருதுதலும் தகும். 'பருஷம்' என்பது கடுஞ்சொல் என்று பொருள்படும். இச்சொற்களே பழித்த உறுப்பிற்குரியன.

ஈண்டு எழுதியவற்றால் உறுப்புச் செய்யுள் இன்னது என்றதனை ஒருவாறு உணரலாம்.

# 7. திராவிடமொழி ஆராய்ச்சி

காலடுவெல் ஆசிரியரது ஒப்பு நோக்கு-இலக்கணம்

திராவிட மொழிகளின் தத்துவங்களை ஆராய்ந்துணர்த்த வேண்டுவது தமிழாராய்ச்சித் துறையில் உழைத்து வருவோர்க்குரிய பெருங் கடமைகளுள் ஒன்றும். கால்டுவெல் ஆசிரியர் இவ்வாராய்ச்சியை மேற்கொண்டு 'திராவிட மொழிகளின் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்களின் ஒப்பு நோக்கிலக்கணம்'[1] என்ற சிறந்தமொழி நூலை 1856-ல் முதன் முதலாக வெளியிட்டனர். இப்பதிப்பு 528 பக்கங்கள் கொண்டது. பின்னர் 20 ஆண்டுகள் கழித்து, நூலைப் பலபடியாக ஆராய்ந்து புதுக்கி நூதன விஷயங்கள் பலவற்றைச் சேர்த்து 1875-ல் இரண்டாமுறை பிரசுரித்தனர். இப்பதிப்பிலே 80 பக்கங்கள் அதிகமாகக் கூட்டப்பட்டன. சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, கால்டுவெல் ஆசிரியர் மரணமெய்தி 22 ஆண்டுகளுக்குப்பின், 1913-ல் ரெவரெண்ட். ஜே. எல். வயட் (**Wyatt**) என்பவராலும் தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளையவர்களாலும் புதுக்கிய பதிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. எத்தனை திருத்தங்களைக் கொண்டிருந்தபோதிலும் இம்மூன்றும் பதிப்பு கால்டுவெல் ஆசிரியரது கருத்துக்களை அவரெழுதியபடியே நாம் அறிந்துகொள்வதற்கு இடமில்லாமற் செய்துவிட்டது. இது பெரிதும் வருந்தத்தக்கது. இம்மூன்றும் பதிப்பும் வெளிவந்து இப்போது 40 ஆண்டுகள் ஆகிவிட்டன.

---

1. A comparative Grammar of the Dravidian or South Indian family of languages.

பின்னுள்ள நூல் வளர்ச்சி

கால்டுவெல் ஆசிரியர் 1891-அக்டோபர் மாதத்தில் மரணம் அடைந்தனர். இதற்குப் பின்னர், க்ரையர்ஸன் என்ற அறிஞர் 'இந்தியாவிலுள்ள மொழிப்பரப்பு நிர்ணயம்'[1] என்ற அரியநூலை மிக்க சிரமமெடுத்து ஆராய்ந்து வெளியிட்டனர். இலக்கிய வழக்கற்ற காண்ட், கூய் முதலிய திராவிட்மொழிகளின் இலக்கணங்களும் சிலரால் எழுதப்பட்டன. ஸ்ரீ ராஜராஜவர்மா அவர்கள் தங்கள் கேரள பாணினீயத்தைத் திறம்பட ஆராய்ந்தெழுதியுள்ளார்கள். மகாமகோபாத்தியாய நரஸிம்மாசார்ரியாரவர்கள் கன்னட மொழிக்குரிய புராதன நூல்கள் பலவற்றையும் சரித்திர ஆராய்ச்சித் திறம் பொருந்த வெளியிட்டுள்ளார்கள். தெலுங்கு மொழியிலும் பல அரிய பழைய நூல்களும் இலக்கணங்களும் வெளிவந்துள்ளன. ஸ்ரீ ஜி. ராமமூர்த்தி பந்துலு அவர்கள் பெயரை இங்கே குறிப்பிடல் தகும். திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் அதிபுராதனமாகிய தமிழ்மொழியிலும் சங்க இலக்கியங்களும், இலக்கணங்களும் மகாமகோபாத்தியாய டாக்டர் ஸ்ரீ சாமிநாதையரவர்களாலும் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் முதலியோராலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சென்னை ஸர்வகலாசங்கத்தாரும், தமிழ்மொழி புணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பெருந் துணையாயுள்ள தமிழ்ப் பேரகராதியை 23 வருஷங்களாக (1913-1936) இயற்றுவித்து வெளியிட்டுள்ளார்கள். அரசாங்கத்தினரும் காலவரையறையுள்ள சிலாசாசனங்கள் முதலியவற்றைப் பல தொகுதிகளாக்ப் பதிப்பித்து வருகின்றனர். இவையெல்லாம் திராவிட மொழியாராய்ச்சிக்குரிய பொருள்களைத் திரட்டிவைத்துள்ள களஞ்சியங்களாக விளங்குகின்றன. மொழியாராய்ச்சி முறைகளும் ஐரோப்பிய அறிஞர்

1. Linguistic Survey of India.

களுடைய விசாரணையால் பல படியாகத் திருத்தமடைந்து கொண்டே வந்திருக்கின்றன.

இத்தனை யளவாக ஆராய்ச்சிப் பொருள்கள் திரண்ட போதிலும், ஆராய்ச்சிமுறையும் திருத்தமடைந்த போதிலும், திராவிடமொழி யாராய்ச்சியை மேற்கொண்டவர்கள் நம்மவருள் ஒரு சிலரே யாவர். கால்டுவெல் ஆசிரியர் உயிர்வாழ்ந்திருந்த காலத்திலேயே 1884-ல் சேஷகிரி சாஸ்திரியார் 'ஆரிய திராவிட மொழியாராய்ச்சிக் குறிப்புகள்'[1] என்ற நூலை இயற்றினர். 'திராவிடமொழிச் சர்ச்சைகள்'[2] என்று பெயர்கொண்ட நான்கு சிறு நூல்களை ஸர்வகலாசாலையார் இயற்றுவித்தனர். ஸ்ரீ ஸி. நாராயணராவ் அவர்கள் 'திராவிட மொழியாராய்ச்சிக்கு ஒரு நூன்முகம்'[3] என்ற ஒரு நூலை 1929-ல் வெளியிட்டனர். 'திராவிட் மொழியாராய்ச்சியிற் சில சர்ச்சைகள்'[4] என்ற நூலை ஸ்ரீ கே. ராமகிருஷ்ணய்யா அவர்கள் ஸர்வகலாசாலைப் பிரசுரமாக 1935-ல் இயற்றினர். காலஞ்சென்ற ஆர். சுவாமிநாதையரவர்கள் எழுதிய 'திராவிடமொழிநூல்'[5] என்னும் விரிந்த நூல் இப்பொழுது அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. இப்பொதுநூல்களைத் தவிர, தனியே மலையாளமொழி பற்றியும் தமிழ் மொழிபற்றியும் ஸ்ரீ எல். வி. ராமசாமி ஐயரவர்கள் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ கே. அமிருதராவ், ஸ்ரீ ஏ. எப். தியாகராஜு முதலிய சிலரும் இரண்டொரு கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறார்கள். சுநீதி

பின்னுள்ள மொழியாராய்ச்சியாளர்

1. Notes on the Aryan and the Dravidian Philology.
2. Dravidic Studies.
3. An introduction to Dravidian Philology.
4. Studies in Dravidian Philology.
5. Dravidian Philology.

குமார சாட்டர்ஜீ, கே. பி. பாதக், பாக்ஷி, டாக்டர் என். டட், ஆர். வி. ஜாகிர்தார், ஏ. என். உபாத்தியாய முதலிய வடநாட்டினர் சிலரும் திராவிட மொழிபற்றிச் சிற்சில சிறந்த கட்டுரைகள் இயற்றியுள்ளார்கள். ஐரோப்பியர்கள்[1] சிலரும் திராவிட மொழிபற்றி வியாசங்கள் எழுதியுள்ளார்கள்.

நமது நாட்டினராக மேலே குறிக்கப்பட்டவர்களைத் தவிர, வேறு சிலரும் திராவிட மொழிபற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்களென்பது உண்மை. உதாரணமாக, ரெவரெண்டு ஞானப்பிரகாசரைச் சொல்லலாம். இவர் போன்றோரது ஆராய்ச்சிகள் இங்கே கூறுதற்குரியன வல்ல. அவற்றைப் பற்றிப் பின்னர்க் கூறுவேன்.

முதன்முதல் திராவிடமொழி யாராய்ச்சி தொடங்கி நான்கு தலைமுறைகள் (98 ஆண்டுகள்) ஆகிவிட்டன.

**மொழி யாராய்ச்சியின் தற்கால நிலைமை**

திராவிட மொழிபற்றிக் கட்டுரைகள் பலவும் பல அறிஞர்களால் இதுவரை வெளிவந்துள்ளன. ஆராய்ச்சி செய்தற்குரிய சௌகரியங்களும் ஒருவாறு வாய்த்து விட்டன என்றே சொல்லலாம். எனவே, திராவிட மொழியாராய்ச்சி இப்போதிருக்கும் நிலைமை யாதெனத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் மிக மிக இன்றியமையாதெனக் கருதினேன். இதனை உணர்ந்தாலன்றி மொழியாராய்ச்சி முன்னேற்றம் அடைவதற்கு வழிகிடையா தென்பது நான் விளக்க வேண்டுவதொரு பொருளன்று.

---

1. Kittel, Sten Konow, Przyluski, Sylvian Levi, Jules Bloch, Meyr, Otto Schrader, Mark Collins, Clement Schoener, Tuttle Pizzagalli, William Brown, Hevess, Burrow and others.

ஆனால், திராவிட மொழியாராய்ச்சியின் தற்கால நிலையைத் தெரிவதென்றால், மொழியாராய்ச்சியின் பரிபூர்ண ஆகிருதியில் அமைந்திருக்கவேண்டும் அங்க உபாங்கமெல்லாம் விவரமாய்த் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அதன் பரப்பும் எல்லையும் நன்குணரப்படுதல் வேண்டும். அதன் உட்பிரிவுகளும் பாகுபடுத்துத் தெளியப் படுதல்வேண்டும். அதற்கும் பிற பிரகிருதி சாஸ்திரங் களுக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுதல் வேண்டும். இங்ஙனம் வரையறை செய்தல் திராவிட மொழியாராய்ச்சி இக்காலத்தே எத்தனை தூரம் சென்றிருக்கிறது என்பதனை அறிதற்கு மாத்திரமன்று உபகாரப்படுவது. ஆராய்ச்சி செய்யவேண்டும் முறை அதனால் தெளிவடையும்; எந்த எந்தச் சாஸ்திரங்களின் உதவி இவ்வாராய்ச்சிக்குப் பயன் படும் என்பது விளங்கும்; எந்த எல்லையைக் கடந்தால் மொழியாராய்ச்சி தன் நிலைமாறிப் பரிஹாசஹேதுவாகும் என்பது புலப்படும்; உட்பிரிவுகளில் ஒவ்வொன்றும் எவ் வகையான தன்மையும் பயனும் உடையனவென்பது நன்கு உணரலாகும். இவ்வகையாய்ப் பயன்படும் ஸ்தூல உணர் வானது, ஒருவனது கை கால் முதலிய உறுப்புக்களைத் தனித்தனியே தெரிவதற்குமுன் அவனுடைய ஆகிருதி முழுவதையும் ஒரு பார்வையில் தெரிந்துகொள்ளுவது போன்றதாகும்; ஒரு நாட்டின் உட்பகுதிகளையெல்லாம் நுணுகியாராயுமுன், அதன் விஸ்தீர்ணம், எல்லை, உட்பிரிவு முதலியவற்றைப் பொதுபடத் தெரிந்துகொள்வதனோடு ஒக்கும்.

மொழி யாராய்ச்சி யின் பரப்பும் எல்லையும்

'மக்களது ஆராய்ச்சியிலே ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கும் அறிவுப் பொருள்களை இவ்வாறு வரையறை செய்தல் ஏலுமா?' என்ற கேள்வி எழலாம். இக்கேள்வியைத் தனிப்பட விசாரணை செய்து ஒரு முடிவுக்கு வருதல்

நான் மேற்கொண்டுள்ள நோக்கத்திற்குப் புறம்பானது.

**மொழி நூலும் பிற சாஸ்திரங்களும்**

அனுபவ முறையாய் நோக்கும்போது இங்ஙனம் வரையறை செய்தல் அத்தியாவசியகமென்றே தோன்றுகிறது. இவ்வாறு கூறுவதனால், ஏனைய பிரகிருதி சாஸ்திரங்களின் உதவியை மொழி நூலாராய்ச்சிக்குப் பெறுதல் கூடாதென்பது எனது கருத்தன்று. எந்த எந்தச் சாஸ்திரங்களெல்லாம் பயன்படுமோ அவற்றையெல்லாம் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் எனது முடிந்த கருத்து. ஏனைய பிரகிருதி சாஸ்திரங்கள் எனக் கூறினேன். 'மொழியாராய்ச்சி ஒரு சாஸ்திரமாகுமா?' என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம். நமது அதிர்ஷ்ட வசத்தால், இக்கேள்வியை ஆராயவேண்டும் பொறுப்பு இப்போது நீங்கிவிட்டது. ஐரோப்பியப் பேரறிஞர்கள் பலர் மொழியாராய்ச்சி ஒரு சாஸ்திரந்தான் என்றும் அதனைப் 'பாஷா சாஸ்திரம்'[1] எனல் தக்கதேயென்றும் முடித்துள்ளார்கள்.

இவ்வளவில் இவ் இடைப்பிறவரல்களை நிறுத்திக்கொண்டு மொழியாராய்ச்சியின் பரப்பு முதலியவற்றை

**மொழியின் பொருள்**

நோக்கத் தொடங்குவோம். மொழியாராய்ச்சி என்ற தொடரில் 'மொழி'[2] என்பதனைப் பாஷை என்ற பொருளில் உபயோகப்படுத்தியிருக்கிறேன். இப்பொருள் என்னாற் புதுவதாகக் கொள்ளப்பட்டதன்று. 'மொழிபெயர் தேஎம்' (குறுந். 11) எனச் சங்க நூல்களிற் பல இடங்களிலும் வருதல் காணலாம். இவ் இடங்களிலெல்லாம் பாஷை யென்பதுவே பொருளாகும். [3] இப்பொருளிலேயே எப்பொழுதும் இச்சொல்லை

1. Science of language.
2. Speech, Language.
3. தொல்காப்பியர், 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று' (தொல். சொல். 394) என்ற சூத்திரத்தில் சொல் என்ற பொருளிலும் இதனை வழங்கியுள்ளார்.

வழங்குதல் நலமாகும். பதம் (word) என்றதற்குச் 'சொல்' என்பதனை வரையறை செய்து வழங்குதல் தக்கதாகும்.

**வகுத்துரை யிலக்கணம் : சொல் லுற்பத்தி : ஒலியாராய்ச்சி : சொல்லுறுப் பாராய்ச்சி : சொற் பொரு ளாராய்ச்சி**

மொழியாராய்ச்சிகள் பலவற்றுள்ளும் எளிதிலே செய்யக்கூடியது போன்றிருப்பது நம் காலத்திலே வழங்குகிற மொழிக்கு ஓர் இலக்கணம் வகுப்பதாம். இவ் இலக்கணத்திற்கு 'வகுத்துரை யிலக்கணம்'[1] என்று பெயரிடலாம். இதை வகுப்பதில் எத்தனையோ இடையூறுகள் உள்ளன. பேச்சு-வழக்கிற்கும் எழுத்து-வழக்கிற்கும் உள்ள வேறுபாடு, பிறமொழிக் கலப்பு, வழக்காறற்ற சொற்களின்மீது மோகம் முதலியன இவ் இடையூறுகள். மொழியாராய்ச்சியின் வேறொரு பகுதி கற்றோர்க்கும் ஏனையோர்க்கும் ஒருங்கே இன்பம் பயப்பதாகி அவர்களால் விரும்பிக்கொள்ளப்படுவதா யுள்ளது. அப் பகுதி யாதெனின் 'சொல்லுற்பத்தி'[2] எனப்படுவதாகும். வெகு காலத்திற்கு முன் நான் நிகழ்த்திய ஒரு சிற்றாராய்ச்சி யின் மூலம் இப்பகுதியை விளக்குகின்றேன். படிமை யென்ற சொல் 'தவவொழுக்கம்' என்ற பொருளில் வந்துள் ளது. இதன் உற்பத்தியைக் குறித்து நானும் காலஞ் சென்ற ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்களும் பிறரும் விவாதித்தோம். இச்சொல் 'ப்ரதிமா' என்ற வட சொல்லினின்று வந்ததென்றும், இங்ஙனம் திரிந்துவந்த 'படிமை' யென்னும் பிராகிருதச் சொல்லினைச் சைனர்கள் தங்களுடைய தவவொழுக்கங்களுள் குறிப்பிட்டவொரு பகுதிக்கு வழங்கி வந்தனரென்றும் ஆதார பூர்வம் காட்டினேன். ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் கற்றல் என்று பொருள்படும் 'படி' என்ற முதனிலையடியாக இச்சொல் பிறந்ததென்றும், 'மை' என்பது தொழிற் பெயர் விகுதி யென்றும், மலையாளத்தில்

1. Descriptive or Systematic Grammar.
2. Etymology.

'தம்' என்றதொரு விகுதியைக் கூட்டிப் படித்தம் என இக் காலத்தும் வழங்குகின்றார்களென்றும், தமிழிலும் படித்தல், படிப்பு என்ற வழக்குள்ளனவென்றும், கற்றல் என்ற பொருளினின்று தவவொழுக்கம் என்ற பொருள் விரிந்து வருதல் எளிதென்றும் கூறினார்கள். இக்கூற்றின் ஒரு சாரிலே 'படி' என்பது தமிழ்ச் சொல் என்றும் துணிந்துரைத்தார்கள். கற்றல் என்ற பொருளில் படியென்ற சொல் பண்டைத்தமிழ் நூல்களில் ஓரிடத்தும் காணவியலாது. 'பட்' என்ற வடமொழித் தாதுவினடியாகப் பிறந்ததே இச்சொல். ஆனால் அவர்கள் கூறியதை மறுத்துக் கூறுதல் இப்பொழுது எனது நோக்கமன்று. மேலே சுட்டிய இருவகை உற்பத்திகளின் வன்மை மென்மைகளையோ, அல்லது பொய்ம்மை மெய்ம்மைகளையோ ஆராய்தல் இப்பொழுது வேண்டுவதன்று. சொற்களுக்கு உற்பத்தி கூறும்போது என்ன என்ன விஷயப் பாகுபாடுகள் புலப்படுகின்றன என்பதொன்றே இங்கு அறியத்தக்கது. நான் கூறியதை யெடுத்துக்கொள்ளுங்கள். ப்ரதிமா என்பது படிமை யெனப் பிராகிருதத்திலும் தமிழிலும் திரிந்து வந்ததென்றேன். ஒரு மொழியிலே நின்றும் பிறிதொரு மொழியில் ஒருசொல் வழங்கும்போது, எவ்வகையான ஒலி வேறுபாடுகளை அடைகின்றது? எவ்வெக் காரணங்கள் பற்றி இவ்வேறுபாடுகள் நிகழ்கின்றன? தமிழ் மொழிக்கு எவ்வகை ஒலிக்கணம் உரியது? இக்கேள்விகளையும் இவை போன்ற பிற கேள்விகளையும் முற்ற ஆராய்ந்த பின்னரே ஒருவன் உண்மையான முடிவுக்கு வருதல் கூடும். இதனை 'ஒலியாராய்ச்சி'[1] என்று கூறத்தகும். இனி ஸ்ரீ ஐயரவர்கள் கூறியதை யெடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் படிமை யென்றதனைப் பகுதி, விகுதி முதலியனவாகப் பகுத்துச் சொல்லாக்கங் காட்டினார்கள். இதற்குச் 'சொல்லுறுப்

1. Phonology.

பாராய்ச்சி[1] யென்று பெயரிடலாம். இதனையும் கடைபோக ஆராய்ந்தறிதல் வேண்டும். இனி நாங்களிருவரும் படிமை என்றதன் பொருள்பற்றிக் கூறியனவற்றை யெடுத்துக்கொள்ளுங்கள். இப்பொருள் பற்றி யெழுந்த வியவகாரத்தைச் 'சொற் பொருளாராய்ச்சி'[2] யென்று கூறலாம்.

ஒரு சொல்லை யெடுத்துக்கொண்டு அதன் ஆராய்ச்சியில் மூன்று விஷயப் பகுப்புண்மை கண்டோம். இக்காலத்து இப்படிமை யென்ற சொல் வழக்கிற் காணப்படவில்லை. இவ்வழக்கு வீழ்ச்சி வேறொரு வகையான ஆராய்ச்சிக்கு இடந்தருகின்றது. தமிழில் இப்போது கிடைக்கும் பண்டை நூல்கள் தோன்றிய சங்க காலத்தி லிருந்து இன்றுவரையுள்ள காலத் தொகுதியைப் பல பகுதியாகப் பகுத்து ஒவ்வொரு பகுதியிலும் வழக்கிலிருந்த சொற்களைக் குறித்தும் வழக்கு வீழ்ந்த சொற்களைக் குறித்தும் ஆராய்தலே மேலே சுட்டியது.

சொற்களைப் பற்றிய விஷயப் பகுப்பு இவ்வாறிருக்க, சொற்கள் தொடர்ந்துவரும் வாக்கியத்தின் அமைப்பினை ஆராய்ச்சி செய்வதும் முக்கியமானதாகும்.

**வாக்கிய அமைதி பற்றிய ஆராய்ச்சி**

'I have a book' என்ற ஆங்கில வாக்கியத்தை யெடுத்துக்கொள்ளுங்கள். 'நான் உடையேன் (உடைத்தாயிருக்கிறேன்) ஒரு புஸ்தகம்' என்பது சொற்களின் பொருள். இக்காலத்தில் இவ்வாறு கூறினால், அது பிழையாகக் கருதப்படுமா வென்பது சந்தேகம் தான். ஆனால் தமிழ் வாக்கிய அமைதிப்படி 'என்னிடம் ஒரு புஸ்தகம் இருக்கிறது' என்று கூறுவதுதான் தக்கது. இது போன்ற விசாரணையை

---

1. Morphology.
2. Semasiology.

'வாக்கிய அமைதியாராய்ச்சி'[1] யென்று கூறத்தகும். இதனைத் தொல்காப்பியர் தமது கிளவியாக்கத்தில் கூறியிருக்கிறார்.

இக்காலத்திற் பிழையாகக் கருதப்படுமா என்பது சந்தேகம் தான் என்றேன். இவ்வாறு கூறியது, காலத்திற்குக் காலம் வாக்கிய அமைதியும் மாறுபட்டுச் செல்வது இயற்கையாகு மென்பது கருதி. இதற்குரிய காரணங்கள் பல. இக்காரணங்களையும் இவற்றால் விளைந்த பயன்களையும் மாறுபாடுகளின் இயற்கையையும் ஆராய்வது மிக அவசியமாம்.

**மொழிச் சரிதம்**

இனி, சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் முதலிய பலதிறத் தோற்றத்துடன் இக்காலத்து விளங்கும் ஒரு மொழியானது ஒவ்வொரு காலத்திலும் தனிச் சிறப்பியல்புகளுடன் விளைந்து நின்று கிரமமாக வளர்ந்து செல்லும். இம்மொழி-வாழ்க்கையிற் பல பருவங்களும் காணப்படலாம். ஒவ்வொரு பருவத்திற்கும் தனித்துரிய விசேஷ லக்ஷணங்களும் இருக்கும். இங்ஙனமாக ஒரு மொழியினது வளர்ச்சியினையும் பருவ லக்ஷணங்களையும் காலமுறை பற்றிக் கிரமமாக ஆராய்வதை 'மொழிச் சரிதம்'[2] என்று தமிழிற் கூறலாம்.

**பிராந்திய மொழி யாராய்ச்சி: மொழி விவரண நூல்**

இனி, ஒரு மொழியானது பல பிரதேசங்களிற் பரவியிருக்கும். ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறிது சிறிது இயல்பிற்றிரிந்து அது வழங்கும். இத்திரிபு சிறிதாக நின்று சிதைவு மொழிகள் பிறத்தற்கு இடந்தருவதாயும் இருக்கும். சிதைவு மொழிகளின் வரலாற்றையும் அவற்றின் லக்ஷணங்களையும் ஆராய்தல் ஒரு தனிப்பட்ட ஆராய்ச்சி. இதற்குப் 'பிராந்திய மொழி

1. Syntax or Structure of Sentences.
2. History of the language.

யாராய்ச்சி'[1] அல்லது பிராதேசிக மொழியாராய்ச்சி என்று பெயரிடலாம். இம்மொழிகள் வழங்கும் பிரதேசங்களை எல்லை காட்டி வரையறுத்தல் மிக அவசியமாகும். இங்ஙனம் எல்லை காட்டும் படங்களைத் தந்து விவரித்தலைத் தமிழில் 'பிராந்தியமொழி விவரண நூல்'[2] என்று கூறுதல் பொருத்தமாகலாம்.

**மொழியின் வரலாற்று நெறி யிலக்கணம்**

இதுகாறும் ஒரு மொழியை யெடுத்துக்கொண்டு அதன் ஒலிபற்றியும் சொற்பற்றியும் சொற்பொருள்பற்றியும் வாக்கிய அமைதிபற்றியும் அதன் வரலாறுபற்றியும் அதன் பிராந்திய மொழிகள் பற்றியும் சரித்திரக் கண்ணோடு நோக்கிச் செய்யும் ஆராய்ச்சிகள் கூறப்பட்டன. இவ்வகையான ஆராய்ச்சி-நூலுக்குப் பொதுப்பெயராக மொழியின் 'வரலாற்றுநெறி யிலக்கணம்'[3] என்பதனைக் கொள்ளலாம்.

**கிளைமொழி ஒப்புநோக்கு-இலக்கணம்**

இனி மேற்குறித்த மொழித்திரிபானது நாளடைவில் விருத்தியாகி ஒரு பிரதேசத்திலுள்ளார் மற்றொரு பிரதேசத்திலுள்ளார் கூறுவதை உணர முடியாமற் செய்து விடுதலும் உண்டு. இவ்வாறான பிராந்திய மொழிகளைக் 'கிளைமொழி'[4] அல்லது இனமொழியென்று கூறலாம். இக்கிளைமொழிகளுள் ஒவ்வொன்றையும் பிறிதொன்றனோடு ஒப்பு நோக்கும் ஆராய்ச்சி மிக்க சிரமமானதாகும். அவ்வகை ஆராய்ச்சியினால் ஒவ்வொரு கிளைமொழியும் நன்றாக உணரப் படுதற்கு ஏதுவுண்டாம். தமிழை யெடுத்துக்கொண்டோமானால், அதனோடு மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, பிற சில்லறை மொழிகள் : இவைகளுள் ஒவ்வொன்

1. Study of the dialects.
2. Dialect Geography.
3. Historical Grammar.
4. Cognate languages.

றையும் இணைத்து நிறுத்தி ஒப்புநோக்கி ஆராய்ச்சிசெய்து ஒவ்வொன்றின் பூர்வ நிலையையும் அறுதியிடலாம். இவ்வகை ஆராய்ச்சியினால் 'ஒப்புநோக்கிலக்கணம்'[1] ஏற்படுகின்றது.

**மொழித் தத்துவ இலக்கணம்**

இனி மொழிகளனைத்திலும் காணப்படுகின்ற பொது இலக்கணங்களுக்கு அடிப்படையாய் நிற்கும் மூலநியமங்களைக் குறித்தும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். இதனைப் பொது இலக்கணம் அல்லது 'மொழித் தத்துவ இலக்கணம்'[2] என்று கூறுதல் அமையும்.

**ஒப்புநோக்கு மொழியாராய்ச்சி**

இனி, கிளைமொழிகளுக்கு மூலமான மொழியைக் குறித்துள்ள ஆராய்ச்சியை நோக்குவோம். இம்மூல மொழியின் இயல்பும் கிளைமொழிகளில் ஒவ்வொன்றின் இயல்பும் எவ்வகையில் ஒத்தும், எவ்வகையில் வேறுபட்டும் உள்ளன வென்பதை ஆராய்தல்வேண்டும். இந்த மூல மொழிக்கும் இதனோடொத்துப் பல கிளைமொழிகளுக்குத் தாயாய் நின்ற பல மூலமொழிகளுக்குமுள்ள தொடர்பு யாதென விளக்கப்படுதல் வேண்டும். மூலமொழிகள் அனைத்தும் ஊகிக்கப்படுவனவே யாதலால், அவற்றுள் ஒவ்வொன்றையும் மீண்டும் மீண்டும் சிருஷ்டித்து நோக்குதல் வேண்டும். 'ஒவ்வொரு மூலமொழியும் ஆதியில் எங்கே வழங்கியது? எவ்வழியாகப் பரவியது? எத்தனை மூலமொழிகள் ஆதியில் இருந்தன?' என்பன போன்ற கேள்விகள் பற்றி ஆராய்ச்சிகள் நிகழ்தல் வேண்டும். மேற்குறித்த பல முறைகளிலும் நிகழும் ஆராய்ச்சித் துறைக்கு ஒப்புநோக்கு மொழியாராய்ச்சி[3] என்று பெயரிடலாம்.

---

1. Comparative Grammar.
2. General or philosophical Grammar.
3. Comparative Philology.

இனி, மொழிகளுள் ஒன்றையும் தனிப்பட எடுத்து ஆராயாது, பொதுப்பட நிகழ்த்தும் ஆராய்ச்சிகளும் உண்டு. இவ்வாராய்ச்சிகளால் உணரப்பட வேண்டும் விஷயங்களும் பலவாம். 'மொழி எவ்வாறு பிறந்தது? மக்கள் பேச்சுக் குரிய ஒலிகள் யாவை? இவ் வொலிகள் எவ் வாறு உண்டாகின்றன? சொற்களுக்கும் பொருள்களுக்கும் உண்டான சம்பந்தம்யாது? சொற்களின் பொருள்கள் பொது நெறியிலே எவ்வாறு மாறுபடுகின்றன? மக்களின் கருத்துலகிற்கும் மொழிக்கும் உண்டான தொடர்பு யாது? பேசுவதற்கு முன் நிகழும் மானஸிக நிகழ்ச்சிகள் யாவை? மொழியாராய்ச்சி நூலுக்கும் பிற பிரகிருதி சாஸ்திரங்களுக்கும் உள்ள தொடர்பு எத் தகையது? மொழியின் வரிவடிவின் வரலாறு யாது?' என்பன போன்ற வினக்கள் அவ்விஷயங்களுக்குரியன. இவற்றிற்கு விடையிறுக்கும் ஆராய்ச்சியை 'மொழிப் பொது வாராய்ச்சி'[1] என்று கூறுதல் பொருந்துவதாகலாம்.

**மொழிப்பொது வாராய்ச்சி**

மொழி யாராய்ச்சியோடு நெருங்கிய தொடர்புடைய வேறு சில ஆராய்ச்சிகளை இப்போது நோக்குவோம். முதலாவதாக ஆதிமக்களின் சரித்திரத்தையும் நாகரிகத்தையும் உணர்வதற்கு மூலமொழிகளிலுள்ள சொற்கள் பெரிதும் பயன்படுவனவாகும். சொற்களின் வழியாய் ஆதிநாகரிகத்தை உணர்த்தும் ஆராய்ச்சிக்குத் தொன்மொழி நாகரிக நூல்'[2] என்பதைத் தமிழ்ப் பெயராகக் கொள்ளுதல் தகும். இவ்வாராய்ச்சியில் முக்கியமாகக் கருத்தில் வைக்கவேண்டுவது ஒன்று உண்டு. ஒரு மொழியினத்திற்கும் அதனைப் பேசும் மக்களினத்திற்கும் அந்யோந்ய சம்பந்தம் இல்லை.

**தொன்மொழி நாகரிக— ஆராய்ச்சி**

1. General Linguistics.
2. Linguistic Palaeontology.

உதாரணமாக இந்தோ-ஐரோப்பிய மொழியைப் பேசுவோர் எல்லாரும் ஆரியர் என்றாவது ஆரியரெல்லாரும் இந்தோ-ஐரோப்பிய மொழியைப் பேசுபவ ரென்றாவது கொள்ளுதல் கூடாது. இதை மாறாக உணர்வது போன்ற பிழைகளாலும், மனோபாவனையை அளவுகடந்து செல்ல விடுதலாலும் பல விநோத முடிவுகளை ஆராய்ச்சியாளர் கொண்டதுண்டு. எனவே இவ்வாராய்ச்சியில் தலையிடுவோர் அதற்குரிய நியமங்களை யெல்லாம் செவ்விதாக உணர்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கூறத்தக்கவை மொழியாராய்ச்சியின் சரிதங்களாம். இது மொழியாராய்ச்சி யாளர்களின் சரிதத்தைக் கூறுவதோடு மொழியாராய்ச்சி முறைகள் எவ்வாறு நாளடைவில் திருத்தமெய்தின என்பதையும் விளக்குதல் வேண்டும். இவ்வாராய்ச்சியை 'மொழியாராய்ச்சிச் சரிதம்'[1] என்று கூறலாம்.

மொழியாராய்ச்சிச் சரிதம்

மூன்றாவதாக ஒவ்வொரு மொழியிலும் பற்பல காலங்களில் தோன்றிய இலக்கணங்களின் சரிதங்களையும் இலக்கணக் கொள்கைகளின் சரிதத்தையும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். இதனை 'மொழி யிலக்கணச் சரிதம்'[2] என்று கூறலாம்.

இலக்கணச் சரிதம்

நான்காவதாக ஒவ்வொரு மொழிக்குமுரிய எழுத்துக்களின் வரலாறு பற்றி ஆராய்ச்சி நிகழ்தல்வேண்டும்.

---

1. History of Linguistics.
2. History of Grammar.

இவ்வாராய்ச்சிக்கு ஏடு முதலியவற்றில் எழுதி வைத்துள்ள பிரதிகளையும் சிலாலிகிதம் முதலியவற்றையும் கற்றல் பெரும்பயன் அளிப்பதாகும். இவை எழுத்துக்களின் பிற்காலச் சரித்திரத்தை உணர்த்துவதோடு இலக்கியங்களிற் பாட நிர்ணய ஆராய்ச்சிக்கும் உதவுவனவாகும். இவ்வகை ஆராய்ச்சியைத் 'தொல்லெழுத் தாராய்ச்சி'[3] யென்று கூறலாம்.

தொல்லெழுத் தாராய்ச்சி

3. Palaeography.

# 8. பலவகை இலக்கணங்களின் அவசியம்

ஏதேனும் ஓர் நூலைக் கற்க எடுத்துக்கொண்டால், அதில் இரண்டு அம்சங்களைக் காணலாம். ஒன்று சொற்களின் பொருள்; இதனை அகராதி அம்சம் என்று வழங்கலாம். மற்றொன்று சொற்களுக்கிடையே உள்ள தொடர்பும், கருத்து முடிபும். இதனை வாக்கிய அம்சம் என்று கூறலாம். ஒரு செய்யுளை எடுத்துக் கொள்வோம்.

**ஊனேறு செல்வந்து உடல்பிறவி யான் வேண்டேன்**
**ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்**
**கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்துக்**
**கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே**

இந்தச் செய்யுளில் ஊன் முதலிய சொற்களுக்குரிய பொருளைத் தெரிந்துகொள்வது அகராதி அம்சம். செல்வத்து, உடற்பிறவி, இவற்றில் காணும் சாரியை சந்தி முதலியவை இலக்கண அம்சம். ‘பிறவி வேண்டேன்,’ ‘ஆனேறேழ் முதலியவற்றை உடைய திருமாலுக்கு அடிமைத்தனம் மட்டும்தான் வேண்டும்’ என அறிவது வாக்கிய அம்சம். சாரியை, சந்தி, வாக்கிய அமைதி, தொடர், தொடர்களின் அமைதி முதலியவற்றைத் தெரிந்துகொள்வது இலக்கண அம்சம்.

இலக்கண அம்சம் தெரியாதபடி ஒரு நூலையும் வாசிக்க முடியாது. இந்த அவசியம் தமிழ் நூல்களில் அத்துணைத் தெளிவாகத் தோன்றாது. ஏனென்றால், அது வழக்கில் இருக்கும் மொழி; தினந்தோறும் நாம் பேசி வருகிற மொழி; ஆகவே, இலக்கணத்தைக் கற்று

விட்டுத்தான் படிப்பது என்பது அத்தனை அவசியமாக மாட்டாது.

ஆனால், அந்நிய மொழி நூல்களையோ, இறந்து போய்விட்ட 'கிரேக்,' 'லத்தீன்' முதலியவற்றில் உள்ள நூல்களையோ கற்பதாயின், நாம் இலக்கண அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் செய்யுளின் பொருள் வெளிப்படையாகும். சொற்களின் பொருளை அகராதி முதலியவற்றை வைத்துத் தெரிந்து கொள்ளலாம். நமக்கும், பேச்சு வழக்கில் உள்ள மொழிக்கும் இலக்கண அறிவு முக்கியமானது என்பது ஊன்றி நோக்கினால் தெரியும்.

உதாரணமாக, 'அரசு களைகட்ட' என்ற தொடரை 'அரசு களைக்கட்ட' என்று ஒருவன் எழுதிவிடுவானானால், பொருளே முற்றும் மாறிவிடும். 'அரசுகளைகட்ட' என்பது 'அரசர்கள் ஆகிய களையைப்பிடுங்கி எறிந்த' என்று பொருள் ஆகும். களைபிடுங்குதலைத்தான் களைகட்ட என்று சொல்வது. 'பைங்கூழ் களைகட்டதனோடு நேர்' என்ற திருக்குறள் பகுதியின் (550) உரையை நோக்கினால் நான் சொல்லும் கருத்து நன்கு விளங்கும்.

'அரசுகளைக் கட்ட' என்ற வாக்கியத்திற்கு 'அரசர்களை (கயிற்றினால்) ஒன்றாகக் கட்டிவிட' என்று பொருளாகும். இலக்கண அறிவு இல்லாமல் போனால், இந்த வேறுபாட்டைக் கண்டு கொள்ளுதல் அருமை. ஆகவே, இலக்கண அம்சமும், அகராதி அம்சமும் இன்றியமையாதவையாகும். அகராதி மட்டும் துணைக்கொண்டு ஒரு நூலை நன்றாகக் கற்றுவிடுதல் ஓர் அளவு அருமையானது என்றே சொல்லவேண்டும். அதுபோலவே, இலக்கண அறிவை மட்டும் வைத்துக்கொண்டு, நூல்களைத் தெரிந்த

தாகப் பாவித்தல் சரியன்று. இதை நன்குக ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

நமது முன்னோர்கள் இதன் அவசியத்தை உணர்ந்து நிகண்டுகளும் இலக்கணமும் இயற்றிவைத்தனர். இப்போதுள்ள நிகண்டுகளில் மிகப் பழமையானது திவாகரர் என்பவர் இயற்றின நிகண்டாம். இப்போது கிடைக்கும் இலக்கண நூல்களுள் மிகப் பழையது தொல்காப்பியம் என்றே சொல்லவேண்டும். அகத்தியம் தொல்காப்பியத்திற்கு முற்பட்டது என்று கொள்ளுவதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், நமது அறிஞர்களில் சிலர் அதற்கு முன்பு இலக்கணம் இருந்ததென்று, இலக்கணத்தின் தொன்மையைக் காட்டுவதற்குச் சில சில கூறுவார்கள். குமரம் முதலியன கண்டும் கேட்டும் அறியா இலக்கணங்கள் இதற்குச் சான்று.

இலக்கணம கூறுவது என்பது வடமொழிச் சொல்லாகிய 'லக்ஷணம்' என்பதன் பிராகிருதச் சிதைவு. இச்சொல்லைத் தன்மை, இயல்பு என்ற பொதுப் பொருளிலும், இலக்கணம் என்ற நூற்பகுதியின் பெயராகவும் வழங்கி வருகின்றோம். வடமொழியில் நாம் கருதும் இலக்கணத்தை லக்ஷணம் என்று சொல்வதில்லை; வியாகரணம், சப்த சாஸ்திரம் என்பர்.

இலக்கணம் அதன் ஆசிரியன் வாழ்ந்த காலத்திற்கும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் வகைப்படுத்திக் கூற முயல்வதாகும். ஆகவே, நூல்கள் பலவாக வெளிவந்ததன்பின்னரே இலக்கணமும் தோன்றுதல் கூடும். இக்கருத்தை உட்கொண்டே,

> எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
> இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்

என்று கூறுவது.

தமிழில் பிரசித்திமாக வழங்கும் இலக்கணங்கள் தொல்காப்பியமும் நன்னூலுமாம். நன்னூலின் காலம் கி.பி. 13-ம் நூற்றாண்டின் கடைசி பகுதி என்று முடிவு கட்டுவதற்குப் புறச் சான்றுகள் உள்ளன. ஆனால், தொல்காப்பியத்தின் காலத்தைத் துணிவதற்கு அகச் சான்றுகளையே நாம் மதிப்பிடவேண்டியதாய் உள்ளது. வடமொழியில் பிரசித்தமான பாணினியத்திற்குப் பிந்தியது; பதஞ்சலி முனிவர் காலத்திற்கும் பிந்தியது (கி.மு. 150); பரத நாட்டிய சாஸ்திரத்திற்கும் பிந்தியது (கி.பி. 4 அல்லது 5ம் நூற்றாண்டு). கி.பி. 5-ம் நூற்றாண்டில் தொல்காப்பியம் தோன்றியது என்று கொள்ளுதல் பிற சான்றுகள் கிடைக்கும் வரை உண்மையெனக் கொள்ள லாம்.

வடமொழியில் பாணினி முனிவர் கி.மு. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் தமது பாணினியம் என்ற இலக்கணத்தை இயற்றினார் என்பர். இதுவும் வேதம் முதலிய வடமொழி நூல்கள் செழித்து வளர்ந்த பின்னரே தோன்றியதாம். சிவபெருமான் உடுக்கையி னின்றும் தோன்றியது என்ற கதை இதன் தொன்மையை ஒருவாறு விளக்கலாம், எனவே, நன்றாக இலக்கியங்களைக் கற்று, உலக வழக்கில் இருக்கும் மொழியை நன்கு தெரிந்த பின்னர் எழுதுவதுதான் இலக்கணமாகச் சிறந்து இருக்கும்.

நூல்கள் காலத்திற்குக் காலம் அதிகப்பட்டுக்கொண் டும் வரும்; அப்படியே மொழியின் வளர்ச்சியும் வேறு பட்டுக்கொண்டே வரும். இவ்விரண்டினையும் உட்படுத்தி இலக்கணம் அப்போதைக்கப்போது புதிதாக இயற்று வதுதான் நலம். கால வேறுபாட்டைத் தவிர, தேச வேறு பாடும் இலக்கணத்தை வேறுபடுத்தும். திருநெல்வேலி யில் உள்ள வழக்கு, மற்ற இடங்களில் காணப்படாமல்

போகலாம். அப்படியே தஞ்சாவூர்ப் பிரதேசத்தில் வழங்கும் வழக்கு திருநெல்வேலிப் பிரதேசத்தில் காணப்படாமலும் போகலாம், அந்தந்த இடத்துக்குரிய பிராதேசிய இலக்கணங்களும் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

பண்டைத் தமிழ் இலக்கணங்களைத் தவிர, தற்காலத்துக்குரிய இலக்கணம் நம் நாட்டவரால் இன்னும் எழுதப்படவில்லை. பண்டித வர்க்கத்தினர் தொல்காப்பியர் கூறியுள்ள வழக்குத்தான் எக்காலத்தும் இருத்தல் வேண்டும் என்று வாதிப்பர். இவ்வாறு வாதிப்பவர்கள் நன்னூலில் காணும் வேறுபாடுகளுக்குச் சமாதானம் கூறும் கடமையுடையவர்கள்.

தற்காலத்தில் எத்தனையோ புதிய வழக்கு. நாம் பேசி வரும் பேச்சுக்களிலும், பத்திரிகைகளிலும், நூல்களிலும் வழங்கிவரும் மரபுகளைத் தொகுத்துக் கொடுத்து இலக்கணம் வரைதல் அவசியம் அல்லவா?

ஜி. யு. போப் என்ற ஆசிரியரும், அவருக்கு முன்பாக ஒரு சில ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும், போர்த்துகீஸியரும் தற்கால இலக்கணம் செய்ய முயன்றனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு எழுதும் இலக்கணம் தான் மிகச் சிறந்ததாக இருக்கும். ஆனால் அடிக்கடி அந்நிய மொழி இலக்கணங்களை ஒப்பு நோக்கிக் கொள்ளுதல் வேண்டும். நமது தாய்மொழியோடு நெருங்கிய தொடர்புள்ள கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியனவற்றின் இலக்கணங்களையேனும் கற்க வேண்டும்.

இங்ஙனம் இயற்றப்பட்ட தற்காலத் தமிழ் இலக்கணத்தோடு அமைந்துவிடாமல், பூர்வ காலம்தொட்டு, இன்றுவரை உள்ள இலக்கியங்களை எல்லாம் நன்கு கற்று, அவற்றைச் சங்க காலம், பக்தி நூற்காலம் முத

லிய பகுதிகளாகப் பிரித்து, அவ்வக் காலத்திற்குரிய இலக்கணங்களை இயற்றுதல் மிக அவசியமாம்.

மொழியானது எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்பது இதனால் புலனாகும். அந்நிய மொழிகளுக்கு உரிய இயல்பைத் தமிழ் இலக்கணத்தில் ஏற்றுதல் கூடாது. இலக்கணமும் எவ்வாறு வளர்ந்து வந்திருக் கிறது என்பதை நாம் அறிந்து. அவற்றிலே காணும் கொள்கைகள் எவ்வளவு தமிழில் பொருந்துவன, எவ் வளவு நீக்கத்தக்கன என்று நாம் வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும்.

இலக்கணத்தின் வரலாறும் நாம் ஆழ்ந்து கற் றுணரத் தக்கது. இலக்கண நூல், முற்காலத்திலும் தற்காலத்திலும் வழங்கிய வழக்குக்களைத் தனித்தனியாகக் கூறுவதும் (Descriptive Grammar) இவ்வகை இலக்கணங் களைத் தொகுத்துச் சரித்திர நோக்கில் அகப்படுத்தி, வரலாற்று இலக்கணம் அமைப்பதும், இன்றியமையாத செயல்களாம்.

# 9. வரலாற்று இலக்கணம்

**வரலாற்று** இலக்கணம் என்பது இரண்டு வகையாகப் பொருள் படுதல் அறிஞர் அறிந்ததே. ஒன்று, தமிழ் மொழியின் வரலாற்றை நிர்ணயித்து, அந்த நிர்ணயத்திற்குத் தக்கபடி காலந்தோறும் உள்ள மொழிமாற்றத்தைக் கவனித்து, காலப்படி இலக்கணங்களை அமைத்தல். இதை ஆங்கிலத்தில் (Historical Grammar) என்று சொல்வார்கள். மற்றொரு பொருள், இதுகாறும் தோன்றிய இலக்கணங்களைக் காலமுறைப்படி எடுத்துக் கொண்டு, அவற்றின் சரித்திரத்தை ஆராய்தல். இதை 'இலக்கண வரலாறு' (History of Grammar) என்று சொல்லலாம். இவ்விருவகையான வரலாற்று இலக்கணங்களையும் ஆராய்ந்து அறிய வேண்டுவது நமது கடமை. டாக்டர் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் இரண்டாவது கூறிய வரலாற்று இலக்கணத்தை ஒருவகையாக எழுதியுள்ளார். முதலாவது கூறிய இலக்கணம் இன்று காறும் வெளிவந்ததில்லை.

சில உதாரணங்களால் இரண்டு வரலாறுகளின் தன்மையையும் விளக்க முயல்கிறேன். 'காலம்' நிகழ்காலம் இறந்த காலம், எதிர்காலம் என்று மூவகைப்படும். நிகழ் காலத்திற்குப் பண்டைத் தமிழில் 'வருதும், செல்குதும்' என்ற விகுதிகளைத் தன்மை, பன்மையில் (Terminations) உபயோகித்து வந்தனர். எதிர் காலத்திற்கும் இவற்றைக் கொள்ளுதல் பெரும்பான்மை வழக்காக முடிந்தது. ஆகவே, நிகழ்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் தனித் தனி விகுதிகள் வேண்டப் பட்டன. நிகழ் காலத்திற்கு, கின்று, கிறு என்ற இடைநிலைகளைச் சேர்த்து விகுதி

களைக் கூட்டிச் சொல்லுதல் வழக்கில் புகுந்தது. 'யாம் வருகிறோம்', அல்லது 'வருகின்றோம்' எனச் சொல்லுதல் மரபாயிற்று. கிறு, கின்று என்ற இடைநிலைகள் இடைக் காலத்தில் புகுந்தன என்பது இதனால் விளங்கும். ஆநின்று என்பதும் இப்படியே. இதனால் இந்த இடைநிலைகள் வந்துள்ள நூல்கள் இடைக்காலத்தில் இயற்றப்பட்டவை என்பது உறுதியாம்.

குறளில், "இறை இறைவா நின்றவலை" என்று வந்துள்ளது. உடனே இதனின்று இந்நூல் இடைக்காலத்தில் தோன்றியது என்பது நமக்கு விளக்கமாகும். இறந்த காலத்தில் 'செய்தோம்' எனவும், நிகழ்காலத்தில் 'செய்கிறோம்' எனவும், எதிர்காலத்தில் 'செய்வோம்' எனவும் வருவன பிற்பட்டு எழுந்த இக் கால வேறுபாட்டை நன்றாக நமக்குப் புலப்படுத்துகின்றன.

இனி, சொற்களை எடுத்துக் கொள்வோம். 'ஆனால்' என்ற சொல்லை இப்பொழுது நாம் அடிக்கடி உபயோகப் படுத்துகிறோம். இதன் பிரயோகத்திலும் இரண்டு வகையான நிலை வேறுபாடு காணப்படுகிறது. 'நீ செய்வதானால், நான் செய்யவில்லை' என்பது ஒன்று. 'நீ செய்வேன் என்றாய்; ஆனால், இப்பொழுது மாட்டேன் என்கிறாய்' என்பது மற்றொன்று.

இரண்டாவது கூறியது ஆங்கிலததில் வரும் 'But' என்பதைப் போன்றது. அடியார்க்கு நல்லார் (கி. பி. 14-வது நூற்றாண்டு) இவ்வாறு ஒருமுறை பிரயோகித்துள்ளார். தற்காலத்தில் மிக அதிகமாக இப்படிப் பிரயோகிக்கிறோம். இந்த உதாரணங்களினால் 'ஆனால்' என்பது வாக்கியத்தின் முதலில் 'But' என்ற பொருளில் வருமாயின், அது முற்றும் பிற்பட்ட வழக்கு என்பது நமக்கு விளங்குகிறது.

இன்னும் ஒன்று: 'ஆனல்' என்ற சொல்லே இடைக் காலத்தில் தோன்றியதாகும்; சங்க காலத்தில் இல்லே. இந்தச் சொல் வள்ளுவர் திருக்குறளில் வந்துள்ளது. 'இல்லதென் இல்லவள் மாண்பானல்'—(53) இதனுலும் திருக்குறள் இடைக்காலத்துத் தமிழில் எழுதப்பட்டது என்பது விளக்கமாகும்.

மற்றென்றும் இங்கே கூறவேண்டும்; காலத்திற்குக் காலம் புதுச் சொற்கள் ஒரு மொழியில் பற்பல காரணச் சரிவால் தோன்றிக்கொண்டே யிருக்கும். உதாரணமாக, 'துட்டு' என்ற சொல்லேக் சொல்லலாம். இச்சொல், சிறு நாணயத்திற்கு டச்சுக்காரர் வழங்கிய சொல். அவர்கள் நம் நாட்டாரோடு தொடர்பு கொண்ட சமயத்தில் இச்சொல் நம் மொழியில் புகுந்துவிட்டது. இப்படியே எத்தனேயோ சொற்களேக் காட்டுதல் கூடும். 'மந்திரி' என்ற சொல் இப்பொழுது அரசாங்கத்திலும், நாட்டிலும், மொழியிலும நிலேத்து விட்டது. இது ஒரு காலத்தில் (சங்ககாலத்தில்) நமது மொழியில் இல்லே; இடைக்காலத்தில் புகுந்தது. திருக்குறளில் 'பழுதெண்ணும் மந்திரியில்' என 'மந்திரி' என பது வந்துள்ளது. இங்ஙனமே 'ஆராய்ச்சி' என்ற சொல் லும். இவை யெல்லாம் இந்நூல் இடைக்காலத்தில் தோன்றியது என்பதைப் புலப்படுத்துகின்றன அல்லவா?

பிறிதொரு விஷயமும் கவனிக்கத்தக்கது: ஒரு சொல்லின் பொருள் கால அடைவில் மாறுவதும உண்டு. ஒரு சாதாரண உதாரணம் சொல்கிறேன்: 'நாற்றம்' என்பதைத் தற்காலத்தில் துர்நாற்றத்திற்கே சொல்வது வழக்கம். ஆனல், பண்டைக்காலத்தில் நல்ல வாசனேக்கும் இச்சொல் வழங்கி வந்தது. திருக் குறளில் 'முகை மொக்குகள் உள்ளது நாற்றம்போல்' என வந்துள்ளது.

இவ்வாறே 'நாறுதல்' என்ற சொல்லும் முற்காலத்தில் நல்ல வாசனைக்கு வழங்கிவந்ததாம். 'கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ' (நாச்சியார் திருமொழி) என்ற அழகிய அடிகளில் இந்தப் பொருளைக் காணலாம். இப்படிப்பட்ட பொருள் வேற்றுமைகளினாலும், மொழியின் கால அடைவு நமக்குத் தெரியவரும். ஆகவே, பல காரணங்களினால் மொழியானது காலந்தோறும் மாறிக்கொண்டே செல்லும் இயல்புடையது என்பது மொழி நூல் ஆராய்ச்சியாளர் கண்ட ஓர் உண்மை. இவற்றை எல்லாம் ஆராய்ந்து, தமிழ்ச் சொற்களைத் தெரிந்து எடுத்து, அவற்றோடு ஒத்த தெலுங்குச் சொல், கன்னடச் சொல் முதலியவற்றையும் கண்டு, மூலச்சொல் எது என்பதை முடிவு கட்டி, சொல் வரலாற்றை நிர்ணயித்தல் வேண்டும்.

வாக்கிய அமைதி, சொல்லமைதி இவைகளை நமது ஒப்பு நோக்கு உணர்வினால் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இங்ஙனமாக ஆதிதொடுத்து இன்று வரையுள்ள மொழி வரலாற்றைக் கவனித்து, வரலாற்று இலக்கணம் அமைப்பது முறையாகும். அது மிகவும் இன்றியமையாதது.

இதற்கு ஆங்கில அறிவும் வடமொழி அறிவும் நமக்கு இருக்குமானால் நமது முயற்சி எளிதில் முடியும்.

இனி History of Grammar என்ற இலக்கிய வரலாற்றினை எடுத்துக்கொள்வோம். இதைப்பற்றி முன்னரே ஒரு சிறிது கூறியிருக்கிறேன். மிக மிகப் பழமையானது 'அகத்தியம்' என்பர். அடுத்தபடியாகத் தோன்றியது தொல்காப்பியமாம். இவற்றிற்குச் சற்று முன் பின்னாகப் பல இலக்கண நூல்கள் தோன்றின. அவைகளை எல்லாம் யாப்பருங்கலவிருத்தில் கண்டுகொள்ள

லாம். இவற்றிற்குப் பின்னுல் தோன்றியது 'வீரசோழியம்' என்ற இலக்கணம்.

இது கி. பி. 11-ம் ஆண்டில் வீரசோழன் காலத்தில் இயற்றப்பட்டது. தமிழ் மொழிக்கும் வட மொழிக்கும் உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டி, வட மொழி இலக்கணம் தமிழுக்கும் பொருந்தும் என்று கூறி, வட மொழிக் குறியீடுகளையே 'வீரசோழியம்' அமைத்து விட்டது.

இக்காரணத்திஞல் இதனைப் பலரும் கற்பதில்லை. மொழியின் இயல்புகள் அனைத்தையும் அறிய முயலாத படி, வேறு ஒரு மொழி பற்றிய இலக்கணத்தின் இயல்பினை வைத்துக்கொண்டு இலக்கணம் அமைத்தல் பெரும் பிழை என்பதை இவர் உணரவில்லை என்று தான் தோன்றுகிறது.

இந்நூலுக்குப் பின்னுல் தோன்றியது நன்னூல். இது கி. பி. 13-ம் நூற்ருண்டுவரை உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் இருந்த தமிழை ஆராய்ந்து, நன்ருகச் செய்யப்பட்டதோர் இலக்கணமாகும். இதனைத்தான் தற் காலத்தாரும் கற்று வருவர்.

இந்நூலின் செம்மையை உணர்ந்த நமது மக்கள் பின் தோன்றிய இலக்கணங்களை அறவே மறந்துவிட்ட னர். அங்ஙனம் தோன்றிய இலக்கணங்களும் தலைஎடுத்து நிற்கும் ஆற்றல் இல்லாதவையாய் ஒழிந்துவிட்டன.

இறுதியில் ஆங்கிலேயர் முதலிய அந்நியர்கள் தொடர்பு கொண்டதன் பின்னர் ஏற்பட்ட இலக்கணங் களே. நன்னூலைக் கற்கமாட்டாதவர்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. தற்காலத்திற்குரிய சிறந்த இலக்கணம் இனித்தான் வெளிவரவேண்டும் என்று நான் முன் கூறியது கவனத்தில் வைத்துக்கொள்ளத்தக்கது.

# 10. தத்துவ சாஸ்திரமும் இலக்கணமும்

இலக்கணம் நமது நாட்டிற்கு மட்டும் உரிய ஒரு தனிச் சொத்து அல்ல. கிரேக்க இலக்கணம், லத்தீன் இலக்கணம், ஆங்கில இலக்கணம், இன்னும் பிற மொழிகளைப் பற்றிய இலக்கணங்கள் எல்லாம் பலவாய் உள்ளன. நம் நாட்டு ஆசிரியர்களைப் போலவே மேலைநாட்டு ஆசிரியர்களும் இலக்கணத்துக்கும் தத்துவத்திற்கும் ஒற்றுமை காணத் தொடங்கினர். அதனால் விளைந்த அனர்த்தங்கள் மிகப் பல. மொழி உணர்ச்சி என்பது அறவே கைவிடப்பட்டு, தத்துவ சாஸ்திர உண்மைகளைப் பற்றிப் போராட்டம் செய்யலாயினர். நமது நாட்டில் ஒருவர், "தமிழ் என்பது மூன்று எழுத்தினால் ஆகியது; ஏன்?" என்று கேள்வி கேட்கத் தொடங்கினார். "ஒருவர் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்றும் இருத்தலாலே தமிழ் என்ற பெயர் ஏற்புடைத்தாயிற்று" என்றார். வேறொருவர், "மகாரத்திலிருந்து தமிழ் மொழியெல்லாம் தோன்றியது" என்ற அபூர்வ முடிவைக் கொண்டனர். இன்னும் ஒருவர், "தமிழ் என்பது மூன்று எழுத்தினால் ஆக்கப்பட்டது. ஏன் என்றால் உலகத்தில் நிறம் மூன்று, குணம் மூனறு—இவை போன்ற காரணங்களால்..." என்றனர். இவரே, "சூரிய வெப்பத்தினால் நில உலகில் உயிர் வர்க்கங்களும் பிற சக்திகளும் தோன்றியுள்ளன. இந்தச் சக்திகளில் ஒன்று சொல்லைக் குறித்தது. ஆதலால் சூரிய வெப்பத்தினின்றே தமிழ் பிறந்தது. சூரியனுக்குச் 'சொல்' (Solar) என்ற பெயர் உண்டு. தமிழ்ச் சொற்களுக்கு எல்லாம் மூலம் 'சுல்தான்' என்ற அதி விநோத அற்புத முடிவைக் கூறினர். இவர்

எழுதின நூலுக்கு முன்னுரை எழுதியவர் ஓர் ஆங்கிலம் வல்ல தமிழ்ப் பேராசிரியர்!

'ஓம்' என்பது பிரணவத்தின் அறிகுறி. இதைக் குறித்து எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் இதன் பொருள் பற்றியே ஒரு நூல் வெளிவந்தது. இன்னும் பல நூல்கள் வெளிவரக் கூடியனவே; என்றாலும், இதன் பொருளை உள்ளபடி உணர்ந்தவர்கள் மிகச் சிலரேயாம். பெரும்பாலோர் மேலெழுந்தவாரியாக 'இது பிரணவம்' என்று சொல்லி அமைந்துவிடுவார்கள். எத்தனை காலம் சென்றாலும், எத்தனை பேர் முயன்றாலும், இதன் உண்மை ரகசியத்தை அறிய முடியாது. யாரேனும் சிலர், ஏதேனும் சொன்னால் அது உண்மையா என்று தெளிவதற்குக்கூட மார்க்கமில்லாமல் இருக்கிறது.

திருமூலர் முதலிய பெரியோர்கள் இதன் பொருளை உண்மையில் உணர்ந்தவர்கள் என்று சைவ மதத்தைச் சார்ந்தவர் அனைவரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். இறைவன் 'பிரணவ சுவரூபி' என்றும், இறைவனோடு ஒத்த மகத்துவமுள்ளது 'ஓம்' என்றும் கருதுகின்றனர். இறைவனிடத்தே உலக முழுவதும் அடங்கியுள்ளது போல 'ஓம்' என்ற பிரணவத்திலும் சராசரம் அடங்கலும் அடங்கியுள்ளது என்பர். மக்கள் பேசிவரும் மொழி சராசரத்தில் அடங்கிதுதானே? ஆகவே, தமிழ் மொழியும் இதிலிருந்து தோன்றியது என்று பல தெளிந்த ஞானிகள் சொல்லி வருகிறார்கள்.

இவ்வளவு பரிசுத்தமான அருள் நிலையில் தமிழ் தோன்றியது என்றால், அதன் பெருமையைப் பற்றிக் கேட்பானேன்! தமிழும் தூய தமிழ்தான்; சச்சிதானந்த மயம்தான். அதனைப பேசும் தமிழ் மக்களும் உலகத்திற்

சிறந்தவர்களே. இதுபோன்ற ஒரு முடிவு நமக்கு எத்துணைப் பெருமை யளிக்கின்றது பாருங்கள்!

நவின ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் இதுபற்றி மிக விரிவாக ஆராய்ந்தார். 'ஓம்' என்பதும் 'அ' என்ற எழுத்தும் கர்ப்ப பாத்திரத்தில் கருக்கள் மடங்கிச் சுருண்டு கிடக்கும் நிலையில் அமைந்து கிடக்கின்றன என்ற ஓர் அரிய முடிவிற்கு வந்தார். 'ஓம்' என்ற பிரணவத்திலிருந்து உயிர்களெல்லாம் தோன்றின என்பதற்கு இதைக் காட்டிலும் சிறந்த சான்று இருக்க முடியுமா? இந்நூலை The Mystic Nature of the Tamil Alphabet என்ற அருமைப் பெயருடன் அவர் வெளியிட்டுள்ளார்.

இனி, அகாரத்தைக் குறித்து எழுதப்பட்ட புஸ்தகங்களுக்கும், கொண்ட கொள்கைகளுக்கும் கணக்குவழக்கே இல்லை. தமிழ் எழுத்துக்களில் மற்ற எல்லா எழுத்துக்களும் அகாரத்தினின்றும் பிறந்தவையே என்று கூறி மகிழ்வர் சிலர். இன்னும் சிலருக்கு அகாரமும் ஓங்காரமும் ஒன்றுதான் என்று தோன்றிவிட்டது. ஆதலால், உலகத்தோற்றமே அகாரத்தினின்று எழுந்தது எனக் கருதலாயினர். இவ்வாறான கொள்கைகள் எல்லாம் நமது நாட்டுத் தத்துவ சாஸ்திரம், மந்திர சாஸ்திரம் முதலியவற்றின் கருத்துக்களை அமைத்துக் கொண்டனவாம்.

இலக்கண ஆசிரியர்கள் இவற்றை எளிதில் கைவிடுவார்களா? அவர்களும் எல்லா எழுத்துக்களும் அகாரத்தினின்றே பிறந்தனவென்று துணிந்தனர். இந்த முடிவை ஆதரித்து மேற்கூறிய நூலின் (The Mystic Nature of the Tamil Alphabet) 'அ' என்ற எழுத்தைக் கத்திரி கொண்டு 'துணுக்குத் துணுக்காக வெட்டி, அவற்றை வெவ்வேறு வகையில் ஒட்டி, மற்றைய எழுத்துக்களெல்லாம் அமைந்துள்ளன என்பதைக் காட்டுகிறார்.

வள்ளுவர்கூட இந்தக் கொள்கையைக் கைவிட்டவ ரல்ல. 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்ற குறளில் இது காணப்படும். இக் குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகரும் இதனை இவ்வாறே விளக்கியுள்ளார். இதற்குப் பலரும் எழுதியுள்ள விரிவுரைகளைச் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் மிகுதியாகக் காணலாம். வள்ளுவர் உபமானமாகக் கூறியது ஒன்றில் தத்துவங்களைப் புகவிட்டு அணுவைத் துளைத்து அதில் ஏழு கடலைப் புகுத்திவிட்டார்கள். ஓர் ஆங்கில விளம்பரத்தில், 'A' leads the world of Alphabets, Athanga Nigraha pill leads the world of medicines என்று காணப்படுகிறது. இக் கொள்கைகள் நம்மை எவ்வளவு தூரம் கொண்டு வந்து சேர்த்துவிடும் என்பதைக் காட்டுகின்றது.

இவைபோன்ற இலக்கணம் பற்றிய கொள்கைகள் பெரும்பாலும் வடமொழியிலிருந்தே நமக்குக் கிடைத்த செல்வங்கள். எதையும் வடமொழியில் சொல்லிவிட்டால், அதற்கென்று ஒரு தனிப் பெருமை ஏற்பட்டுவிடுகிறது அதனுடைய சப்த ஜாலங்கள் நம் அறிவை மயக்கிவிடுகின்றன. நம்முடைய பூர்வ அனுஷ்டானங்களும் கொள்கைகளும் அவற்றை ஒப்புக்கொள்வதில் நம் மனத்தை இழுத்துச் செல்லுகின்றன. தெரியாதவற்றில் என்ன புதுமையுள்ளதோ என்ற உணர்ச்சியும் ஒரு பக்கத்தில் சங்கிலித் தொடர்போல் நம் மனத்தைப் பிணிக்கின்றது. ஆகவே, பற்பல காரணங்களினால் வடமொழியின் அற்புத வசீகரத்துவம் நம்மை ஒரு பெரிய மாயச்சுழலில் செலுத்தி விடுகிறது.

தமிழ் நாட்டில் இருப்பது போலவே பல நூற்றாண்டுகட்கு முன்னர், மேலைத் தேசங்களிலும் இலக்கணத்தில்

தத்துவ சாஸ்திரக் கொள்கைகள் அதிக்கிரமித்துப் புகுந்து, இலக்கண நெறியை உள்ளபடி காணவொட்டாது தடை செய்தன.

முதன் முதலாக இவ் வகை அதிக்கிரமம் ஏற்பட்டது கிரீஸ் தேசத்தில், கிரேக்க மொழியைப் பற்றி. பின்னர் லத்தீன் மொழியைப் பற்றி ரோம் ஜாதியார் இவ்வகை யாராய்ச்சியில் தலையிட்டனர். கிரேக்கர்களுக்கு ஒப்பாக நமது ஆசிரியர்களையும் ரோம் ஜாதியார்க்கு ஒப்பாக நமது தமிழ் நாட்டினரையும் கூறுதல் ஒருவாறு பொருந்தும். கிரேக்கர்கள் அறிவிலே திளைத்து வந்தவர்கள். தத்துவ சாஸ்திரம் முதலிய ஆராய்ச்சி விஷயங்களில் பல நூற்றாண்டுகளாக உழைத்து வந்தவர்கள். இவர்களைப் போன்றவர்களே பண்டை ஆரியர்கள்.

ரோம் ஜாதியினர் ஆட்சித் திறமையிலும், தொழில் திறமையிலும் கைதேர்ந்தவர்கள். இவர்களைப் போன்றவர்கள் நம் தமிழ் மூதாதையர். தத்துவ சாஸ்திர விஷயங்களை அக்காலத்தில் ஆரியர்களிடமிருந்து பண்டைத் தமிழர்கள் தெரிந்துகொண்டார்கள் என்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. முதன் முதலில் இப்பிரச்னையைத் தொடங்கியவர் பீட்டர் கீளியஸ் (Pelter Heelas). இவர் அலெக்ஸாண்டருக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தவர். பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராய்ப் போதித்து வந்தார். பிரஸியன் என்பவர் எழுதிய இலக்கணத்திற்குத் தத்துவ ஆதாரங்கள் கண்டு பிடிக்க முயன்று அதற்கு ஓர் உரை வகுத்தார்.

இதில் பீட்டருடைய கருத்துக்களுக்குப் புறம்பாகவே பல இலக்கணக் கொள்கைகள் தலையெடுக்கத் தொடங்கின. அவரே எத்தனை மொழிகள் உள்ளனவோ, அத்

தனி வகையான இலக்கண நெறிகளும் உள்ளன என்பதை ஒப்புகொண்டார். ஆனால், இதற்குப் பின் வந்த ஆசிரியர்கள் ஒரேவகையான இலக்கணமே உலக மொழிகள் அனைத்திற்கும் உள்ளன என்று கற்பித்தார்கள். இந்தப் புது இலக்கணத்தைத் தெரிவதுதான் தத்துவ சாஸ்திரிகளின் ஒரு வேலை என்று இவர்கள் கருதினார்கள்.

இப்படிச் சொல்வதற்கு முக்கிய காரணம், இயற்கையமைப்பு ஒன்றாக இருந்ததும், மக்களுடைய தர்க்கநெறி ஒன்றாய் இருப்பதுமேயாகும். இலக்கண விதிகளைக் கண்டு பிடிக்க வேண்டியவன் வியாகரணன் அல்ல; தத்துவ சாஸ்திரியே என்று இவர்கள் பூரணமாக நம்பினர்.

பிற்பட்ட லத்தீன் இலக்கணக்காரர்கள், தெளிந்த சில இலக்கிய நூல்களைக் கற்று, அதன் அடிப்படையில் இலக்கணங்களை அமைக்க வேண்டுமென்றனர். சொல் வகைகளும், இலக்கண விதிகளும் இந்த நிலையில் சேகரிக்கப்பட்டன. இவைகளை நூல் உதாரணங்கள் காட்டி, அத்துடன் அமைத்துவிட்டார்கள். இதுதான் சரியான முறையென்பது தற்காலத்தவர்களுக்கும் உடன்பாடே. ஆனால், தத்துவ இலக்கணக்காரர்கள் இதனால் திருப்தியடையவில்லை. பிரிஸியன் எழுதிய இலக்கணத்தைக் கண்டனம் செய்து, இலக்கணத்தைத் தர்க்க நூல் நெறியிலே அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதாவது, இலக்கண விதிகளை மொழி பற்றிய அடிப்படையில் அமைக்க வேண்டாமென்றும், கருத்து நிகழ்விதிகளுக்கும், இயற்கையின் தன்மைக்கும் பொருந்தும்படி அமைக்க வேண்டுமென்றும் கூறினர்.

முதலில் தர்க்க நூல் நெறியின் படி அடங்காமல், இலக்கண விதிகள் இருக்குமானால் அவ் விதிகளைத் தங்க

ளுடைய அறிவுத் திறம் கொண்டு, தத்துவ ஆராய்ச்சி கொண்டு, மாற்றுவதற்குத் தாங்களே அதிகாரிகள் என்றனர். இவ்வாறு செய்து வந்த ஆராய்ச்சியால் நிகழ்ந்த விளைவுகள் பலவும் அதிவிநோதமாக உள்ளன.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

———

Univ. Grants Commission.

794
O31: 6M F85
J6.

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI